
Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 15 வெள்ளி - 44 31 - 06 - சனவரி - 2005



# சோகத்தில் மூழ்கிய தேசம்

## சுட்டு விரலை காட்டுவதை விட உதவிக்கரம் நீட்டுவதே மேல்.



நாட்டுக் கூத்திலே பிரவேசித்து சிறந்த நாட்டுக்கூத்து கலைஞனாக பிரசித்தி பெற்றாலும் அவருடைய உள்ளத்தில் பாரம்பரிய கலைகள் அத்தனையும் பாதுகாக்க வேண்டும் என்ற அவா வேரூன்றி இருக்கின்றது. இதனால்தான் இன்று பாரம்பரிய கலைகளின் பாதுகாவலனாகத் திகழ்கின்றார்.

கூத்தினை புதுக்குடியிருப்பு சுப்பிரமணியம் அண்ணாவியாரிடம் முறையாகப்பயின்றவர். இவருடைய பாத்திரப்பொருத்தமும், துரிதமான ஆடலும் மக்களைக்கவர்ந்ததினால் பல பாராட்டுக்களைப் பெற்றவர். இவருடைய ஆட்டத்திறமையை வேழம்படுத்த வீராங்கனை நாட்டுக்கூத்தில் வன்னி மகாராசன் சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் சத்தியவானாக நடித்த பொழுது ரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றார். வள்ளி திருமணம் இசைநாடகத்தில் விருத்தன் பாத்திரத்தை ஏற்று நடித்து வருகிறார். இப்பாத்திரம் இவருக்குப் பெரும்புகழ் ஈட்டிக்கொடுத்தது.

நாட்டார் இசைப்பாடகனாகப் பார்க்கின்ற பொழுது நாட்டார் பாடல்களில் பிரசித்தி பெற்ற இடங்களில் வன்னிப்பகுதியும் ஒன்றாகும். இவர் வன்னிப்பகுதி நாட்டார் பாடல்களைத் தொகுத்து 1980ஆம் ஆண்டு வன்னிவள நாட்டார் பாடல் என்னும் நூலை வெளியிட்டார். அத்துடன் பாடல்களையும் பாடி வருகிறார்.

கிராமியக்கலை ஆடல் வல்லோனாக பார்க்கின்ற பொழுது தமிழ் மக்களின் கிராமியக்கலை வடிவங்களான கரகம்,காவடி, குதிரையாட்டம், மயிலாட்டம், கோலாட்டம், கும்மி,ஒயிலாட்டம் என்பவற்றில் பெரும்பான்மையான ஆட்டங்களை கலைஞர் பயின்று ஆற்றுகை செய்துள்ளார். மரபு வழுவாத ஆட்டமுறைகளில் மிகவும் கவனம் கொண்ட இவர் மரபு அல்லாத ஆட்டமுறைகள் இக் கலைவடிவங்களில் புகுத்தப்படுவதை வெறுப்பார்.

## கலாபூசணம் செல்லையா மெற்றாஸ்மயில்

கூத்து- இசைநாடக தயாரிப்பாளனாக நோக்கும் பொழுது கண்ணகி வழக்குரை நாட்டுக் கூத்தினைத் தயாரித்தார். அதன் பின் காத்தவராயன் கூத்து, வேழம்படுத்த வீராங்கனைக் கூத்து, வள்ளுவர் வாக்கு, இசைநாடகம் சத்தியவான் சாவித்திரி இசைநாடகம், வ்ள்ளிதிருமணம் இசைநாடகம், முதலியவற்றைத்தயாரித்தார். மிகவும் சிறப்பான விடயம் எதுவெனில் பாத்திரத்தின் தன்மைக்கேற்ற உடல் அமைப்பு- குரல்வளம்-ஆட்டத்திறன்-பாத்திரத்தின் பாவனை என்பவற்றைக் கருத்திற்கொண்டு அனைத்துப்பாத்திரங்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இதனால் இவர் சிறந்த தயாரிப்பாளராக மக்கள் மத்தியில் திகழ்ந்தார்.

சிறந்த நூல் வெளியீட்டாளர். அவர் வெளியிட்ட நூல்களாக வன்னிவள நாட்டார் பாடல் (1981), ஆனையை அடக்கிய அரியாத்தை (1993), இசைநாடக மூத்த கலைஞர் வரலாறு (1999), மண்வாசனையில் மூன்று நாடகங்கள் (2000), மரபுவழி இசைநாடகங்கள் ஒன்பது (2001), சம்பூர்ண அரிச்சந்திரன் நாட்டுக்கூத்து (2004) இவரது இரண்டு நூல்கள் வடக்குக்கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய பரிசினையும் ஒரு நூல் மத்திய கலாசார அமைச்சின் கலைக்கழக சாகித்தியப் பரிசினையும் பெற்றுள்ளன.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் அமைத்து இசைநாடக நாட்டுக்கூத்து கிராமியக்கலைப்போட்டிகளை நடத்தி பரிசுகளையும், ஊக்குவிப்புப் பரிசுகளையும் வழங்குவதினால் இற்றை வரை 500இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் இப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார்கள். பல இளம் கலைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இவர் வேறும் பல நிறுவனங்களும் இவ்வாறான முயற்சிகளை எடுப்பதற்கு ஊக்குவிப்பாளனாக இருந்து வருகிறார்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் பொது நிகழ்வில் கிராமிய கலை நிகழ்வுகள் இடம்பெறுவது வழக்கமாகி விட்டது.

பாரம்பரிய கலைகளை வளர்க்க முன்வரும் கலைஞர்களையும் நிறுவனங்களையும் இவர் நேரடியாகச் சந்தித்து அவர்களுக்கு ஊக்கமளித்து அவர்கள் மூலம் இக்கலையை பாதுகாக்க, பேண, ஆவணப்படுத்த மேலும் பல முயற்சிகள் எடுத்துவருகிறார். இவர் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் செயலாளராக இருந்து 1998ஆம் ஆண்டிலும், 2002ஆம் ஆண்டிலும், 2003ஆம் ஆண்டிலும் 62 மூத்த கலைஞர்களுக்கு கிரீடம் அணிவித்து பொன்னாடை போர்த்து கௌரவித்துள்ளார். மூன்று ஆண்டு விழாக்களிலும் சுமார் 5இலட்சம் ரூபா பணப்பரிசு வழங்கி கலைஞர்களை ஊக்குவிக்கவும் உந்து சக்தியாக விளங்கியுள்ளார். இதனால் பாரம்பரிய கலைகளை இளைஞர் பயின்று ஆற்றுகை செய்து கலைவளர்க்கவும் காவலனாகவும் உள்ளார்.

இவர் பாடசாலையில் படிக்கும் பொழுதிலிருந்தே எழுத்துத்துறையில் ஈடுபட்டு கட்டுரை, நாடகம், கதை என்பவற்றை எழுதியவர். இற்றைவரை பண்பாடு, சமயம், இலக்கியம் சார்பான கட்டுரைகளாக ஐம்பதுக்கு மேல் பத்திரிகையிலும், சஞ்சிகையிலும் வெளியாகியுள்ளன. 1995 ஆம் ஆண்டு கலைமுகம் சஞ்சிகையில் வெளியாகிய மருவி மறைந்து போகும் மரபுவழி நம்பிக்கைகள் கட்டுரை வெளிநாட்டுச்சஞ்சிகைகளிலும் மறுபிரசுரம் செய்து பிரசுரிக்கப்பட்டது.

தான் போற்றும்-மதிக்கும்-வணங்கும் பாரம்பரிய கலைகளை அழியவிடாது பேணிக்காக்கும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுள்ளார். கலைகளின் பாடல்களை நூல் உருவில் ஆவணப்படுத்தல்- ஒளிப்பேழையில் ஆவணப்படுத்தல்- நாட்டுக்கூத்து இசை நாடகங்களின் பிரதியை நூல் உருவில் ஆவணப்படுத்தல், மூத்த கலைஞர்களின் வரலாற்றை அவர்களிடம் சென்று பெற்று எழுதி ஆவணப்படுத்துதல், பாரம்பரியகலைகளை ஆற்றுகை செய்வதன் மூலம் இளம் சந்ததியினருக்கு கையளிக்கும் அரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதனால் இவருக்கு தமிழ்க்கலைக்காவலன் என்னும் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இவருடைய திறமையை உணர்ந்த கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை நினைவு விருதுக்குழுவினர் இவ்வாண்டு (2004) கலைப்பேரரசு விருதினை இவருக்கு வழங்கிக்கௌரவிக்க முடிவு செய்துள்ளனர்.

*நயினை க.கிருபானந்தா*

# காரசாரம்

காதல் புனிதமானது. காதல் தெய்வீகமானது. காதலுக்குக் கண்ணில்லை. காதல் இன்றேல் சாதல் என்று ஏகப்பட்ட காதல் வார்த்தைகள் மண்ணில் நிலைத்துள்ளன. காதல் தோல்வியில் தற்கொலை செய்து கொள்பவர்கள், மனப்பிறழ்வு அடைபவர்கள் எக்காலத்திலும் உள்ளனர். காதலி ஒருத்தி கிடைக்கவும், காதலன் ஒருவன் கிடைக்கவும் ஆண்களும் பெண்களும் ஏங்கிக் கொண்டிருப்பதையும் காணலாம். காதலை மையமாக வைத்தே ஏராளமான இலக்கியங்களும் வந்துள்ளன. வள்ளுவர் கூட இதற்கெனத் தனி இயலைத்தந்துள்ளார். அகநானூறு-நற்றினை போன்ற சங்க இலக்கியங்களும் கூட உண்டு. இன்னும் தமிழர்கள் சால்பாகப் பேசப்படுவதில் வீரமும் காதலுமே முதன்மை பெறுகின்றன.

தற்காலத் தமிழர்களின் வீரத்துக்கு உரைகற்கள் தேவையில்லை. இது உலகப்புகழ் பெற்றுவிட்டது. ஆனால், தற்காலத் தமிழர்களின் காதலுக்கு எதை உதாரணமாக வைப்பது என்பது தெரியவில்லை.

காதல் ஒரு பொழுதுபோக்கா? காதல் ஒரு விளையாட்டா?

திருமணம் செய்யுங்கள் என்று சற்றும் சலனமில்லாமல் கூறினார். ஒரு பெண்ணுக்கு அவன் செய்தது துரோகமில்லையா? இதுவே அவனுடைய சகோதரிக்கு நடந்தால் விடுவானா? ம்..... காதல் இவ்வளவுதான்.

இன்னுமொன்று மிக நெருக்கமான காதல் இரு பகுதியிலும் பெற்றோருக்கும் தெரிந்திருந்தது. வருவான் பேசுவான் விழாக்களில் கலந்து கொள்வான். மகிழ்ச்சியாகப் போனது காதல். திடீரென அவன் வாழ்க்கை நிலை உயர்ந்தது. இப்போது அந்தப்பெண்ணை பார்க்கவோ பேசவோ அவனுக்கும் நேரமில்லை. அவனுடைய பெற்றோருக்கும் நேரமில்லை. அந்தப்பெண்ணின் எதிர்காலமென்ன?

பெண்களின் உரிமைகளுக்கும் பெண்களின் முன்னேற்றத்துக்கும் பெண்களின் அபிவிருத்திக்கும் உழைக்கும் சர்வதேசமோ, அரசாங்கங்களோ மிகச் சாதாரணமாகச் சட்டம் போட்டு இவற்றுக்குத் தீர்வு கண்டுவிட்டதாகப் பறைசாற்றினாலும் பெண்களின் மனம் என்ன சொல்கிறது. மனம் என்பதுதான் வாழ்க்கை. பெண்களுக்குப் பாதுகாப்பை

ஆனால் ஒரு வாரத்துக்குள் அது "ஓல்சிலோன் அவுட்" டான செய்தியாகும். சம்பந்தப்பட்ட இடங்களில் அப்படி ரகசியம் பேணப்படும். சரி போட்ட முறைபபாட்டையாவது ஒழுங்குற?? விசாரிக்க ஆரம்பிக்கும் முன்பே போதியகால அவகாசம் காரணமாக எதிரி கட்டுப்பாட்டை மீறித் தன்னைக் காத்துக்கொள்கிறார். பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கூடம் மேலும் பொலிவு பெறுகின்றது.

காதலுக்கு ஒருபோதும் சட்டவலு இல்லை. ஒரு பெண் பலதடவை வேண்டாம். ஒரு தடவை நீதிமன்றம் போனாலும் அவள் திருமணத்தை எதிர்பார்க்க முடியாது. இக்கால இளைஞர்களுக்கு காதல் ஒரு விளையாட்டு. இது எலி பூனை விளையாட்டு. பூனையாக ஒரு இளைஞன் ஆகும் ஆட்டம் எலியான பெண்ணுக்கு ஜீவ மரணப்போராட்டம். அக்காவும் தங்கையும் திருமண வயதில் இருக்கத் தம்பிக்குக் காதல் வரும். இது பற்றித்தெரியாத ஒரு பெண்ணை தற்கால சினிமாக் கதாநாயகர்கள் போல துரத்தித்துரத்திக் காதலில் விழச்செய்வர். திருமணம் பற்றிப் பேச்சு வரும்போதுதான் அவருக்குச் சகோதரிகள் பாசம் பொத்துக்கொண்டு வரும். காரணம் காதலியிடம் ஏதாவது கறக்கலாமா? என்னும் முயற்சி அது.

இந்தவகைக் கேடுகெட்டவர்கள்தான் எங்கள் சமுதாயத்

## பெண்கள் முன்வரவேண்டும்

காதல் ஒரு கல்விக் கூடமா? காதல் ஒரு நாடக ஒத்திகையா? காதல் காம இச்சைகளைத் தீர்த்துக்கொள்ளும் களமா? எது? எது? தமிழர்களின் மானம் என்பதும் குடிப்பிறப்பு என்பதால் வருவதல்ல. பண்பும், நற்குடிப் பிறப்பும், படிப்பும் நிறைந்தவர் தான் நல்ல மணமகள் அல்லது மணமகன் என்ற நிலை போய் இன்றும் பணமும், தொழிலும் திருமணம் செய்யும் காலமும் இது. காதலிக்கத் தொடங்குமுன் ஒரு பெண்ணோ ஆணோ எதிர் பார்ப்பாலாரின் சாதி, சமயம், சொத்துக்கள், சாதகம் எல்லா வற்றையும் பார்த்து விட்டா தொடங்குவார்கள் இல்லை. ஆனால், காதல் முற்றிய பின் ஆண்கள் இவற்றைப்பார்க்கவே செய்கின்றார்கள். இதன் விளைவாகப் பெண்கள் ஏமாற்றத்துக்கு ஆளாக வேண்டி வருகின்றது.

அண்மையில் ஒரு பெண் தன்னைக் காதலித்தவர் திருமணம் செய்ய முன்வரவில்லை என்றார். காரணம் பெண்ணல்ல பெண்ணின் உறவினர்கள் யாரோ சாதிமாறித் திருமணம் செய்துள்ளார்கள். நாங்கள் இவ்வளவு பிரச்சினைக்கும் சாதி சுத்தமாகத்தான் இருக்கிறம்! என்றார் அவர். சரியான காரணமா?

இன்னுமொரு பெண் இரண்டொரு கடிதங்களே பரிமாறினாலும் இரண்டு மூன்று வருடங்களாக விரும்பியிருந்தவர். சுமார் ஆறு மாதங்களாகத் தொழிலில் மாற்றலாகிச் சென்றிருந்தார். இடையில் ஒரு தடவை வந்து அவளைப் பார்த்து விட்டும் போனவர். திருமணப் பேச்சை எடுத்த போது அம்மா,அப்பா, அண்ணா, அக்கா எல்லோருக்கும் துரோகம் செய்வது போல உணருகிறேன். நீங்கள் வேறு யாரையாவது

வழங்குவதற்குப் போடப்பட்ட சட்டங்கள் எந்தளவில் பெண்களைப் பாதுகாக்கின்றன.

ஆணாதிக்க கருது கோள்களின் மீது ஆக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு வெளிவரும் சட்டங்கள் இவை. திட்டமிட்டு "உப்புக்குச்சப்பாணியாக" இதில் இரண்டொரு பெண்கள் கலந்து கொள்வதாகக் காட்டப்பட்டாலும் அவர்கள் வாய்திறக்கப்போவதில்லை. அவர்களுக்கு தங்கள் கதிரைகளைக் காப்பாற்றி வைத்திருக்கவேண்டியதே முக்கியமாகும். திருமணப்புகைப்படங்கள் போல. ஒரு பெண்களுக்கான பத்திரிகையை நடத்தும் பெண், பத்திரிகைக்கென தன்னால் எழுதப்படும் ஆசிரியர் தலையங்கத்தைக் கணவனிடம் காட்டி அனுமதி பெறவேண்டியுள்ளது. நான் உலக மட்டத்தில் பேசுகிறேன். சாதியழிப்பு ஒரு குற்றம் தமிழீழ ஒறுப்புச்சட்டம் இயல் 24,432, 433,437 இது பற்றி விரிவாகக் கூறுகிறது. இலங்கை குற்ற நடவடிக்கைச்சட்டத்திலும் அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயம் 12, 13ஆம் சரத்துக்களில் இது வேறுவகையில் சுட்டப்பட்டுள்ளது. ஆனால், இது சார்பாகச் செயற்படும் முறைப்பாடுகள் கவனிக்கப்படுவதில்லை. இதுசார்பாகப் பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு நேர்ந்த அவமானத்துக்கு எந்த ஒரு பரிகாரத்தையும் பெற முடியாதவாறு சட்டத்தை வழிநடத்துவோர் செயற்படுவதையும் காணலாம்.

காதலனால் ஏமாற்றப்பட்ட ஒரு பெண் (சட்டப்படி இயல் 21,414 ஆவது சரத்து இது பற்றிக் கூறுகின்றது) பாதிக்கப்பட்ட ஒரு பெண் மிக இரகசியமாகச் சென்று தனது முறைப்பாட்டைப் பதிவு செய்யலாம்.

தில் நிரம்பிவழிகிறார்கள். வீரத்தின் விளைநிலமான இந்த மண்ணில் காதலில் கோழைகளையே சந்திக்கிறோம். ஏமாற்றப்பட்ட ஒவ்வொரு பெண்ணும் கிளர்ந்தெழ வேண்டும். ஏமாற்றும் துரோகிகளின் பெயர்கள் பகிரங்கமான இடங்களில் எழுதி ஒட்டப்பட வேண்டும். இவர்கள் கைது செய்யப்பட்டு வீதி உலா விடப்படவேண்டும்.

ஒரு நாட்டின் மானம், அந்நாட்டின் பெண்களிலும், பசுக்களிலுமே தங்கியிருந்தது. இருக்கின்றது. ஒரு வீட்டில் ஒரு பெண் தவறு செய்தால் அவ் வீட்டுத் தலைவனுக்குப் பெரும் அவமானமாகக் கருதப்படும்.

"புகழ் பூத்த இல்லார்க்கு
இல்லை-ஏறு போல் பீடுநடை"

என்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார். பெண்கள் இந்நாட்டின் வீர வரலாற்றின் பங்காளிகள் சமுதாயத்தில் அவர்கள் சோக வரலாற்றின் சொந்தக்காரராய் இருக்க அனுமதிக்கக் கூடாது. ஒவ்வொரு பெண்ணும் உன் தங்கையாய், தாரமாய், தாயாய் இருப்பவளின் பதிவுதான் பெண்களின் கண்ணீருக்குள் பேரழிவு காத்திருந்த வரலாறுகள் உண்டு. பெண்கள் கண்ணீர் விட்டால் நாடே அழிந்து விடும் என்று கீதை கூறும் பாரதக்கதையில் விதுரன் கூறுகிறான். இந்தக்காதல் கோழைகளின் தோலுரித்துத் தொங்கவிடப் பெண்கள் அணி திரளவேண்டும். தொடர்ந்து நம் எதிர்காலப் பெண்களைக் காக்க நாம் முன்வரவேண்டும்.

*மாயா*



# கடலும் சமாதானமும்



நிலாந்தன்

உலகப்புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர் ஏர்ணஸ்ற் ஹெமிங்வேயின் அதிகம் வாசிக்கப்பட்ட ஒரு நூலின் பெயர் கடலும் கிழவனும். ஹெமிங்வேக்கு நோபல் பரிசை வென்று கொடுத்த படைப்பு அது என்று சொல்லப்படுவதும் உண்டு. நாவலின் மையப் பாத்திரம் ஒரு முதிய மீனவனாகிய சந்தியாகோ. ஒருமுறை சந்தியாகோ சுறா பிடிக்கப்போகிறான். ஒரு பெரிய சுறா அகப்படுகிறது. அது சந்தியாகோவை விடவும் அவனுடைய படகை விடவும் பிரமாண்டமானதாய் இருக்கிறது. அதைக்கொல்லாவிட்டால் அது அவனைக் கொன்றுவிடும் எனும் ஒரு நிலை. எனவே சந்தியாகோ தனது பலமனைத்தையும் திரட்டி கரணம் தப்பினால் மரணம் எனுமளவுக்குப் போராடி அந்தச் சுறாவைக் கொல்கிறான். கொன்றபின் அதைக் கரைக்கு இழுத்துச்செல்ல முயல்கிறான். அப்பொழுதுதான் ஒரு புதிய பிரச்சினை தோன்றுகிறது. கொல்லப்பட்ட சுறாவின் ரத்த வாடை கடலில் பரவி ஏனைய சுறாக்களை கவர்ந்திழுக்க பெரிய சுறாப்படையே சந்தியாகோவை துரத்தத் தொடங்குகிறது. இப்பொழுது பிடித்த சுறாவை கைவிட்டால்தான் சந்தியாகோ தப்பலாம் எனும் ஒரு நிலை. ஆனால், அவன் வலியன். சுறாக்களோடு போராடியபடியே தனது படகை வலித்துக்கொண்டுவருகிறான். மிகநீண்ட உயிராபத்தான போராட்டத்தின் முடிவில் அவன் கரையை வந்தடைகிறான். கரையை வந்தடைந்ததும் களைப்பு மேலிட அப்படியே கடற்கரையில் மயங்கி விழுகிறான். விடிந்ததும் மயக்கம் தெளிந்து இரவு தான் கரையில் இழுத்துப்போட்ட சுறாவை திரும்பிப் பார்க்கிறான். அதிர்ச்சி காத்திருக்கிறது. அங்கே சுறா இல்லை. சுறாவின் எலும்புக் கூடே விகாரமாய் சிரித்தபடி கிடக்கிறது. இரவிரவாக கரைவரை அவனைத் துரத்தி வந்த சுறாக்கள் இறந்த சுறாவை அநேகமாக தின்றுவிட்டிருந்தன.

இதுதான் ஹெமிங்வேயின் கதை. மனிதனுக்கும் பேரியற்கைக்கும் இடையிலான போராட்டத்தில் மனிதன் எப்படித்தோற்றுப் போகிறான். அவனுடைய சாதனைகளும் வெற்றிகளும் எப்படி வியர்த்தமாகிப்போகின்றன என்பதை அது சொல்கிறது.

கடந்த கிழமை பேரலைகள் இலங்கைத்தீவின் கிழக்குக் கரையைத்தாக்கி கிராமங்களை கழுவி எடுத்துச்சென்றபோது தவிர்க்கமுடியாதபடி ஹெமிங்வேயின் கடலும் கிழவனும் நாவல் நினைவில் வந்தது.

பொதுவாக வங்கக் கடல் மிகவும் அழகானது. ஓயாத அலைகள் ஒன்றின் பின் முல்லைத்தீவுக்குப் போனபோது, மீட்கப்பட்ட நகரின் சிதிலங்களின் பின்னணியில் கடல் மிகவும் அமைதியாக ஒரு முனிவரைப் போலக்காணப்பட்டது. ஆனால், கடந்த கிழமை அது கொந்தளித்ததன் பின் கரையில் இருந்து பலநூறு மீற்றர்கள் தூரத்திற்கு கலங்கி நிறம் மாறி விகாரமாய் காட்சியளித்தது. ஒரு செம்மலை வாசி சொன்னார் .... "கடலைப் பார்க்கப் பயமாய் இருக்கிறது. அது ஒரு பேயைப் போலிருக்கிறது" என்று.

எந்த ஒரு படையெடுப்பும் கொண்டுவராத பேரழிவை கடல் கொண்டுவந்திருக்கிறது. யுத்த காலங்களில் பொதுவாக இலங்கைத் தீவின் உயிரிழப்பு எண்ணிக்கை மாதம் ஒன்றுக்கு 300 என்று கூறப்படுகின்றது. ஆயின் பல ஆண்டுகால் யுத்தத்தில் அழிக்கப்படும் உயிர்களையும் சொத்துக்களையும் சில நிமிடங்களுக்குள் கடல் கொண்டுபோயிருக்கிறது.

மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்த ஒரு தொண்டர் சொன்னார். தாங்கள் பிணங்களைச் சேகரித்து ஹன்டர் வாகனத்தின் பெட்டியில் அடுக்கிக்கொண்டிருந்தபோது ஒரு



தாய் வந்து கேட்டாராம் என்னிடமும் ஒரு சிறு உடல் உண்டு எடுத்துக் கொண்டு போகிறீர்களா என்று.

தமிழர்களைப் பொறுத்த வரை இது முற்றிலும் புதியதொரு அனுபவம். தமிழர்களின் நவீன வரலாற்றில் முன்னெப்பொழுதும் கடல் இப்படி பொங்கியதில்லை. என்னுடைய அம்மம்மா அடிக்கடி சொல்வார்.... பாசையூர், குருநகர் கடல் முன்பொருதடவை 1964 இல் ஊர் மனைகளுக்குள் புகுந்ததாம். ஆனால், அப்பொழுது நீர்மட்டம் அமைதியாக மேலுயர்ந்ததே தவிர கடல் இந்தளவுக்குப் பொங்கியதில்லை. இந்தக் கடல் ஒரு பெண் கடல் என்றும். எனவே இது பொங்கி அதிக அழிவைத் தராது என்றும். ஆனால், கிழக்குக் கடல் ஒரு ஆண் கடல் என்றும் அது மூர்க்கம் கொண்டால் ஊர்களை அள்ளிக் கொண்டு போய்விடும் என்றும் அம்மம்மா சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இது தவிர பொதுவாக எல்லா மத நம்பிக்கைகளிலும் புராணங்களிலும் கடல் பெருக்கு காணப்படுகிறது. உலகின் முதலாவது இதிகாசம் எனப்படுவது மொசப்பத்தோமியாவில் தோன்றிய கில்காமேஷ். இதில் ஒரு யுகமுடிவைக் குறிக்கும் பேரலைகள் வருகின்றன. இந்துக்களிடம் ஊழிப் பெருக்கு எனப்படுவது உலகழிவு அல்லது ஒரு யுகமுடிவு என்று நம்பப்படுகிறது. ஊழிப்பெருக்கின் போது மஹா விஷ்ணு மச்சாவதாரம் எடுத்து சப்த ரிஷிகளை காப்பாற்றிச் சென்றதாக இந்துமத நம்பிக்கைகள் கூறுகின்றன. கிறிஸ்தவர்களிடமும் இதற்கு நிகராக நோவாவின் கதை காணப்படுகிறது.

மேலும், கடல் கொண்ட பட்டினங்களையும் கடல் கொண்ட கண்டங்களையும் பற்றி தமிழர்களிடம் செவிவழிக் கதைகள் பல உண்டு.

இவற்றையெல்லாம் அறிவு பூர்வமற்றவை; குருட்டு நம்பிக்கைகள்; ஐதீகக்கட்டுக்கதைகள் என்று கூறி நிராகரித்துவிடலாம் தான். ஆனால், கடந்தகிழமை கிழக்குக்கடலுக்கு ஊழிக்கோபம் வந்தபோது மனிதன் ஒரு அற்ப பூச்சியாகிப்போனான் என்பதே மெய்.

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் ஜெயமோகனின் விஷ்ணுபுரம் நாவலில் வரும் ஊழிபெருக்கில் எப்படி மனிதர்கள் கட்டியது யாவும் மண்பொம்மைகள் போல கரைந்து கரைந்து வீழ்கின்றனவோ அப்படித்தான் இங்கேயும்.

மனிதனுடைய கண்டுபிடிப்புக்கள் யாவும் அறிவாராய்ச்சிகள் யாவும் வெற்றிகள் யாவும் மூன்றே நிமிடங்களில் கடலிடம் தோற்றுவிட்டன. மானுட அறிவெனப்படுவது சிற்றறிவே என்பது தெரியவந்த போர்து மனிதர்களில் சுமார் 20000 திற்கும் மேற்பட்டவர்களை குறிப்பாக குழந்தைகளை, பெண்களை, முதியோரை கடல் கொன்றுவிட்டிருந்தது.

கடலடி நிலநடுக்கத்தை வரமுன் கண்டுபிடிக்கும் அளவுக்கு மனிதனின் அறிவு வளரவில்லை என்று சொல்கிறார்கள். சரி, வந்த நிலநடுக்கம் சனங்கள் வாழும் கரைகளைத் தாக்குவதற்கு சுமார் ஒரு மணித்தியாலம் எடுத்திருக்கிறது. அதை ஏன் முன்கூட்டியே எச்சரிக்க முடியாமல்போனது. அந்த மூன்று நிமிடங்களுக்குள் மனிதனுடைய அறிவியல் வெற்றிகள் மற்றும் போரியல் வெற்றிகள் யாவும் அற்பமானவைகளாய் போயின.

மத்திய கால சீனாவில் நீர்வர்ணங்களால் அல்லது மையால் வரையப்பட்ட நிலக்காட்சிப் படங்களில் எப்பொழுதும் இயற்கை பிரமாண்டமானதாகவும் மனிதன் சிறு புள்ளியளவுக்கு அற்பமானவனாகவும் வரையப்பட்டிருக்கும். கடந்த கிழமை கிழக்குக் கடற்கரை நெடுக வந்து குவிந்த பிணங்களை எண்ணும் போதெல்லாம் சீனத்து ஓவியங்களில் வரும் மனிதனே நினைவில் தட்டுப்பட்டான்.

பருத்தித்துறையில் இருந்து செல்வச்சந்நிதிக்குப் போகும் யாரும் காணக்கூடிய காட்சி ஒன்று உண்டு. கடற்கரை நீட்டுக்கும் சிறிய இடைவெளிகள் விட்டு காவற்பரண்கள் வரிசையாகக் காணப்படும். இது தவிர கடலிலும் மிதப்பது போன்று காவற்பரண்கள் உண்டு. கடல் பெருகி வந்த போது மேற்படி காவற்பரண்களில் இருந்த சிப்பாய்களுக்கு அவர்களுடைய காவல் பரண்களைச் சூழ இருந்த முட்கம்பிச் சுருட்களே ஜமனாய் மாறியிருந்திருக்கும்.

தங்களுடையதல்லாத ஒரு கடலின் மீது தாங்கள் பெற்ற வெற்றிகளைப் பாதுகாப்பதற்காக அவர்கள் அமைத்த காவல் பரண்கள் அவை. அந்த வெற்றிகளையெல்லாம் கடல் அற்பமானவைகளாக்கிவிட்டது. அதாவது கடல் கடலுக்குத்தான் சொந்தம்.

ஒரு மரபுப்படை என்ற ரீதியில் சிறிலங்காப் படைத்துறைக்கு ஒப்பீட்டளவில் பேரழிவு நேர்ந்திருக்க வேண்டும். ஏனெனில், எல்லா முனைகளிலும் வரிசையாக காவற்பரண்களை எழுப்பி அதில் குந்தியிருந்தது அவர்கள்தான். எல்லாத் துறைமுகங்களிலும் நிரந்தரமாக தளங்களை கட்டியெழுப்பி வைத்திருந்ததும் அவர்கள்தான். எனவே இழப்பு அவர்களுக்கே அதிகமாய் இருந்திருக்கும்.

ஆனால், கொழும்பில் உள்ள சில ஊடகங்கள் கடற்புலிகளுக்கே இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் காட்ட முயற்சிக்கின்றன.

இது ஒரு பொதுத் துயரம். உதயன பத்திரிகை தனது 28 ஆம் திகதி ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியிருப்பது போல இனம், மொழி, மதம், பிரதேசம் என்பவை கடந்து இது எல்லாரையும் தாக்கியிருக்கிறது. பொதுவாக இயற்கை அனர்த்தங்கள் நிகழும்போது இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் பின்வாங்கிச் சென்றுவிடுவதுண்டு.

கடந்த ஆண்டு இரத்தினபுரி வெள்ளத்தில் அமிழ்ந்தபோது [illegible]கள் அங்கே நிவாரணம் கொண்டு போனதை இங்கே சுட்டிக்காட்டலாம்.

எனவே இத்தகைய [illegible]ணங்களில் யுத்த முஸ்தீபுகள் ஒத்திப் போடப்படுவதும் உண்டு.

குறிப்பாக ஆபிரிக்காவில் இத்தகைய இயற்கை அனர்த்தங்கள் வரும்போது அங்கெல்லாம் யுத்தம் பின்னரங்குக்குச் சென்றுவிட மனிதாபிமான பிரச்சினைகளே முன்னணிக்குவருகின்றன.


சுனாமி அழிவுக்குப் பிந்திய இலங்கைத்தீவின் அரசியலிலும் புதிய திருப்பங்களுக்கு இடமுண்டு.

உலகின் அனுதாபம் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் திரும்பும்போது சமாதானத்திற்கு எதிரான கூச்சல்கள் முக்கியத்துவம் இழந்துவிடுவதோடு அத்தகைய கூச்சல்களை எவரும் அருவருப்பானதொன்றாகவே பார்ப்பர். இனி கொஞ்சக் காலத்திற்கு சமாதானத்தின் எதிரிகள் தலைகளில் முக்காடு போட்டுக்கொண்டு மேடைகளைவிட்டு இறங்கவேண்டியிருக்கலாம். அதாவது நாடு யுத்தத்தை நோக்கிச்செல்லும்வேகம் இனிக் குறையக்கூடும். சிலசமயம் நாடு யுத்தமல்லாத திசையை நோக்கியும் மெல்லப்போகலாம். யுத்தமோ சமாதானமோ எதுவோ ஒன்று மட்டும் நிச்சயம். அது என்னவெனில்- முதிய சந்தியாகோ விரைவில் மறுபடியும் சுறாப்பிடிக்கக் கடலுக்குப்போவான் என்பதே.



# நறுக்கென...

## புலம்பெயர் உறவுகளின் உதவிகள் கிட்டவேண்டும்



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலையென பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் நிரம்பி வழிந்த மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கிய தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களின் பணியை நிச்சயம் எவரும் மறந்துவிடமுடியாது.

பெருந்தொகைப் பணத்தையும், பெருந்தொகை மனித சக்தியையும் ஒன்று சேர்த்து அந்த மக்களை காப்பாற்றுவதில் உழைத்த இந்த நிறுவனங்களின் பணி அளப்பரியது.

அரச நிறுவனங்களும், திணைக்களங்களும் கைகளைப் பிசைந்து கொண்டிருக்க இந்த உள்ளூர் தொண்டு நிறுவனங்கள்தான் முழுமூச்சுடன் இயங்கின.

ஒரு தேசிய துயரில் எவ்வளவு வேகமாக செயற்படமுடியுமோ அவ்வளவு இந்த தொண்டு ஊழியர்கள் தம்சேவைகளை வழங்கினர்.

ஒலி பெருக்கி வாகனங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரியுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோது எமது மக்களும், எமது வர்த்தக சமூகத்தினரும் தம் தம் சக்திக்கேற்ப உதவிகளை நல்கினர்.

இவ்வாறுதான் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களும் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வதியும் எமது அன்பான உறவுகளை உதவிபுரியுமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைய பல்வேறு நாடுகளிலும் வதியும் எமது மக்கள் தமது உதவிகளை நல்குவதாக அறியமுடிகிறது.

இந்த உதவிகளை எமது உறவுகள் தாங்கள் வதியும் நாடுகளிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கிளைகளினூடாகவும், புனர்வாழ்வு கழக இணையம் மற்றும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் வெளியிட்டு உள்ள கணக்கிலக்கங்கள் ஊடாகவும் உதவிகளை வழங்கவேண்டும்.

தாயகத்தில் எமது உறவுகள் பாதிப்புறும் போதெல்லாம் எமது புலம் பெயர்ந்த உறவுகள் தத்தமது தோள்களில் அந்தச் சுமைகளை பகிர்ந்துகொள்கிறார்கள்.

அவ்வாறுதான் இந்தப்பெரும் சுமையையும் அவர்கள் சுமக்கவேண்டும். சுமப்பார்கள் என்ற நம்பிக்கையில் தான் எமது உறவுகள் காத்திருக்கிறார்கள்.

சிறிலங்கா அரசுக்குப் பல்வேறு சர்வதேச நாடுகளும் பல மில்லியன் ரூபா நிதியினை உதவியுள்ள போதும் எந்த உதவியும் இதனை எழுதும்வரை எமது மக்களை கிட்டவில்லையென்ற துயரையும் நினைத்துக்கொள்வோம்.

## கற்பனையில் எக்காளமிடும் சிறுநரிக்கூட்டம்



இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இழப்புக்கள் தொடர்பாகச் செய்திகள் வெளிவருமுன்னர் சிங்கள மற்றும் ஆங்கில நாளிதழ்கள் இலத்திரனியல் ஊடகங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கடற்புலிகளுக்கு பெருஞ்சேதம் ஏற்பட்டுவிட்டது என்றும், கடற்புலிகள் அழிந்தார்கள் என்றும் செய்திகளை அடிக்கடி வெளியிட்டவண்ணமிருந்தன.

ஆனால், இந்த பெரும் அனர்த்தத்தில் மிகச்சிறிய இழப்பை மட்டுமே சந்தித்த கடற்புலிகள் பெரும்எடுப்பில், தமது படையணிகளையும், உபகரணங்களையும் பாவித்து பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதிலும், அவர்களுக்கு உதவிபுரிவதிலும் ஈடுபட்டிருந்ததை இந்த இனவாத கூச்சலிடும் சக்திகள் வெட்கித்தலைகுனிந்திருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதில் காட்டிய உழைப்பும், வேகமும்தான் பெருமளவு மக்களைக் காப்பாற்றக்கூடியதாக இருந்தது.

ஆனால், சிங்கள மேலாண்மைவாத, இனவாத கூச்சலிடும் கூட்டம் தமிழரின் பலம் இழந்துவிட்டதாகக் கற்பனையில் கனவுகண்டு கும்மாளம் அடித்து நிற்கின்றனர்.

இதைப்பார்க்கும் போது ஒன்றை மனதில் நிறுத்தவேண்டும். எவன் தன்னுடைய எதிரியைக் குறைத்து மதிப்பிடுகிறானோ, அவன் தன்னைப் பலவீனப்படுத்திக் கொள்கிறான் என்பதுதான்.

இன்னொரு வகையில் பார்க்கும்போது தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்திருக்கும் படையினருக்கும், தென்னிலங்கை பகுதியிலிருக்கும் படையினருக்கும் இந்தக் கடல் அனர்த்தத்தால் ஏற்பட்ட அழிவை வைத்து கடற்புலிகளுக்கு இவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என கணக்கிட்டுக்கொள்கிறார்கள் என்பதுதான் அது.

சிறிலங்கா கடற்படையைப் போன்று கடற்புலிகளின் கடற்கலங்கள் சதா கடலில் மிதக்கவேண்டிய தேவையோ, பெருமளவு கடற்புலிப் போராளிகளைக் கரைகளில் நிறுத்திவைக்கவேண்டிய தேவையோ இல்லை.

என்ன செய்ய வெறும் வாயை மெல்லும் கூட்டத்தை யாரால் திருத்தமுடியும். அவர்களாகத் திருந்திக்கொண்டால்தான் உண்டு.

## எம்மக்களின் துயரை நாம் துடைக்கவேண்டும்



சுனாமியின் சுழற்சியால் வீடுவாசல்களை இழந்து தங்கள் உறவுகளை இழந்து மக்கள் படும் அவலம் இருக்கிறதே வார்த்தைகளால் சொல்லமுடியாது.

சுழட்டிய சுனாமி இனம், மதம், மொழி என்று எவையுமின்றி ஆசியாவின் கரைகளெங்கும் தன் கோரக்கரங்களை வீசியெறிந்து அள்ளியெடுத்துள்ளது.

இந்த அவலத்துள் அகப்பட்டமக்களுக்கென கொடுக்கப்படும் நிவாரணப் பொருட்களில் பாகுபாடுகள் காட்டப்படுகிறது என ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொருட்களை கொள்ளையடித்து சில மனித உணர்வே இல்லாத ஜென்மங்கள் வியாபாரம் செய்ய முயன்றதாகவும் செய்திகள் வெளியாகின.

அத்தோடு தமிழர் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்க வென பாரஊர்திகளில் கொண்டு செல்லப்பட்ட பொருட்களைச்சில இனவாதவிஷமிகள் கொண்டு செல்லவிடாமல் தடுத்து வேறுபகுதிகளுக்குக் கொண்டுசெல்ல முயன்றுள்ளனர்.

இவையெல்லாம் எதைக்காட்டுகின்றது.

ஒரே இலங்கை, ஒரேமக்கள் இலங்கையின் இறையாண்மை என்றெல்லாம் பேசும் வார்த்தைகள் ஏமாற்றும் வித்தைகள் என்பதையல்லவா?

துன்பத்தில் ஆழ்ந்த மக்களுக்கு உடனடி உதவியைத்தான் வழங்கவில்லையென்றாலும் உபத்திரமாவது செய்யாமல் இருக்கவேண்டுமல்லவா.

இப்போது கூட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் துன்பத்தில் அரசியல் வியாபாரம் செய்யமுயலும் ஈனச்செயலையல்லவா காணமுடிகிறது.

என்னதான் இருந்தாலும், எவர்தான் இருப்பதாகக் கூறினாலும் எமது மக்களின் பாதுகாப்பு எங்களின் கைகளில்தான் இருக்கிறது. எமது மக்களின் துயரை எம்மால் தான் துடைக்கமுடியும்.

யாழ்ப்பாணம் முதல் கிழக்குவரை நீண்டுகிடக்கும் தமிழர் துயரத்தில் தமிழ்மக்களே இதுவரை உடனடி உதவிக்கரம் நீட்டினார்கள். இனியும் அவர்களே உதவிக்கரம் நீட்டவேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத்துடைப்பதில் எல்லோரும் ஒன்றிணையவேண்டும்.

எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு அவர்களை நாம் ஆறுதல்படுத்த முயலவேண்டும்.

நீர் அடித்த மக்களுக்கு 'நீர் அடித்து நீர் விலகாது' என்பது போல எங்கள் உறவுகளுக்கு நாமே உதவவேண்டும். இதனைச்செய்துவரும் மக்கள் இனியும் செய்யவேண்டும்.

## பாராட்டப்படவேண்டிய சுகாதாரத்துறையினர்



கடலலையின் வீச்சில் எங்கள் உறவுகளை இழந்துவிட்டோம், எங்கள் ஊர்களை இழந்தோம், கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்துவிட்டோம் இனி எஞ்சியிருக்கும் இடிபாடுகளுக்குள்ளும் எங்கள் உறவுகளைத்தான் தேடியபடி இருக்கிறோம்.

இந்த நிலையில் இயற்கையின் சீற்றம் நடந்த அன்று பாதிக்கப்பட்டவர்களால் வைத்தியசாலைகள் நிரம்பி வழிந்தன. இந்த பாதிக்கப்பட்ட உறவுகளைக் காப்பாற்ற இந்த மண்ணில் செயற்படும் வைத்தியர்கள், தாதிமார்கள் சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் வைத்திய மற்றும் சுகாதாரப் பகுதியோடு சேர்ந்தியங்கும் ஒவ்வொருவரதும் பணியும் மதித்து அவர்களை பாராட்டும் படியாக இருந்தது.

அந்தவகையில் அவர்களை நாம் பாராட்டுகிறோம். இதேவேளை பாதிக்கப்பட்ட இடங்களில் எங்களை எச்சரித்தபடி தொற்றுநோய்க்கிருமிகள் காத்திருக்கின்றன. இவற்றையும் நாம் வெற்றிகொண்டாகவேண்டும்.

ஏனெனில் இத்தகைய பாரிய அனர்த்தங்கள் எல்லாம் இவை நடைபெற்று முடிந்து பல நாட்களின் பின்னர் இதனால் ஏற்பட்ட தொற்றுநோய்களால் நூற்றுக்கணக்கானோர் இறந்திருப்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

அந்த வகையில் இந்த அபாயத்திலிருந்து நாம் மீளவேண்டுமாயின் சுகாதாரத்துறையினருக்கு ஒத்துழைக்கவேண்டியது மிக அவசியம்.

இது தொடர்பான சரியான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டு வெற்றிகரமாக அது செயற்பட நாம் ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும்.

அந்த வகையில் எமது முழுமையான ஒத்துழைப்பு சுகாதாரப் பிரிவினருக்கு வழங்குவதோடு சுகாதாரத்துறை சார்ந்த மண்ணின் வைத்தியர்கள் தாதிகள், மருத்துவ தொண்டர்கள் அந்தத் திணைக்களம் சார்ந்த ஊழியர்கள் அனைவருக்கும் நாம் பாராட்டுதலை தெரிவித்தாகவேண்டும். அந்த வகையில் தொற்றுநோய்த் தாக்கங்களிலிருந்து விடுபடவேண்டுமாயின் அறிவுறுத்தப்படுவது போல சுகாதார விதிமுறைகளை மக்கள் பின்பற்றவேண்டியது அவசியமாகியுள்ளது.

இதற்கு இறந்த உறவுகளின் உடலங்கள் மற்றும் இறந்த கால்நடைகளின் உடல்கள் போன்றவற்றை உடனுக்குடன் புதைத்துவிடவேண்டும்.

மற்றும் பாதிப்புக்குள்ளான பிரதேசத்தில் குடிநீர் மாசுற்றுள்ளதால் குடிநீரிலும் கவனம் செலுத்த வேண்டும்.

*வேழினி*

# போராளிகளின் இல்லம்

மூதூர் இறங்குதுறையிலிருந்து பேருந்து தோப்பூரைச் சென்றடைய, மக்கள் தோப்பூரிலிருந்து இரண்டு மைல்கள் தூரத்தை மாட்டு வண்டிகளிலும், கால் நடையாகவும் பள்ளிக்குடியிருப்பு ஊர் வந்து சேர்வார்கள்.

ஊருக்குப் புறத்தே பச்சை பசும்நெல் பயிர்களினுள் களை அதிகமாகப் பரவாமல் பறித்து, நீர்பாய்ச்சி, பாய்ச்சிய நீரை வெளியே போகாது வரம்பைச் செப்பம் செய்யும் கமத்தொழில்கள் இன்னொரு பக்கம் சுருட்டை சுகமாக இழுத்துக்கொண்டு அரைத்தாடி வயதானவர்களின் வயல் காவல் குடிகள் சிதறிக்காணப்படும். இத்தகைய இயற்கை எழில்கள் சூழ்ந்து நிறைந்து ஊரைக்காணும் கவியுள்ளம் கொண்டவர்களுக்கு கவிதைகள் பிறக்கும்.

இத்தகைய இயற்கை எழில்கள் சூழ்ந்து நிறைந்து ஊரைக் காணும் கவியுள்ளம்கொண்டவர்களுக்கு கவிதைகள் பிறக்கும்.

இவ் இனிமை சூழ்ந்த ஊரிலேயே மூத்த போராளிகளான இளங்கோவும், கணேசும் 84 நடுக்கூற்றில் ஒரு நாள் பண்டிதர் வீட்டில் இரவை கழித்து காலை எழுந்தனர். விடிகாலை எழுகின்ற செஞ் சூரியனது பொன்நிற ஒளிக்கதிர்கள் ஊரின் மீது விழுகின்ற காட்சியை கண்ணுற்ற இரு போராளிகளும் கிராமத்தின் கலையழகை ரசித்துத் தமக்கிடையே ஆனந்த்தை பகிர்ந்து கொண்டனர்.

இந்தக் கிராமத்தின் இவ்வளவு அழகுகள் இருந்தாலும் இன்னொரு அழகு இது. தமிழ்ரின் உரிமைகளை நிலைநாட்ட ஆயுதமேந்திய புலிப்போராளிகளுக்கு உதவிகளை வழங்கி, உற்சாகம் கொடுக்கும் கிராமமாக மாறத் தொடங்கியது.

இளங்கோவும், கணேசும் பண்டிதரின் பாசத்துடன் கூடிய அரவணைப்போடு ஜோச்குடும்பம், பாலசுப்பிரமணியம் குடும்பத்துடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

பாலசுப்பிரமணியண்ணனும் அவரது மனைவி, பிள்ளைகள் ஐவரும் கிராமிய மண் வாசனையோடு தமிழ் தழுவிய சூழலில் வாழ்ந்தனர். இவர்கள் போராளிகளை வரவேற்று இன்முகம் காட்டியும், இன்சொல் பகிர்ந்தும் தமது மான சீகமான ஆதரவினை வெளிப்படுத்தினார்கள். அவைகள் போராளிகளுக்கு மகிழ்வைக் கொடுத்தன.

இத்திக்குளக் காட்டில் மூத்த போராளி சஞ்சய் பயிற்சிப் பாசறை ஒன்றை நடாத்திக்கொண்டிருந்தார். இங்குள்ள புதிய போராளிகளுக்கான உணவை சமைத்து காவிச் செல்லும் பணிகளில் அண்ணனும், அவரின் மனைவியும் ஈடுபடலானார்கள். இவர்களோடு அருள்சோதியும் இணைந்து பாடுபட்டார். அக்காலப்பகுதியில் தகவல் கசிவு ஏற்படாது இரகசியமாக பணியாற்றியதனால் கடமையின் வேதனை இவர்களின் கை,கால், தலை, தோள்களே அறியும்.

அண்ணனின் தம்பி குட்டியும், பயிற்சி பெற்று தன் சகபோராளிகள் சிலரும் வீடு வந்து செல்ல ஆரம்பித்தனர். குட்டி தன அண்ணனின் மனைவியை பாசத்தோடு அண்ணி என அழைப்பது வழமை. அதனை தளபதி கணேசும் பின்பற்ற அனைத்துப் போராளிகளும் அண்ணி என அழைப்பது வழமையாகியது.

அண்ணனும், அண்ணியும் தம் பிள்ளைகளின் எதிர்கால நலன்கள் எதனையும் சிந்திக்க மறந்தனர். அது கல்வி விடயத்திலும் சரி, நாளாந்த உடல் நலன்கள் விடயத்திலும் சரி, கவனம் எடுக்கமுடியாத நிலைக்குள் தள்ளப்பட்டனர். இவர்கள் போராளிகளுக்காக முழு நாடகளையும் அர்ப்பணிக்கத்தொடங்கினார்கள்.

போராளிகள் நகர்வுகள் கட்டைப்பறிச்சானிலிருந்து வெருகல் என்றும், வெருகலிருந்து கட்டைப் பறிச்சான் என்றும், பள்ளிக்குடியிருப்பிலிருந்த வேறு பற்பல இடங்கள் என்றும் இருக்கும். அந்த நகர்வுகள் இடம்பெறும் போதெல்லாம் இவர்களின் வீடுதான் மாகோ சந்தியாக விளங்கியது.

சூரியன் உச்சிக்கு வந்ததும் காட்டினுள் வெயில் பட கடினப்படும். காட்டினுள் முகாமிட்டிருந்த போராளிகள் கால சுழற்சியில் ஊருக்குள் தங்கிநிற்கும் நாட்கள் அதிகமாகின.

அங்கு மக்கள் ஆதரவு வட்டம் மெல்ல மெல்ல விரிவடைய போராளிகளும் சுதந்திரமாக மக்களுள் உலாவர ஆரம்பித்தார்கள். எங்கும்



உலாவரும் போராளிகள் அண்ணி வீட்டை தம் தாய்வீடாகக்கொண்டனர்.

சஞ்சய், அம்மை நோய் பீடிக்கப்பட்ட இருபது போராளிகளை இவர்கள் வீட்டில் விட்டு பராமரித்தனர். அப்போராளிகள் அனைவரும் சுகம்வரும்வரை அண்ணனும், அண்ணியும் பெற்றோர்களாகவும் சித்த வைத்தியர்களாகவும் பாடுபட்டார்கள்.

கால நகர்வில் சிங்களப் படையினர் தோப்பூரில் முகாம் அமைத்தனர். இதன் பிற்பாடு சிங்களத்தின் தொல்லைகளால் இனப்பாகுபாடு என்பது என்னவென்று ஊர் மக்கள் அதிகம் அறியத்தொடங்கினர். திடீரென ஊர் தாக்குதலுக்குள்ளாகலாம் என்ற அச்சமும், அபாயமும் தோன்ற ஆரம்பித்தது.

ஒரு நாள் தளபதி கணேசும் ராஜேசும் இவர்கள் வீட்டிற்கு வந்து சில மணித்தியாலங்கள் கலந்துரையாடிய பிற்பாடு கணேஸ் மூதூர் நகரை நோக்கிச்சென்று சில மணித்தியாலங்களுள் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் பதற்ற நிலையை தோற்றுவித்தன. மனப் பீதியையும் உண்டாக்கின.

ராஜேஸ் தன்னிடமிருந்த நடைபேசி சாதனம்மூலம் நிலைமையை கேட்டறிந்தபோது வீரத்தனமான தளபதி கணேசின் வீரச்சாவு செய்தியைத்தான் கேட்க முடிந்தது. நெஞ்சுருகும் இச்செய்தியை ராஜேஸ், அண்ணனுக்கு தெரியப்படுத்தும்போது அவரின் குரல் தழுதழுத்துக் கண்களில் நீர் கோர்த்துக் கொள்ள அதற்குமேல் இவர்களால் எதுவுமே பேச முடியவில்லை. இவர்கள் வீட்டில் சில நாட்கள் வெறுமை மிரட்டியது.

இவர்கள் இனிமேலும் தாங்கள் மனம் தளர்ந்திருப்பது மதியீனம் என எண்ணியபடி நெல் அவித்து, அதை காய வைத்து அரிசியாக்கும் பணிகளை மும்முரமாக சுறு; சுறுப்பாகச் செய்ய ஆரம்பித்தனர்.

அண்ணன் விறகு சுமந்தும், காய்கறி, மீன், இறைச்சி வகைகளை நுகர்ந்தும் வந்து சேர்வார். பிள்ளைகள் வெங்காயம் உடைத்தும், தேங்காயைத் துருவியும் கொடுப்பார்கள்.

அண்ணி மூன்றுவேளையும் நெருப்பு வெக்கையில் குளிக்கும் தாயாக, சமையலாளியாக, சுறுசுறுப்பாக இயங்குவார்.

அண்ணி போராளிகளிடம் பெரியோர் சிறியோர் வேறுபாடு இன்றி அனைவரிடமும் காட்டும் அன்பு அபரிமிதமானது. அவர் தாயின் பரிவோடு போராளிகளுக்கு உணவு பரிமாறுவார்.

சில சமயங்களில் போராளிகளின் தொலைத்தொடர்பு நிலையமாக இவர்கள் வீடு இயங்குவதுண்டு. அது போராளிகளின் வருகை பற்றிய செய்திகளை தெரியப்படுத்தியவண்ணம் இருக்கும். முப்பது பேர்கள், நாற்பது பேர்கள், நூறு பேர்கள் என போராளிகளின் வருகைகளை அறிவிக்கப்படும் போதெல்லாம் இங்கு உணவு தயாராக இருக்கும்.

**இ.கபிலன்**

அண்ணி தூங்கும் நேரம் குறைவாகவே இருக்கும். நீண்ட நடைப்பயணத்தில் களைத்து பிந்தி வரும் போராளிகளுக்கான உணவை மிச்சம் பிடித்துக்காத்திருப்பார் அண்ணி.

போராளிகள் தாக்குதலுக்கு செல்லும் நாட்களில் அண்ணியிடம் விடைபெறும் சந்தர்ப்பங்களில் அண்ணி போராளிகளின் கன்னங்களை தன் இரு கைகளாலும் தடவி வழியனுப்பி வைக்கும் தாயாக இருப்பார். போராளிகள் வெற்றியோடு வந்துசேர வேண்டுமென்று மனமுருகி மனப்பிரார்த்தனையிலும் ஈடுபடுவார்.

அண்ணியை அழவைப்பதற்காக போராளிகளால் திட்டமிட்ட பொய்கள் சொல்லப்படுவதுண்டு. அதாவது போராளி ஒருவரின் பெயரைச் சொல்லி அவன் வீரச்சாவடைந்துவிட்டான். அவன் காயப்பட்டுவிட்டான் என அப்பொய்கள் அமையும். அண்ணிமென்மையான சுபாவம் உள்ளவராக இருந்ததனால் அவற்றை மனமார நம்பி அழுது விடுவார்.

கால நகர்வில் திணிக்கப்பட்ட இராணுவ அடக்குமுறை அவலத்தினுள் ஊர் சிக்கிக் கொள்ளத்தொடங்கியது. முஸ்லிம் துணைப்படையினரான "மொக்கு அனிபா" வழித்துணையுடன் சிங்களப் படைகள் நகர்ந்து மக்களை திடுக்குற வைத்தது. இம் மோசமான சூழலில் அண்ணன் தீவிரமாக தேடப்படும் ஒருவரானார்.

ஊர் இரத்தம் குளிக்கும் பூமியாக மாறத்தொடங்கியது. சுமார் ஐம்பது தமிழர்கள் சிங்களப் படையினரால் படுகொலைசெய்யப்பட்டனர். இப்படுகொலைகளால் பள்ளிக்குடியிருப்பு கிராமம் இரத்தம் தோய்ந்த வரலாற்றைக்கொண்ட ஊராகியது.

வேட்டைக்குச் சென்ற கந்தசாமி,நாதன்,சித்திரவேல்,ஆவியாக்குளப் பகுதியில் டயரில் எரிந்த சடலங்களாகினர். இடம்பெயர்ந்து நரியந்தக் குளப்பகுதியில் வாழ்ந்த பதின்மூன்றுபேர் சேருவில முதிரையடி கிரவல் எடுத்த கிடங்கில் பிணமாகினர். சீனிவாசபுரம் ராசா இரவோடு இரவாக இல்லாமல் போனார். மாதவன் கழுத்துவெட்டப்பட்டு முண்டமாகினார். இப்படியாக பலர் சிங்களப்படையினரால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இதற்குப் பின்னர் சிங்களப் படை ஊருக்குள் நுழைந்துள்ளது என்றும், நுழையவுள்ளது என்றும் செய்திகள் பரவிக்கொண்டிருக்கும் பதற்றமான ஊராகியது. வாழ்வோரின் இயல்புநிலை முற்றிலும் மாறியபோது அண்ணனும், அண்ணியும் விடாப்பிடியான போக்குடன் போராளிகளுக்கு நற்பணிகளை செய்துவாழ்ந்தார்கள்.

வரலாற்று திருப்பு முனையாக இந்தியப் படையினரின் கொடுங்கோண்மை ஆட்சியும் வந்தது. அண்ணன் கைதுசெய்யப்பட்டு தோப்பூர் இந்திய இராணுவமுகாமில் சில மாதங்கள் கைதியாக இருந்து விடுதலையாகி ஒரு சில மாதங்களில் மீண்டும் அண்ணன் ஐ.பி.கே.எப் அதிகாரி வேணுகோபாலால் கைது செய்யப்பட்டு கிளிவெட்டி இராணுவ முகாமில் தடுப்பில் வாழ்ந்தார்.

அண்ணி கணவரின் பிரிவால் துவண்டு, ஐ.பி.கே.எப் தொல்லைகளால் மனவிரக்திக்கு உள்ளாகியபோதிலும் அவர் அஞ்சாத பெண்ணாக இருந்து போராளிகளுக்கு சேவகம் செய்தே வந்தார். உயிரைப் பணயம் வைத்தே விடுதலைப் போராட்டத்திற்காக ஓயாது உழைத்தவர்.

இரண்டாம் கட்டப்போரின் வன்முறை வெள்ளத்தில் அண்ணி குடும்பமும் அள்ளுண்டு அவல வாழ்விற்குள் தள்ளப்பட்டது. இவர்கள் இலக்கந்தை கோப்பியாகக் குளப் பகுதியில் சிறு குடிசை அமைத்து வாழ்ந்தனர். இங்கு கண்ணதாசனின் தாயும், தந்தையும் இவர்களுடன் இணைந்து போராளிகளுக்காக முழுமையாக உழைத்தார்கள். ஆசீ பொறுப்பின் கீழ் போராளிகள் இவர்களுக்கு அண்மிய காட்டுப் பகுதியிலேயே முகாமிட்டிருந்தார்கள்.

இடம்பெயர்வு ஏற்படுத்திய வறுமை என்ற துன்பம் இவர்களுக்கு பல துயரங்களை தானாகவே கொடுத்துவிடும் சூழ்நிலைகள் ஏற்பட்டபோதிலும் போராளிகளுக்கு பணி செய்வதில் இவர்களிடம் வறுமை இருந்ததேயில்லை. போராளிகளுக்கு பணிவிடை செய்து மனநிறைவோடு வாழ்ந்தனர்.

நாட்கள் செல்லச் செல்ல சிங்களப் படையினரின் தீவிர தேடுதல் வேட்டையில் இவர்கள் தப்பிப் பிழைத்த நிகழ்வுகள் இப்பொழுது நடந்தன. ஆனாலும் இவர்கள் வாழ்ந்த குடிசை தப்பியதே இல்லை. ஆசீரால் மீளவும் குடிசை போட்டுக் கொடுக்கப்பட்ட போதிலும் இவர்கள் வாழ்க்கை நிச்சயமற்றதாகவே தினம் தினம் நகர்ந்தது.

கால ஓட்டத்தில் போராளிகளின் ஒழுங்குபடுத்தலுக்கு அமைய இவர்கள் பரிச்சயமில்லாத யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். ஒரு சில ஆண்டுகளின் பின்பு தொடர் இடம் பெயர்வுகளை சந்தித்தார்கள். முறிகண்டி, கிளிநொச்சி, உடையார்கட்டு என தம் இருப்பிடங்களை மாற்றி மாற்றி இருக்கும் போர்ச்சூழலில் சிக்கித் தவித்தார்கள்.

இவர்களின் பிள்ளைகளான புவி, தேவன், புலிகளாகி சமர்க்களங்களில் பங்குபற்றி வீரத் தழும்புகளுடன் வீடு வந்து சேரவும் சமாதானச் சூழல் தோன்றி சில மாதங்களின் பின்னர் குடும்பமாக சொந்த ஊருக்குச்சென்றார்கள்.

அங்கு வளவு பாழ்பட்டுக் கிடந்தது. வீடு பாழடைந்து அழிந்து சோகத்தால் கவிந்தும், பொலிவிழந்தும் காணப்பட்டது.

இவர்கள் முற்றிலும் புதிதான ஒரு வாழ்க்கையைத் தொடங்கவேண்டிய நிலையில் மீண்டுமொருமுறை தைரியத்தை வரவழைத்துக்கொண்டு வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். இரு பிள்ளைகளும் மீளவும் இயக்கப் பணிகளில் தம்மை முழுமையாக இணைத்துக்கொண்டார்கள்.

இவர்களது வீடும், முற்றமும், மரங்களும் மாவீரர்களின் வீரக் கதைகளை தெரிந்தே வைத்துள்ளன. போராளிகளின் சுவாரஷ்யமான அரட்டைகள், சுமந்த துன்பங்களை பதிவுசெய்தே வைத்துள்ளன. தளபதிகளின் தாக்குதல் திட்டங்களை அப்போது இரகசியமாக பாதுகாத்ததுபோல் இப்போதும் இரகசியம் பேணுகின்றன.

இக்குடும்பத்தினர் தங்கள் குடும்ப நலன் கடந்து போராளிகள் மீதுள்ள நேயத்திற்காக பொதுமை வாழ்வை வாழ்ந்தனர். இவ்வுயர் சிந்தனையும், உயரிய பண்புகளாலுமே இவர்களை தமிழர் வரலாறு நினைவில் கொள்கின்றது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 31 . 12 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# துயர் தந்து விடை பெறும் ஆண்டு

கடந்த ஆண்டு டிசெம்பர் இருபத்தாறாம் திகதி ஈரானில் பெரும் பூகம்பம் ஒன்றை இயற்கை ஏற்படுத்தி சுமார் ஐம்பதினாயிரம் வரையிலான மனித உயிர்களைக் காவுகொண்டு அந்த ஆண்டு கடந்துபோனது.

இதேபோன்று இந்த ஆண்டும் டிசெம்பர் இருபத்தாறாம் திகதி ஆசியாவின் கரைகளெங்கும் வீசியெறிந்த சுனாமி, அலை வீச்சில் பல ஆயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவுகொண்டபடி இந்த ஆண்டும் இன்றுடன் கடந்து போகிறது.

உலகின் எப்பாகத்திலாயினும் மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன என்றால் அதை எந்த மனித இனத்தாலும் சகித்துக்கொள்ளமுடியாது.

கடந்த ஆண்டு எப்படி ஈரானில் ஆயிரக்கணக்கான மனித உயிர்களும் பல பில்லியன் பெறுமதியான சொத்துக்களும் இயற்கையின் சீற்றத்தால் அழிக்கப்பட்டதோ அதேபோன்று இந்த ஆண்டு ஆசியாவின் கரைகளில் வீசியெறிந்த அலைக்கரங்களால் ஈழத்தமிழ் மக்களின் பல ஆயிரம் உயிர்களும், பல பில்லியன் பெறுமதியான சொத்துக்களும் எங்களின் வரலாற்றை சுமந்த நகரங்களையும் இழந்துபோய் இருக்கிறோம்.

இந்த இழப்புகளுக்குப் பின்னால் ஈடுசெய்யவே முடியாத மனித சோகங்களை சுமந்தபடி அடுத்த ஆண்டை ஈழத்தமிழ் மக்கள் வரவேற்கின்றனர்.

இங்கே குறிப்பிடவேண்டியதொரு துயரம் யாதெனில் பெரும் போரை சந்தித்த ஈழத்தமிழ் மக்கள் கடந்த மூன்றாண்டுகளாக அமைதிவழியில் பற்றுக்கொண்டு எங்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஒரு உருப்படியான கட்டமைப்பை கோரிநின்றபோதும் சிறிலங்கா அரசால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் எந்த உதவிகளும் இன்றி எமது துயரை நாமே சுமக்கும் இனமாக நிற்கிறோம்.

இந்தப்பெரிய தேசியத் துயரத்தை ஒரு அரசுக்கு நிகராக தமிழர் தாயகத்தில் உடனடியாக சமாளித்து பெரும் உதவிகளை சர்வதேச சமூகத்திடம் வேண்டியபடி புலிகள் இயக்கம் காத்திருக்கிறது.

ஆனால், இதுவரை உதவி வழங்கும் நாடுகளும் அமைப்புகளும் சிறிலங்கா அரசிற்கே தமது உதவிகளை நல்குவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

பாரபட்சம் காட்டப்படுவதாலேயே எமக்கான ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் தேவையெழுந்தது. இப்பொழுது அதே பாரபட்சத்தைக் காட்டும் அரசிடம் வழங்கப்படும் உதவிகள் எந்த பாரபட்சமுமின்றி எமது மக்களை வந்தடையுமா? என்பது சந்தேகமே.

இந்நிலையில் வெறுமைகளால் விரக்திக்குள்ளான எமது மக்களை மேலும் விரக்திக்குள்ளாக்காது செயற்படவேண்டிய பொறுப்பு சர்வதேச நாடுகளுக்கு உள்ளது.

அத்தோடு இன்று தாயகம் எங்கெனும் நிகழ்ந்திருக்கும் இந்த பெருந்துயர் கூட எமது மக்களுக்கான உதவிகளை உருப்படியாகப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒரு கட்டமைப்பு ஒன்றிற்கான தேவையையே ஏற்படுத்தியுள்ளது. என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

தொடரும் ஈழத்தமிழ் மக்களின் துயரம் நீண்டு கிடந்த கடலெங்கும் நீண்டு விரிந்த துயரத்தைப் போல அடுத்த ஆண்டும் நீள்வதற்கு அனுமதிக்கக்கூடாது.

இந்த வகையில் மேலும் மேலும் வெறும் வரட்டுத்தனங்களுக்குள் ஒரு இனத்தின் தேவையை பலிகொடுக்க அரசை சர்வதேச சமூகம் அனுமதிக்கக் கூடாது என்பதே எம் மக்களின் பேரவா.

போராலும், இயற்கையாலும் இடியுண்டு, சிதையுண்டு கிடக்கும் எங்கள் தேசத்தைக் கட்டியெழுப்ப கைகொடுக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உண்டு.

இதேநேரம் பெரும் இடரை நாம் சந்தித்தபோதும் கலங்காது தாங்கிக்கொள்ளும் வல்லமை கொண்டவர்களாக எம்மை கட்டி வளர்த்திருந்தோம். அதேபோன்று எங்களுக்கானவையை நாங்களே உருவாக்கி எங்களை நம்பி நாங்கள் இருக்கவேண்டும். எங்களுக்கானவையை இந்த ஆண்டில் நாம் கேட்போம். மறுக்கப்படுமாயின் அடுத்த ஆண்டில் எங்களுக்கானவையை நாமே எடுப்போம் என சபதம் கொள்வோமாக.

# நோர்வேயின் உதவியும் சமாதான எதிர்பார்ப்பும்



இலங்கை உலக வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையின் ஒரு பகுதியை நோர்வே அரசு நோர்வே நம்பிக்கை நிதியத்தின் ஊடாக 1.13 மில்லியன் அமெரிக்க டொலரை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இத்தொகையை இலங்கை சார்பில் நோர்வே உலக வங்கிக்கு வழங்கியுள்ளது. நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குச் சென்று விலைவாசிகள் இமயமாய் உயரும் இவ்வேளையில் இலங்கை உலக வங்கிக்கு வருட முதலில் செலுத்த வேண்டிய கடன் தொகையை நோர்வே அக்கறையாக செலுத்தியுள்ளது. இத்தொகை யினை வழங்கிய நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் "இந்நிதியினை கிராமிய அபிவிருத்திக்கும், பொருளாதாரத்துக்கும், சமாதான முன்னெடுப்புகளுக்கும் ஏதுவாய் அமையும்" என கூறியுள்ளார்.

இந்நிதி கிராமிய அபிவிருத்திக்கும், பொருளாதாரத்துக்கும் உதவியாய் இருந்தாலும் சமாதான முன்னெடுப்புகளுக்கு எவ்வாறு இந்நிதி உதவப் போகிறது?

நோர்வே அரசு இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த கடும்பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. சமாதானத்துக்கு தடையாக இரண்டு பாரிய சக்திகள் செயற்படுகின்றன. ஒன்று தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி மற்றையது ஜாதிக ஹெல உறுமய. சமாதான முயற்சியை தொடர்ந்து கொண்டு செல்வதற்குத் தடையாக இருக்கும் இந்த சக்திகளைச் சமாளிக்க வேண்டுமானால் அவரவர்க்கு எவைதேவையோ அவற்றைக் கொடுத்து சமாளித்துவிட நோர்வே முனைகிறது. அதனுடைய ஓர் அங்கம்தான் இலங்கை அரசு உலக வங்கிக்கு செலுத்தவேண்டிய ஒரு தொகை நிதியை நோர்வே செலுத்தி இலங்கை மீது தான் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிக்காட்டியுள்ளது. இதில் குறிப்பாக சமாதான முன்னெடுப்பையும் நோர்வேயின் நடுநிலையையும், முழுமையாக எதிர்க்கும் ஜே.வி.பி திருப்தியடைய வேண்டும் என நோர்வே எண்ணுகிறது. எனவேதான் பொருளாதார நெருக்கடியில் அல்லாடும் அரசுக்கு நிதி வழங்குகிறது. அதனூடாக அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி திருப்தியடைந்து சமாதான விடயத்தில் ஒத்துழைப்பு நல்கும் எனும் நப்பாசை கொண்டு நோர்வே செயற்படுகிறது. இதனை உள்நோக்கமாகக் கொண்டே நோர்வேத்தூதுவர் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஏதுவாகவும் இந்நிதி உதவும் எனக் கூறியுள்ளார்.

அண்மையில் ஜே.வி.பியினர் நோர்வே பக்கசார்பாக செயற்படுகிறது எனக்குற்றம் சாட்டியது மட்டுமல்லாது இதற்கு முன்னர் கூட பலதடவை நோர்வேயின் கொடியை எரித்து அவமானப்படுத்தியுள்ளனர். அதை விட இடைக்கால நிர்வாகத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சு மேசைக்கு செல்வாரேயானால் அரசைக்கவிழ்ப்போம் என ஜே.வி.பி கூறிவருகின்றது. இதனால் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளால் ஜே.வி.பியினர் சமாதான விரோதிகள் என இனங்காணப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதனை ஜே.வி.பிக்கு விழுந்த 'அடி' என்று நாம் கொள்ளலாம். ஏனெனில் நோர்வே ஜே.வி.பி விடயத்தில் 'சாம,பேத, தான,தண்டம்' என்ற நான்கு வகைகளிலும் அணுகியுள்ளது வெள்ளிடைமலை. இலங்கைக்கு நிதி வழங்கியது தானம் எனில் எச்சரிக்கப்பட்டது தண்டம் எனக் கொள்வதில் கருத்து வேறுபாடுகள் எவருக்கும் இருக்காது.

சமாதானத்தின் மற்றைய எதிரிகளான குறுகிய காலத்துக்குள் முற்று முழுதாக இவை இனவாதக் கருத்தை முன்வைத்து நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்பது ஆசனங்களைப்பெற்று 'யுத்தம் சரணம்' என முழங்கும் பிக்குமாரை நோர்வே சமாளிக்க முயலவில்லையா? எனும் கேள்வி எம்மனதில் எழுகிறதல்லவா.

ஜாதிகஹெல உறுமயவைப் பொறுத்தவரை அக்கட்சி மதவாதக்கட்சி எனவே இவர்களைச் சமாளிக்க மதச்சார்பான செயற்பாடே எடுபடும் என உணர்ந்த நோர்வே அனுராதபுரத்தில் பாரியளவிலான விகாரை ஒன்றை அமைக்க நிதி வழங்கியுள்ளதுடன் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் தன் பாரியார் சகிதம் சென்று இவ் விகாரையின் கட்டுமான வேலைகளை பார்வையிட்டுள்ளார். அப்படியானால் நோர்வே எந்தவொரு காலத்திலும் புத்தமதத்திற்கு எதிரான செயற்பாட்டை மேற்கொள்ளாது என்பதும் சமாதான முயற்சியில் இதயசுத்தியுடன் தாம் செயற்படுவதையும் மதவாதிகளுக்கு உணர்த்தவும், இந்த விகாரையும், அதனைப் பார்வையிட நோர்வேத்தூதுவர் சென்றதும் உணர்த்தியிருக்கும் இதன் மூலம் சமாதான விடயத்தில் ஹெல உறுமயவை சமாளிக்க எடுத்த நடவடிக்கையாக இதனை எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு நோர்வே இலங்கை இனப்பிரச்சினையை தீர்க்க இப்போது தானம், தண்டம், என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது. எனவே இனிவரும் காலங்களில் சமாதான முன்னெடுப்புக்களில் முன்னேற்றம் காண வழங்கப்பட்ட நன்கொடைகளும் நடுநிலைநாடு என்பவற்றுக்கப்பாற்பட்டு மேற்கொள் ளப்பட்ட பிரத்தியேக முயற்சிகளின் பலனை வரும் மாதத்துக்குப் பின்னரே காண முடியும். ஏனெனில் அண்மையில் ஏற்பட்ட சுனாமியால் சமாதானம் அதற்கு எதிரான பேரினவாதம் உள்ளிட்ட அனைத்தும் அடிபட்டுப் போய்விட்டது. மனிதாபிமான உதவிகளும், அடிப்படைத்தேவைகளும். முன்நிறுத்தப்பட்டுள்ளன. எனவே சமாதான முயற்சிகள் தலைதூக்குகின்றபோதுதான் இந்தப் பேரினவாத சுனாமிகளும் தலைதூக்கும். அப்போதே நோர்வேயின் 'சமாளிப்பு' நடவடிக்கையின் பிரதிபலிப்புத் தெரியும்.

அ.பிரகாஷ்

# பாரபட்சம் காட்டாது அரசு உதவப் போவதில்லை

இலங்கையின் வரலாற்றில் ஏற்பட்ட பாரிய இயற்கை அனர்த்தமாக அண்மைய வெள்ளப் பெருக்கு அமைந்துவிட்டது. இனவேறுபாடின்றி ஆயிரக் கணக்கில் ஒருசில மணிநேரத்தில் இலங்கை மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சொத்திழப்பு கணக்கிடப்படாதபோதும் என்றுமில்லாதளவு ஏற்பட்டிருக்கிறது. இவற்றை நிரப்பீடுசெய்ய மிக நீண்டகாலம் ஏற்படும் என்பதும்



டெடுக்கவும், நாட்டைக் கட்டியெழுப்பவும், விடுதலைப்புலிகளோடு இணைந்து பணியாற்றப் போவகாகவும் கூறியுள்ளார். இது அவர் 2004 இல் விட்ட எல்லா ஜோக்கையும் மிஞ்சிவிட்டது என்றே கூறலாம்.

இயற்கை அழிவைக் காட்டில் உலக சமூகத்திடம் உதவி கோரியதுடன் பலநாடுகள் பொருளாதார உதவி களை வழங்கிக்கொண்டிருக்கின்றன. இன்னும் பல நாடுகளிடம் அவரது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தியா, ரஷ்யா என்பன உலங்குவானூர்திகள் பலவற்றை வழங்கியிருப்பதுடன் மருத்துவ உதவிக்கு முன்வந்துள்ளன. சர்வதேச சமூகத்திடம் இதுதொடர்பான கோரிக்கையை மீண்டும் மீண்டும் சனாதிபதி முன்வைத்து வருகின்றார். இவ்வாறு சர்வதேச சமூகத்திடம் விடுத்த விண்ணப்பத்திற்கு நோர்வே, யப்பான் என்பன இணங்கியிருப்பதுடன் நிதி உதவியை உடனடியாக வழங்கமுன்வந்துள்ளது.

இத்தகைய உதவியின் அதிகரிப்பை சாத்தியப்படுத்தவே சனாதிபதி போட்ட உபாயமா காரணமாகும். பிரதமர் தலைமையில் நிகழ்ந்த கூட்டத்தில் கூட தமிழர் பற்றியவிடயம் பாரபட்சமாகவே கையாளப்பட்டுள்ளது. இதுவரை அதிக பாதிப்பை எட்டியுள்ள முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அரசாங்கத்தின் உதவியும் கிட்டவில்லை.

தமிழ் மக்களின் துயரமான வாழ்க்கைக்கு வித்திட்ட அரசே மேலும் பாரபட்சத்தைக் காட்டி நிலைமையை மோசமடையச் செய்கின்றது. இது வரை காலமும் தமிழர் என்பதற்காக பாரபட்சம் காட்டியதுபோல் தற்போதும் அது செயல்படுகின்றது. உறவுகளை இழந்து, கணவனை இழந்து பிள்ளையை இழந்து மனைவி, பிள்ளைகளை இழந்து உடமைகளை இழந்து துயரப்படும் போதும் பாரபட்சத்தை அரசு காட்டுவதன் கொடுமை வேறு எந்த நாட்டிலும் நிகழாது. தனது மக்கள் தனது பிரஜைகள் எனக்கூறும் அரசாங்கம் இந்த மக்களுக்கு என்ன நிவாரணத்தை வழங்கியது. பொதுமக்கள் இளைஞர்கள் பாடசாலைப் பிள்ளைகள் பிரதேச நலன்விரும்பிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மட்டுமே என்பதை மட்டும் சிறுவர் நலன் சார்பான அமைப்பு மட்டும் அல்லாது எல்லா அமைப்புக்களும் ஊதிப் பெருப்பித்துக்கொள்வதனைக் காணலாம். இயற்கை அழிவுக்கு மட்டும் தங்கள் பணியில்லை என்பவைகள் எப்படி சிறுவர் பிரச்சினையையோ அல்லது வேறு சில பிரச்சினைகளையோ முதன்மைப்படுத்தலாம்?

வடகிழக்கிற்கு ஏற்பட்ட அழிவை அரசாங்கம் நிவர்த்தி செய்ய வேண்டுமாயின் விடுதலை



புலிகளிடம் நிதியையோ மற்றும் உதவிகளையோ ஒப்படைப்பதாகும். சர்வதேச சமூகங்களும் சரி அரசு சாராத அமைப்புக்

பயனும் எட்டாதபோது தற்போதா? பயன்கிடைக்கப் போகின்றது. அது எந்தப்பெரும்பான்மை ஆட்சியாளரின் மனோ நிலையிலும் ஏற்படப்போவதில்லை.

எனவே வடகிழக்கு மக்களுக்கு ஏற்பட்ட அழிவகளுக்கு அரசாங்கத்திடம் எத[illegible]னையும் அதிகமாக எதிர்பார்க்க முடியாது. அரசாங்கம் அனுமதிக்கு நிதியினையே சுருட்டும் அரசாங்க ஊழியர்கள் இருக்கும் போது எப்படி நிவாரணம் சாத்தியமானதாக அமையும். அரசாங்கத்தின் பாரபட்சமான போக்கை மாற்றுவதை விட பொருத்தமான அரசாங்கம் ஒன்றை வடகிழக்கில் உருவாக்குவதே மாறுதலாக அமையும் அந்த வகையில் விடுதலைப் புலிகள் வட கிழக்கு மங்களுக்கு

நிகழ்ந்த மனித அழிவு மட்டும் ஜீரணிக்கமுடியாத தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கையில் மட்டுமல்ல ஆசியாவையே ஒரு குலுக்குலுக்கியுள்ளது. இந்தியா, இந்தோனே சியா, தாய்லாந்து, இலங்கை என நீருக்கடியில் நிகழ்ந்த வெடிப்பு பாரிய சேதத்தினை விளைவித்துள்ளது.

இயற்கைக்கு இனங்களின் வேறுபாடு நோக்காது தாக்கினாலும், இயற்கைக்குள் வாழும் மனிதனும் அவனது இயல்பும் அதனை உணரத்தவறுவதில்லை. பல நேரத்திற்கு பிந்திய நிலையில் கூட இலங்கை வானிலையாளர்களால் உணரவோ, எச்சரிக்கவோ தொழில்நுட்ப அறிவோ வாய்ப்போ இருக்கவில்லை. ஆனால், அது இல்லாவிட்டாலும், பரவாயில்லை. அழிவுக்குப் பின்பாவது கரிசனையும் அக்கறையும் காட்டினால் போதாதா அதனைக் கூட இலங்கை ஆட்சியாளர்களோ. அரசாங்கமோ செய்யவில்லை. மாறாக இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சனாதிபதி உலக நாடுகளிலிருந்து உதவயையும், வாய்ப்புக்களையும் பயன்படுத்த விரும்புகிறார்போல் தெரிகிறது. இதனை சற்று விரிவாக நோக்குவோம்.

இலங்கையின் சனாதிபதி லண்டனிலிருந்து நாடு திரும்பியுள்ளார். தனது பிள்ளைகளோடு புது வருடத்தைக் களிக்க பயணமானவர். இடை நடுவில் திரும்ப வேண்டிய நிலையை இயற்கை ஏற்படுத்தி விட்டது. அவர் நாடு திரும்பும் போது பி.பி.சிக்கு அளித்த பேட்டி ஒன்றிலே ஏற்பட்ட நிலையை இயற்கை அழிவிலிருந்து நாட்டை மீட்கவே விடுதலைப்புலிகளின் இணைவு என்ற அறிக்கை காணப்படுகின்றது. சனாதிபதி மிக நீண்ட காலமாக இலங்கையின் அரசியலில் அறிக்கை அரசியலாக (**Report Polutics**) மாற்றிவருகின்றார் குறிப்பாக பேச்சுவார்த்தைக்குத்தயார், இடைக்கால வரைவின் கீழ் பேசத்தயார். அரசு தயார் விடுதலைப்புலிகளே நிபந்தனை விதிக்கின்றனர் என பல அறிக்கைகளை சர்வதேசத்திற்கும், சில புத்திஜீவிகளுக்கும் தெரியப்படுத்திவருகின்றனர். எல்லோரும் அவ்வறிக்கையை நம்பிக்கொண்டு சாத்தியப்படாத சூழல் ஏற்பட்டுவிடுமென கனவு கண்டுகொண்டிருக்கின்றார்கள். அப்படியான பட்டியலில் ஒன்றாகவே விடுதலைப் புலிகளுடன் இணைந்து இயற்கை அழிவிலிருந்து நாட்டைக்கட்டி வளர்க்

**ஐங்கரன்**

கப் போவதாகக்கூறியுள்ளார்.

இதுபற்றி சனாதிபதி விடுதலைப் புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்தினாரா அல்லது கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்பட்டதா அல்லது இரு தரப்பும் சந்தித்து இது பற்றி பேசியதா? நிச்சயமாக இதில் எதுவும் நிகழவில்லை. அவ்வகையான சந்தர்ப்பத்தில் எந்த முன்னாயத்தத்தையும் முன்வைக்காமல் அறிக்கை விடுத்து நிலைமையை சரிப்படுத்தலாமென கணக்கும் போடுகிறார்.

உண்மையில் தமிழர் மீதான இயற்கை அழிவின் பாதிப்புக்களை சீர்படுத்த அரசாங்கத்தின் அசமந்தப்போக்குக் தங்களின் முயற்சியால் இந்த மக்களின் உடனடித்தேவையைப் பூர்த்திசெய்துவருகின்றனர். இந்த மக்களின் பாதுகாப்பான வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்க முடியாத அரசாக இருந்தாலும் அழிவை ஈடுசெய்ய உதவலாம் அல்லவா. இதில் கூட அரசாங்கம் இனப் பாகுபாட்டை முதன்மைப்படுத்த விரும்புகின்றது. அதனையே அலரிமாளிகையில் நடந்த கட்சி உறுப்பினர் மட்டத்திலான கூட்டம் உணர்த்துகின்றது.

இந்த அரசாங்கத்தின் போக்கைப் போன்றே அரச சார்பற்ற அமைப்புக்களின் நிலைமையும் காணப்படுகின்றது. அரச சார்பற்ற அமைப்புக்களின் திருப்திப்படும்படியாக இல்லை. ஆனால், சிறார்களை புலிகள் படையில் சேர்க்கின்றார்கள் களும் சரி உதவிகளை விடுதலைப்புலிகளின் நிர்வாக அலகுக்கூடாக மேற்கொள்வதே உசிதமான வழியாகும். சனாதிபதி குறிப்பிடுவதுபோல் விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படுவது சாத்தியப்பாடுடைய விடயமல்ல. மிக நீண்ட காலத்திற்கு முன்பு உருவாக்கப்பட்டுள்ள 'சிரான்' அமைப்புக்கு ஏற்



பட்ட நிலையே இதற்கும் ஏற்படும். ஒரு போதும் இலங்கை அரசாங்க அமைப்புக்களோ, நிறுவனங்களோ தமிழர் மீதான பாரபட்சத்தை மறந்து சுயாதீனமாக தொழிற்படாது அதற்கான வாய்ப்பினை பரீட்சிப்பதால் எந்தப் பயனும் ஏற்படாது. 50 வருடங்களாக வாய்ப்புப் பார்க்கப்பட்டு எந்தப் வேண்டிய உதவிகளை வழங்கும் நிலையை உருவாக்குவது அவசியம். அதனை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்துவதுடன், பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த உள்ளூர் நன்கொடை அமைப்புக்கள், நிறுவனங்கள் நலன்விரும்பிகள் உதவுதல் வேண்டும். தெளிவானதொரு பாதையில் பங்கீட்டைச் சாத்தியப்படுத்தினால் தமிழ் மக்கள் ஓரளவாவது இழப்பீட்டிலிருந்து தப்பிப் பிழைத்துக் கொள்ளலாம். எனவே சனாதிபதியின் அறிக்கை அரசியல் சாத்தியப்பாடான எந்த விளைவையும் தரவல்லதல்ல. தமிழ் மக்களுக்கும் எப்படி மீள்குடியேற்றத்தை உருவாக்கினார்களோ, அப்படியே இயற்கை அழிவையும் எதிர்கொள்ள தயாராதல் வேண்டும். ●

# விரைந்து முயல வேண்டும்

தமிழீழமக்களின் வரலாற்றில் மிகவும் துயரம் தோய்ந்த நாளொன்று கடந்தவாரம் கழிந்து போயுள்ளது. இயற்கை யின் ஒரு சிலநிமிட சீற்றம் ஆயிரக்



கணக்கான மக்களை மறக்க முடியாத, ஆற்றமுடியாத துயருக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. கற்பனையில் கூட என்றுமே எழுந்திரமுடியாத அதிர்ச்சி நிகழ்வாக அது அமைந்திருக்கிறது.

ஒருசிலநிமிட நேரத்தில் சொந்தபந்தங்கள், சுற்றம், சூழல், வீடு, உடமை அனைத்தையும் இழந்த கொடூரம் கூடப் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

கடற்கரைகளிலிருந்து சிலநூறுமீற்றர் பிரதேசத்தைத் துடைத்தெறிந்து துவம்சம் செய்த பேரலைகள் தமிழ்மக்கள் மனதில் என்றுமே நீங்காத துன்பத்தை விதைத்து விட்டிருக்கிறது.

எனினும் இதிலிருந்து மீளத்தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்துசெயற்படவேண்டிய வேளையிலே அவர்கள் இருக்கின்றனர். இந்தத்துன்பம் தனியே இதில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டும் உரித்தானதொன்றல்ல என்பது உறுதியானது. தேசியரீதியாக ஒன்றுபட்டிருக்கின்ற அனைத்துத் தமிழ்மக்களுக்குமானது என்பது அனைவராலும் உணரப்பட்டிருக்கிறது. இதிலே நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களின் துன்பத்தை முழுத்தேசியத்தினதும் துன்பமாகக் கருதித் துடைத்தெறிய அனைத்துத் தமிழ் மக்களுமே துடித்து நிற்கின்றனர்.

இது இயல்பான ஒன்றாக அமைந்துவிட்டது எனலாம். ஏனெனில் கடந்த 20 வருடங்களாகத் தம்மீது சுமத்தப்பட்டுள்ள ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடிய இனம் தாம் போராட்ட நெருக்கடியில் கற்றுக்கொண்ட அனுபவத்தின் வாயிலாக இயற்கை விளைவித்த நெருக்கடியை எதிர்கொள்ளவேண்டிய வல்லமையைப் பெறவேண்டியுள்ளன.

இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கங்கள் தமிழ்மக்கள் மீது கருணைகாட்டியதில்லை. தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்கச் சுமார் 17 வருடங்கள் தமிழ்மக்கள் மீது பொருளாதாரத்தடைகளைச் சுமத்தி அவர்களைத் துன்புறுத்தி வந்த ஆட்சியாளர்கள் இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் உதவுவார்கள் என எதிர்பார்க்கமுடியாது. அவர்கள் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பை உலகநாடுகளுக்குக் காட்டி உதவிகளைப்பெற்று என்ன செய்வார்கள் என்பதைக் கடந்த காலவரலாறு காட்டுகிறது.

நாட்டின் அபிவிருத்திக்கென்று கூறிப்பெற்ற கடனுதவிகளைக்கூடத் தமிழ்மக்களை ஒடுக்குவதற்கு ராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தப்பயன்படுத்தியவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள். இனியும் கூட தமிழ் மக்களின் பேரிழப்பின் மூலம் இலாபம் தேடவே அவர்கள் முயல்வார்களே தவிர தமிழ்மக்களின் துயர்களைத் துடைக்கமுயலப்போவதில்லை.

இந்நிலையில் இந்தத் தேசிய அனர்த்தத்திலிருந்து விடுபட ஒன்றிணைந்து செயற்படவேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கே உரியதாக இருக்கின்றது.

அதிலும் 17 ஆண்டு காலப் பொருளாதாரத் தடையினால் பாதிக்கப்பட்டு அதன் நெருக்கடியிலிருந்து சிறிது கூட மீளமுடியாதிருந்த இந்த மக்கள் தம்மிடமிருந்த அற்பசொற்ப வளங்கள், தொழில் உபகரணங்கள் அன்றாடப்பாவனைப் பொருட்களில் இருந்து உடை, உறைவிடம் என்பவற்றை இழந்துள்ளதுடன் பெருமளவானோர் தமது உழைப்பாளர்களைக்கூட இழந்திருக்கின்றனர்.

இந்த இழப்புக்களையெல்லாம் ஈடுசெய்வதற்குப் பெரும் முயற்சியும் இந்த மக்கள் மீது அதிவிசேட கவனிப்பும் தேவையாக இருக்கின்றது.

இதற்கு அனைத்துத் தமிழ்மக்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியுள்ளது. இதில் முக்கியமானது என்னவெனில் சர்வதேசத்தை ஏமாற்ற முயலும் சிறிலங்கா ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளை முறியடிப்பதாகும். இதனை உதவுபவர்கள் கூட உணரவேண்டும்.

அதாவது இன்னலுற்றிருக்கும் தமிழ் மக்களைக்காட்டி சிறிலங்கா அரசாங்கம் பயன்பெற முயலுவதுடன் இந்த மக்களை மேலும் துன்பத்துக்குள் ஆழ்த்தும் குணவியல்பையே இன்றுவரை சிறிலங்கா ஆட்சியாளர்கள் செய்துவருகின்றனர்.

இன்று வடக்குக் கிழக்கிலுள்ள பெருமளவு மக்கள் படும் துன்பத்தை வெளிப்படுத்தாத சிறிலங்கா ஆட்சியாளர்களின் ஊடகங்களின் செயற்பாடு அவர்கள் எதிர்காலத்தில் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

தென்பகுதியிலுள்ள ஒரு பகுதி மக்களும் இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையே. ஆனால், அவர்களுக்கு உதவக்கூட சிங்கள ஆட்சியாளர்கள் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டதாக இல்லை.

மிக அண்மையில் கூட துன்பமுற்ற தென்பகுதி மக்களுக்கு இரக்கமனம் படைத்த சிலர் வழங்கிய உதவியைச் சுருட்டி மோசடி செய்த சிறிலங்கா அரச இயந்திரத்தின் செயற்பாடு வெளிப்பட்டது. எனவே இது குறித்து எச்சரிக்கையுடன் இருந்து பாதிக்கப்பட்ட மக்கள் அதனிலிருந்தும் நீங்க நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. ஏனெனில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் அனுதாபம் காட்டி சரிவர நடப்பார்கள் எனச் சிறிதும் எதிர்பார்க்க முடியாது.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# விபத்துக்களால் பறிக்கப்படும் உயிர்கள்

விபத்துக்கள் என்பதில் மிக மோசமானது வீதிவிபத்துக்கள் இந்த விபத்துக்கள் மூலம் பெறுமதி மதிப்பிடமுடியாத உயிர்கள், உடமைகள் இழக்கப்படுகின்றன. அல்லது உடல் உள ரீதியான இழப்புக்கள் ஏற்படுகின்றன. இதனை தடுக்க வேண்டியவர்கள் யார் என்பதும் இதனை தடுப்பதற்கான வழிமுறைகள் எது என்பது பற்றியும் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டிய விடயம். அதாவது ஒரு வீதிப் பாவனையாளர் வீதியை பயன்படுத்தும் போது தனது நலனைக் கருத்தில் கொண்டு தனக்கே உரித்தான வகையில் வீதியை பயன்படுத்துவதை விடுத்து தனக்குப் பின்னால் வருகின்ற அல்லது முன்னே வருகின்றவர்களை பாது காக்கும் படி பயன்படுத்துதல் வேண்டும். இது வீதிவிபத்து மட்டுமல்ல பொதுவான சொத்துக்களுக்கு அல்லது அவற்றை கையாளுகின்ற ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது.

ஏ-9 சாலை திறந்து விடப்பட்ட பின்னர், அதாவது கடந்த 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், 08 ஆம் நாளில் இருந்து ஒக்டோபர் 2004 வரையும் ஏ-9 சாலையில் மட்டும் இடம்பெற்ற 422 விபத்துக்களில் 43 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துகள் யாவும் வாகன விபத்துக்களாகவே இருக்கின்றன.

கடந்த 2002 ஏப்ரல் 08 ஆம் நாள் முதல் இதே ஆண்டு, டிசம்பர் மாதம் வரையுமான எட்டுமாத காலத்தில் வீதிகள் உரிய முறையில் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்பட்ட நிலையிலும் அதிவேகமாக வாகனங்களைச் செலுத்தி வாகனங்கள் விபத்துக் குள்ளாகி 84 விபத்துக்கள் நிகழ்ந் துள்ளன. இதில் 06 பேர் உயிரிழந் துள்ளதுடன் 45 பேர் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். 33 ஊர்திகள் கடும் சேதத்திற்கு உள்ளாகியிருந்தன.

அடுத்து 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விபத்துக்களின் வீதம் அதிகரித்துக் காணப்பட்டது. அதாவது 174 வீதிவிபத்துக்களில் 16 பேர் உயிரிழந்துள்ளதுடன் 105 பேர் காயமடைந்திருந்தனர். 53 ஊர்திகள் சேதத்திற்குள்ளாகியிருந்தன. 2004 ஆம் ஆண்டு சனவரி முதல் ஒக்டோபர் வரையும் 164 விபத்துக்கள் நிகழ்ந்ததில் 21 பேர் உயிரிழந் துள்ளனர். 108 பேர் காயமடைந்தனர். 35 ஊர்திகள் சேதமடைந்திருந்தன.

இவ்வாறு கடந்த 30 மாதகாலப்பகுதியில் 422 விபத்துக்கள் நிகழ்ந்தன. இதில் 43 பேர் உயிரிழந்தனர். 258 பேர் காயமடைந்திருந்தனர். 121 ஊர்திகள் சேதமடைந்தன. இந்த விபத்துக்களின் பின்னணி பற்றி எடுத்துக்கொண்டால் வாகன ஓட்டுநர்களின் குறைபாடுகள் வாகனத்தின் குறைபாடுகள், வீதியின் தன்மை, வீதியால் செல்லும் வாகனங்கள், பாதசாரிகள் வீதியின் இருமருங்கிலும் உள்ள நில உரிமையாளர்கள், சாலை முகாமைத்துவ, குறைபாடுகள் என்பன விபத்துக்களின் முக்கிய காரணிகளாக அமைகின்றன.

சாலை விபத்துக்களுடன் சம்பந்தப்பட்ட ஓட்டுநர்களை எடுத்துக் கொண்டால் வீதி ஒழுங்குமுறைகள் பற்றி தெரியாத, அல்லது சாலை விதிகளை கற்றுக்கொள்ளாதவர்களாகவே இருக்கின்றனர். அல்லது உரிய முறையில் அனுமதிப் பத்திரம் பெறாதவர்களாகத்தான் இருக்கின்றனர். அடுத்து வாகனங்களை எடுத்துக் கொண்டால் வாகனம், சீரான முறையில் செலுத்தக் கூடிய வகையில் இல்லாது இயந்திர பழுது காணப்படல் போன்றவற்றின் மூலம் விபத்துக்கள் நிகழ்கின்றன.

அடுத்து வீதியின் தன்மையை எடுத்துக் கொண்டால் கடந்த இரு சகாப்தங்களாகத் தொடர்ந்த கொடிய போரின் விளைவாக கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாத வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாதும், புனரமைக்கப்பட்ட வீதிகள் உரிய முறையில் புனரமைக்கப்படாமை அதாவது தமிழர்தாயகப் பகுதியில் போரினால் சிதைக்கப்பட்ட கட்டுமானங்களையும், அவற்றின் நிர்வாகம் என்பவற்றையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் இவற்றை அபிவிருத்தி செய்வதற்கென அரசினால் ஒதுக்கப்படும் நிதி என்பது மிக மிகக் குறைவு. அந்த அடிப்படையில் தற்பொழுது வீதி புனரமைப்பிற்கென ஒதுக்கப்படும் நிதி புனரமைக்கப் போதுமானது அல்ல அதனை புனரமைப்பதற்கு ஏற்றுக் கொள்ளும் ஒப்பந்தகாரர்களும் சுரண்டிக் கொள்கின்றனர்.

தற்பொழுது பெரும்பாலும் கிராமப் புறவீதிகள் ஏதோ ஒரு அரச சார்பற்ற நிறுவனமோ அல்லது வெளிநாட்டு அமைப்புக்களோ சிறு தொகை நிதியினை ஒதுக்கீடு செய்து கொண்டால் அதனை நடைமுறைப் படுத்துகின்ற உள்ளூர் அமைப்புகள் அதனை தங்களுடைய வீதி அல்லது தமது சொத்து என்ற நோக்கத்தில் அபிவிருத்தி செய்வதில்லை. அதனை வைத்துத் தாம் உழைத்து



விட வேண்டும் என்ற நோக்கில் அதில் கூடிய இலாபத்தை எதிர் பார்த்து அந்த வீதியை பொறுப்பெடுத்து அதனுடைய அளவினை அதாவது வீதியின் அகலத்தை குறைத்து ஏதோ பணம் பெறும் மட்டும் வீதி சீராக இருந்தால் சரி என்ற அடிப்படையில் புனரமைக்கின்றனர். இதுவும் விபத்துக்களுக்கு ஒரு காரணமாக அமைகின்றது. எனவே இவ்வாறு ஒவ்வொரு விபத்துக்களுக்கும் நாங்களே காரணமானவர்கள் என்பதை உணர்ந்து இவ்வாறான விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வோம்.

**சு.பாஸ்கரன்**



# சொல்லமுடியாத சோகங்களால் சோர்ந்து போயுள்ள எங்கள் உறவுகள்

கடந்தவாரம் அந்தமான் தீவுக்கருகில் கடலடியில் ஏற்பட்ட நிலஅதிர்வு காரணமாக ஆசிய நாடுகள் பலவற்றைத் தாக்கிய சுனாமி பேரலைகளின் தாக்கம் இலங்கையையும் விட்டு வைக்கவில்லை. இதில் தமிழர் தாயகப்பகுதியின் அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, திருகோணமலை வடமராட்சிப்பகுதி வரலாறு காணாத பேரழிவுகளைச் சந்தித்துள்ளது.

கடல் கொந்தளிப்பு காரணமாகப் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன என்ற செய்தி எமது காதுகளை எட்டியபோது எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும் நேரடியாக முல்லைத்தீவு, தாளையடிப்பகுதிகளைப் பார்வையிட்டபோது எம் இரத்தத்தை உறையச்செய்தன. எங்கும் பிணக்குவியல்கள், அலைகள் அள்ளிக்கொண்டுபோனவர்களைச் சடலங்களாக கடற்கரைகளில் ஒதுக்கிக்கொண்டிருந்தன; இருக்கின்றன. வீதிகள் கட்டட இடிபாடுகளால் மூடப்பட்டிருந்தன. உடைந்த கட்டடங்களின் கீழ் மனிதசடலங்கள், பனைமரங்கள் வேரோடு பாறிஇருந்தன. புனைகளின் அருகாக பல சடலங்கள். ஒவ்வொரு வீடுகளும் குறைந்தது பத்து மீற்றருக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டிருந்தன. ஓரிடத்தில் பல கட்டடங்கள் ஒன்றாகக் குவிந்து இடிந்து கிடந்தன. அனைத்துப்பகுதிகளின் நிலையும் இதுதான். பேரலைகளின் தாக்கத்தை நேரடித்தரிசனம் செய்யும்நோக்குடன் முல்லை நகரை நோக்கி 27.12.2004 அன்று சென்றோம். வட்டுவாகல் பாலத்திற்கருகே எம்மை வழிமறித்த தமிழீழகாவல்துறையினர் முல்லைநகரை அண்டிய பகுதிக்குச்செல்ல எமக்கு அனுமதிவழங்கமறுத்தனர். இப்பகுதியில் மீளவும் பேரலைகள் தாக்கும் அபாயம் இருப்பதால் மீட்புப்பணியாளர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் இப்பகுதிக்குச்செல்ல அனுமதியில்லையெனவும், அதைவிட இப்பகுதியில் மக்களின் உடமைகள் பாதுகாப்பின்றி சிதறிக்கிடப்பதாகவும் கூறினர். அதன் பின்னர் நாம் எம்மை அடையாளப்படுத்திக்கொண்டு அப்பகுதிக்குள் சென்றோம்.

நாம் 1998ஆம் ஆண்டு முல்லை நகரைப் பார்த்தபோது "இது எப்போது நகரமாக மாறுமோ இவ்வாறு உள்ளதே" என்று அங்கலாய்த்ததுண்டு. இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்ட முல்லைத்தீவு கொஞ்சம் கொஞ்சமாகப் புதுப்பொலிவு பெற்றுக்கொண்டிருந்தகாலமது.

மிக அண்மையில் நாம் இந்த முல்லை நகரையும் அதனை அண்டியபகுதியையும்

**அருள்**

பார்த்தபோது வியந்து போனோம். குறுகிய காலத்துக்குள் வளர்ச்சி கண்டிருந்தது. எங்கும் புதிய கட்டடங்களான புதிய வீடுகள், கடைகள், மாடிக்கட்டடங்கள் எனக் கட்டப்பட்டுக்கொண்டு, சனநெரிசல்கள் மிகுந்த பகுதியாக வளர்ச்சிகண்டிருந்தது.

ஆனால், இன்று பார்க்கின்றபோது சுடுகாடுபோல், கிபிர்க்குண்டுவீச்சுக்கு இலக்கான கட்டடங்கள் போல் அனைத்துக்கட்டடங்களும் காணப்பட்டன. குறிப்பாக முல்லைத்தீவு மத்தியமகாவித்தியாலயத்தின் அனைத்துக் கட்டடங்களும் இடிந்து போயிருந்தன. பேருந்து தரிப்பு நிலையத்தில் நின்றபேருந்துகள் கடலலையினால் அடியுண்டு ஒருபக்கமாக ஒதுக்கப்பட்டிருந்தன. முல்லைத்தீவு கடற்கரையோரமாகஇருந்த புனிதஇராயப்பர் தேவாலயம் முற்றாக சேதமுற்றிருந்தன. இவ்வாறு முல்லைத்தீவு கரையோரப் பிரதேசங்கள் அனைத்தும் கடல் அலைகளினால் அடையாளம் தெரியாது சிதைக்கப்பட்டுள்ளன. பொது நிறுவனங்களின் திணைக்களங்களின் முக்கியமான ஆவணங்கள் வீதியெங்கும் சிதறிக்கிடந்தன. கால்நடைகள் பிணங்களோடு பிணங்களாகக் கிடந்தன. பல பெறுமதிமிக்க மக்களின் சொத்துக்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. கட்டட இடிபாடுகளுக்குள் இருந்த சடலங்கள் மீட்கப்படாது இருந்தன. கடற்கரையெங்கும் சடலங்கள் ஒதுங்கியது. வழமையாகக் கடலைப்பார்த்து ரசித்த எமக்கு அன்று கடல் ஓர் அரக்கனைப்போலவே தோன்றியது. அன்றும் கடல் ஆர்ப்பரித்துக்கொண்டேயிருந்தது.


அதன் அருகே நாய் ஒன்று கத்தியவாறு நின்றது. நாம் அருகே சென்று பார்த்தபோது அந்தக் கட்டட இடிபாடுகளுக்குள் ஒரு சடலம் கிடந்தது. அதன் அருகே நின்று கத்தியது சடலமானவர் வளர்த்த நாயாகத்தான் இருக்கவேண்டும். இவ்வாறு பிணக்குவியல்களாகவும், கட்டடஇடிபாடுகளாகவும், சிறுகச் சிறுகச்சேமித்த சொத்துக்கள் எங்கும் சிதறிக்கிடக்கும் ஒரு இடமாக இருப்பது முல்லை நகரை அண்டிய பகுதிதான்.முல்லை மட்டுமல்ல சுனாமி அலையினால் அடியுண்ட கடலேறி மீன்பிடித்து உண்டு வாழ்ந்த எம் உறவுகளைக் கடல் தரையேறி எமைப்பிடி மீன் உண்ணக்கொடுத்துவிட்டிருந்தது.

இவ்வாறுதான் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, வடமராட்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய தமிழர்தாயகப் பிரதேசங்களிலும், கடல் அலைகள் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன.

உறவுகளை இழந்த உறவுகள் கதறி அழுகின்றனர். சில உறவுகளுக்கு அழுவதற்கு உறவுகளில்லை. ஆறுதல் சொல்வார் இல்லை. கடலுக்கு சென்றவர்களின் மனைவி, பிள்ளைகள், நீரில் அள்ளுண்டு போய்விட்டனர். எத்தனை அவலங்கள், வார்த்தைகளாலும், எழுத்துக்களாலும் இவைகள் வர்ணிக்கமுடியாது. நீருக்கு இவ்வளவு சக்தியாஎன அதிர

(22ஆம் பக்கம் பார்க்க...)

---



தம்பிமுத்து கணபதிப்பிள்ளை ஆழியவளை.

" நாங்கள் வீட்ட எட்டுப்பேர் ஒராள் போராளி. அலைவரும் போது நான் இறால் வலை பின்னிக் கொண்டிருந்தன். கிபிர் சத்தம் மாதிரிக்கேட்டது. பிள்ளைகள் எல்லாம் சாப்பிட ஆயத்த மானவை. என்ர ஒரு பிள்ளை மாத்திரம் கடைக்குப்போட்டுது. அலைவர நான் சொன்னன் பிள்ளை கிபிர் அடிக்கிறான் போல எல்லாம் படுங்கோ எண்டு. அதற்கிடையில அலைவந்து என்னை அடிச்சுக்கொண்டு போட்டுது. நான் ஒரு மகனின்ர கையை எட்டிப்பிடிச்சன். என்ர கைக்கு மேலமரம் முறிஞ்சு விழுந்து மகனைப்பறிச்சுக்கொண்டு போட்டுது. அதற்கிடையில் என்ன அலை தள்ளிக் கொண்டு போட்டுது. முதல் அலை போனவு டனே பார்த்தன் என்ர மனிசியின்ர சாறி மரத்தில சுத்தியிருந்தது. தூக்குவமெண்டு போனன். அதற்கிடையில இன்னொரு அலையும் வந்து அடிச்சுக்கொண்டு போட்டுது. நான் மரத்தக்கட்டிப் பிடிச்சுக்கொண்டு நின்றன். பிறகு அலைபோனவுடன் பார்த்தன் மருமகள் குற்றுயிராய்க்கிடந்தா. அவாவதூக்கி எடுத்துப்போட்டு பார்த் தன் என்ர மூத்தமகளும், இன்னொரு மகனும் செத்துப்போய்க்கிடந்தினம். அவையளையும் தூக்கிஎடுத்துப் போட்டுப் பார்த்தன் மனிசியை காணேல்ல. பிறகு கடக்கரையில அவ வின்ர பிரேதம் கிடந்து எடுத்தம். இன்னும் ரெண்டு பிள்ளைகளை(ஒரு ஆணும், ஒரு பெண்ணும்)காணேல்ல. எனக்கும், மூத்தமகனுக்கும் காயம் கூட எண்டபடியால அம்புலன்சில ஏத்தி இஞ்ச கொண்டுவந்திட்டினம். மனிசியையும், ரெண்டு பிள்ளைகளையும் மருமகளையும் அடக்கம் பண்ணியாச்சாம். இன்னும் ரெண்டு பிள்ளைகள் கடலோட போட்டுதுகள்."

---



அமிர்தலிங்கம்(52) முல்லைத்தீவு

"நான் மட்டும் தான் வீட்ட இருந்தனான். எல்லோரும் கோயிலுக்குப் போட்டினம். கிபிர் குண்டு போட்டமாதிரி ஒரே சத்தம் கேட்டது. திரும்பிப்பார்க்க சுமார் இருபது அடி உயரம் வரை பெரியஅலை வந்து என்ன உருட்டிப்போட்டுது. அதில கிடந்த பனை மட்டை, முள்ளுக்கம்பி எல்லாம் என்னைச்சுத்திக் கிழிச்சுப்போட்டுது. எங்கட வீட்டை இருந்து இருநூறு மீற்றருக்கு அங்கால இருந்த ஒரு வீட்டின்ர கூரையைப்பிடிச்சு தொங்கினனான். அப்ப ஒரு பெடியன் என்னப்பிடிச்சு என்ர கால்காயத்துக்கு கட்டுப்போட்டு முள்ளியவளைக்கு கொண்டுவந்தது பிறகு இஞ்சை கொண்டுவந்தவை. என்ர மனைவி, பிள்ளைகள் எல்லாம் கோவிலுக்குப்போட்டினம். அதுவும் வழமையாகப் பூசைநடக்கிற இராயப்பர் கோவிலில நடக்கேல்ல. டிப்போவுக்குப் பக்கத்தில இருக்கிற சூசையப்பர் கோவிலில் பூசை நடந்தபடியால இஞ்ச அலைவருது என்று சொன்னதும் பூசையில இருந்த சனங்களை பஸ்ஸில ஏத்தி ஒட்டிசுட்டான் பக்கம் கொண்டு போட்டினம். என்ர மனைவி, பிள்ளைகள் எல்லாம் என்னைக்காணவில்லையெண்டு தேடியிருக்கினம். யாரோ சொன்னவையளாம். நான் இஞ்ச இருக்கிறன் எண்டு. யாரோ சொல்லி என்ன வந்து பார்த்தினம்."

---



---

அ.சுரேந்திரன் முல்லை வண்ணாங்குளம் 14 வயது.

"அலை வரேக்குள்ள வீட்டை விட்டிட்டு எல்லோரும் ஓடிட்டினம். நானும், அண்ணாவும் தான்வீட்டை இருந்தம். அலை வந்து அடிச்சு என்னைக் காயப்படுத்திப்போட்டுது. எங்கட வீட்டுக்காரர் எல்லோரும் எங்க இருக்கினம் என்றும் தெரியாது. நான் உயிரோட இருக்கிறது தெரியுமோ தெரியாது."






# காளானிலிருந்து றப்பர்

உணவுக்காக பயன்படுத்தும் காளான் வகையில் இருந்து பிளாஸ்டிக்கை உற்பத்தி செய்ய முடியும் என சமீபத்தில் நடந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது. றப்பர் மரத்தின் பாலில் இருந்து பெறப்படும் கடினமீள் பொருளாக றப்பர் இருக்கிறது. இயற்கையாக மரத்தில் இருந்து பெறப்படும் றப்பர் இயற்கை றப்பர் எனப்படுகிறது. இதில் ஐசோப்ரின் உள்ளது.

காளானில் இருந்து தயாரிக்கப்படும் இந்த றப்பர் பயோறப்பர் எனப்படுகிறது.


உண்ணக் கூடிய பூஞ்சை வகையான காளான், குடை வடிவத்தில் இருக்கும். இது ஹைபே எனப்படும் நுண் பூஞ்சிழைகளின் பஞ்சித் திசுவால் ஆக்கப்பட்டுள்ளது.

இதில் குடை, நுண் அடுக்கு, வளைய உறை, தரைகீழ்ப் பூஞ்சிழை ஆகிய பகுதிகள் உள்ளன. இதுவரை உணவுக் காளான் காய்கறியாகவும், ஒயின் மதுபானம் உண்டாக்கவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது நடைபெற்ற ஆய்வின் மூலமாக இதிலிருந்து ரப்பர் தயாரிக்கலாம் என தெரியவந்துள்ளது.

தற்போது உணவுக்காக காளான் வளர்ப்பு பிரபலமாக உள்ளது. இதிலிருந்து றப்பர் தயாரிக்கலாம் என தெரிய வந்துள்ளதால்

செயற்கை முறையில் தயாரிக்கப்படும் றப்பர் பல வகைப்படும். அதிக அளவு நெகிழ்வுத் தன்மை உள்ள தயோகோல் எண்ணெய் எடுத்துச் செல்லும் குழாய்கள் தயாரிக்கப்பயன்படுகிறது. மின்சாரத்திலிருந்து காத்துக்கொள்ள கிளவுஸ்கள் செய்ய நியோப்ரின் பயன்படுகிறது. அமிலத்தினை சேமித்து வைக்கப் பயன்படும் கொள்கலன்கள் செய்யவும் பியூட்டைல் றப்பர் பயன்படுகிறது. பல வகைக் குழாய்கள் செய்யவும் நைட்ரஸ் றப்பர் பயன்படுகிறது.

வேதிப் பொருட்களைப் பயன்படுத்தி செயற்கை றப்பர் தயாரிக்கப்படுகிறது.



தொழில் துறையில் இனி காளான் முக்கியபங்கு வகிக்கும் என தெரியவருகின்றது. ஆய்வு அளவில் வெற்றி பெற்றுள்ள காளானில் இருந்து தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் இனி வர்த்தக ரீதியாகவும் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.


# ரவைத்தடுப்பு கவசத்திற்கு பயன்படுத்தப்படும் செயற்கை சிலந்தி வலை

இஸ்ரேலில் சமீபத்தில் நடைபெற்ற ஆய்வின் விளைவாக சிலந்திவலை செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் தலைநகர் ஜெருசலேமில் உள்ள ஹீப்ரு பல்கலைக் கழகம், ஜெர்மனியில் உள்ள முனிச் பல்கலைக்கழகம், லண்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்கள் கூட்டாக இணைந்து மேற்கொண்ட ஆய்வில் இந்தச் செயற்கை சிலந்தி வலை உருவாக்கப் பட்டுள்ளது.

இந்தச் செயற்கை சிலந்தி வலை பட்டினை விட மிக உறுதியாக உள்ளது. செயற்கை இழையான நைலோனை விட 6 மடங்கு உறுதித் தன்மையுடன் உள்ளது.

சிலந்தியினுடைய வலையானது சிலந்தியினால் மட்டுமே உருவாக்கக் கூடியதாக இருந்தது. மேலை நாடுகளில் தற்போது இயற்கையாக கிடைக்கக்கூடிய அனைத்துப் பொருட்களுக்கும் தற்போது மாற்றுப் பொருட்கள் செயற்கையான முறையில் தயாரிக்கும் ஆய்வுகள் நடைபெறுகின்றன.

குண்டுதுளைக்காத உடைகள் தயாரிக்க சிலந்தி வலையில் உள்ள இழைகள் பயன்படுகின்றன. தற்போது உலகெங்கும் உடைகளுக்கு அதிகதேவை உள்ளன. எனவே, இயற்கையான முறையில் கிடைக்கும் சிலந்தி வலையை மட்டும் பயன்படுத்தி ரவைத்தடுப்பு தயாரித்தால் சிலந்தி வலை பற்றாக்குறை



ஏற்படுகிறது. அதற்கு இணையான செயற்கைச் சிலந்தி வலை தயாரிக்கப்பட்டுள்ளது.

செயற்கைச் சிலந்தி வலை அடிப்படையில் புரதங்களினால் ஆனது. இந்த சிறப்புப் புரதங்களை சிலந்தியினால் மட்டுமே உண்டாக்கமுடியும். சிலந்தியில் இந்தப் புரதம் ஏற்படுவதற்குக் காரணமான மரபணுவை தனியே பிரித்தெடுத்து மரபணு அறி வியலைப் பயன்படுத்தி இந்தச் செயற்கை சிலந்தி வலை தயாரிக்கப்பட்டுள்ளது.

குண்டு துளைக்காத ஆடை களுக்குப் பயன்படும் இழைகள் தவிர, இந்தச்செயற்கை சிலந்தி வலையின் இழைகள் சத்திர சிகிச்சை தையலுக்கு பயன்படும் நுண்ணிய இழைகள் தயாரிக்கவும் பயன்படுகின்றது. ஒப்டிகல் பைபர்களிலும் தற்போது செயற்கை சிலந்தி வலையை பயன்படுத்த ஆய்வுகள் நடைபெற்றுவருகின்றன.

இயற்கையைப் பேணுவது ஒரு புறம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் இயற்கைக்கு இணையான மாற்றுப் பொருட்களை தயாரிக்கும் ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன.

**த. அருவி**

# அமெரிக்கா-ஜப்பானில் இயற்கை விவசாயத்திற்கு மவுசு அதிகரிக்கின்றது

உயர் தொழில்நுட்பத்துறை புதிதாக மிகவும் வேகமாக வளரும் துறை என்பதால் அந்தத் துறையின் மீது அனைத்து விஞ்ஞானிகளுக்கும் ஒரு மோகம் உள்ளது. இதனால் அவர்களின் பார்வை ஒரே திசைப் பார்வையாக உள்ளது.

ஆசிய நாடுகளில்தான் இதுபோன்ற பிரச்சினைகள் உள்ளன. இலத்தின் அமெரிக்கா நாடுகளிலும் ஜப்பானிலும் இயற்கை விவசாயம் மூலமாகப் பெறப்படும் விளைபொருட்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

பன்னாட்டு நிறுவனங்களின் நெறி முறைகளை உழவர்கள் பின்பற்றும் நெறி, பாரம்பரிய விவசாய முறைகளை பாழ்படுத்தி விடும் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

தற்போது சர்வதேச நுட்பத்தில் விவசாய ஒப்பந்தமும் சேர்க்கப்பட்டுள்ளது. 1500 ஏக்கர் வரை உள்ள விவசாயிகள் அமெரிக்காவில் சிறு விவசாயிகள் என்ற பட்டியலில் இடம் பெற்று அதிக



அளவு மானியமும் பெறுகின்றனர்.

அமெரிக்காவில் விவசாயிகள் தங்களுடைய பெரும் நிலத்தில் விவசாயம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எனவே அவர்களுக்கு ஏற்படும் நட்டத்தை சமாளிக்க மானியம் தரப்படுகிறது.

விவசாயிகளுக்கு விதை, உரம், பூச்சி மருந்துகள் போன்றவற்றுக்கு மானியும் தரப்படுகிறது. மேலும், விவசாயம் என்பது விவசாயிகளைவிட்டு விலகி தற்போது உணவு தானிய நிறுவனங்களை மையங்கொண்டு விட்டது. அதனால் தான் உற்பத்தி செய்த விவசாயிகள் கஷ்டத்தில் இருக்க, உணவு தானிய நிறுவனங்கள் லாபம் சம்பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.




# காதுக்குத்தினால் நீங்கள் அவதிப்படுகிறீர்களா?

காதுக்குத்து கடுமையான வேதனையைக் கொடுப்பதால் உடனடியாக ஏதாவது வீட்டு வைத்தியம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படலாம். ஆனால், பலரும் தவறான வீட்டு வைத்தியங்களையே செய்கிறார்கள்.

சிலர் காதினுள் ஏதாவது எண்ணெய் விடுவார்கள். வேறு சிலர் உள்ளி சுட்டு வைப்பார்கள். இவற்றினால் எதுவித பிரயோசனமுமில்லை. ஆனால், காது செவிடாகவோ, மூளைக்காய்ச்சல் போன்ற மோசமான விளைவுகளையோ, அவை கொண்டுவரலாம். நுண்ணுயிர்க்கொல்லி காதுத்துளிகளைக் (AntiBiotic ear drops) கூட வைத்திய ஆலோசனை இன்றி விடவேண்டாம். ஏனெனில் செவிப் பறையில் ஏற்கனவே நோயினால் துவாரம் ஏற்பட்டிருந்தால் பல பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

காதுக்குத்து காதுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு நோய்களின் ஒரு முக்கிய அறிகுறியாகும். சில தருணங்களில் பல், நாக்கு, தொண்டை, தாடை, கழுத்து போன்ற வேறு உறுப்புக்களில் தோன்றும். நோய்களின் வலி காதில் பிரதிபலிக்கக்கூடும்.

எனவே காதுக்குத்திற்கான மூலகாரணத்தைத் தகுதியான வைத்தியர்மூலம் கண்டறிந்து வைத்தியம் செய்வதே பொருத்தமானது.

முதல் உதவியாக அஸ்பிறின், பரசிட்டமோல் போன்ற ஏதாவது ஒரு வலி நிவாரண மாத்திரையை உட்கொள்ளலாம்.

சிலவேளைகளில் இறுகிய கடினமான காதுக்குடுமியால் காதுக்குத்து ஏற்படலாம். இதனை இளகச் செய்ய சோடியம் பைகார்பனேற் காதுத்துளிகளை வைத்தியர் தரக்கூடும். இரு துளிகள் மூன்று தடவை வீதம், இரண்டு மூன்று நாட்களுக்கு காதினுள் விட்டுவர அது கரைந்து விடும்.

கரையாவிடில், காதை கழுவுவதன் மூலமோ அல்லது ஆயுதங்கள் மூலமோ வைத்தியர் அதை எடுக்கக்கூடும்.

கட்டு அல்லது கிருமி தொற்றியதால் காதுக்குத்து ஏற்பட்டிருந்தால் நுண்ணுயிர் கொல்லி மருந்துகளை காதுத்துளிகளாகவோ, மாத்திரைகளாகவோ, ஊசி மருந்தாகவோ அவர் கொடுப்பார்.

காதுக்குத்துடன், அல்லது காதுக்குத்தைத் தொடர்ந்து காதிலிருந்து நீர் அல்லது சீழ் வடியக்கூடும். இதை வைத்தியம் செய்து மாற்றினால் வேறு நோய்கள் வரலாம் எனச் சிலர் நினைக்கிறார்கள். இது தவறானது. இதைக் குணமாக்காதுவிட்டால் மூளைக்காய்ச்சல், ஏற்புவலிபோன்ற உயிருக்கு ஆபத்தான விளைவுகள் ஏற்படலாம் அல்லது காது நிரந்தரமாகச் செவிடாகலாம்.

காதைச் சுத்தப்படுத்துவதற்கும், காது அரிப்பைச் சமாளிப்பதற்கும் பலர் குச்சிகளையும், ஊசிகளையும் பயன்படுத்துவர். இது ஆபத்தானது. அவை தவறுதலாகச் செவிப் பறையை சேதப்படுத்தி விட்டால் கேட்கும் சக்தி பாதிப்படையும். கிருமிகளும் தொற்றக்கூடும். எனவே சுத்தமான துணியிலான திரிகளையே இதற்குப் பயன்படுத்துங்கள்.

காதுக்குத்து, காதிலிருந்து நீர்வடிதல் போன்ற அறிகுறிகளால் அடிக்கடி பாதிப்படைபவர்கள் காதினுள் நீர் புகுவதைத் தடுக்கவேண்டும். நீரில் மூழ்குதல், சுழியோடுதல் போன்றவை கட்டாயம் தவிர்க்கப்படவேண்டும். தலைக்கு நீராடும்போது, காதைப் பஞ்சினால் அல்லது துணியால் அடைக்க வேண்டும். தடிமன், மூக்கடைப்புப் போன்ற நோய்களுக்கு உடனடியாக வைத்தியம் செய்ய வேண்டும்.

# ஆரோக்கியமான உணவு


உடலுக்கு சத்தானது எது என்று படித்தவர்கள் ஏதாவது சொல்வார்களே தவிர, உருப்படியாக சொல்லத்தெரியாது. ஆனால், படிக்காவிட்டாலும், நம் வீட்டு ஓரத்தில் உட்கார்ந்து ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருக்கும் பாட்டிகளை கேட்டுப் பாருங்க, என்ன உபாதை. வலி, கோளாறு இருந்தாலும் டாண்...டாண் என்று சொல்வார்கள், படித்து பட்டம் வாங்காத 'இயற்கை வைத்தியர்' இவர்கள்தான். இன்றைய சூழ்நிலையில், மாறிய 'வாழ்க்கைப் பண்பில்' எது எதெல்லாம் சாப்பிட்டால், என்னென்னவோ கோளாறு வருமோ, அதெல்லாம்தான் பிடித்த உணவாகிவிட்டது. அதிலும், இளைய சமுதாயத்தினர் விரும்பிச்சாப்பிடுவது அவைதான். அது வாய்க்கு ருசியாக இருந்தாலும், சத்துணவாக, ஆரோக்கியத்துக்கு தேவையான அடிப்படை உணவுகளை காய்கறி, தானிய வகைகளை மறந்து விடக்கூடாது. அதையெல்லாம் மறந்து கொழுப்பு மிக்க அதிக எண்ணெய் சார்ந்த, சத்தில்லாத உணவுகளை சாப்பிடுவதுதான் அதிகமாகிவிட்டது. அத்துடன் ஜாலிக்காக வாழ்க்கைப்பண்பிற்காக சில பழக்க வழக்கங்களையும் இந்த இளம் வயதில் சேர்த்துக் கொண்டு விடுகின்றனர்.

இப்படியான தேவையற்ற விஷயங்களால், பழக்கவழக்கங்களால் வாழ்க்கை பண்பு மாற்றத்தால், இன்றைய குழந்தைகள் சிலர் குண்டாக இருக்கின்றனர். நல்ல ஆரோக்கியமாக இருக்கவேண்டிய இளம் வயதை




அடையும் போது உடலில் எடை கூடுகிறது அதனால், பாதிப்பு ஏராளம். அடுத்து, நாற்பதை அடையும் போதே கொழுப்பு அதிகமாகி, பிபி,ஷுகர் என்று எதெல்லாமோ முக்கியமாக வரக்கூடாதோ, அதெல்லாம் வந்து விடுகிறது. அதன்பின்பு என்ன, உடலில் முக்கியமாக உயிர்வாழ இன்றியமையா இருதயம், நுரையீரல், கணையம், சிறுநீரகம், குடல், மூளை என்று ஒன்றன்பின் ஒன்றாக பாதிக்கிறது.

இப்போது பல குடும்பங்களில் உள்ள பெரியவர்களுக்கு இனியாவது நல்ல சத்தான உணவுகளை சேர்க்கவேண்டும், நம் பிள்ளைகளுக்கு எந்தப் பாதிப்பும் எதிர்காலத்தில் வரக்கூடாது என்று நினைக்கின்றனர்.



சிறுகதை

# அகதியின் பயணம்



ஆதிலட்சுமி சிவகுமார்

கண்வெட்டாமல் அவன் இருட்டையே பார்த்துபடி படுத்துக்கிடந்தான். நேரம் என்னவென்று கூட உத்தேசிக்க முடியவில்லை. பக்கத்துக் குடிசையில் ஒரு குழந்தையின் அழுகுரல், ஒருகுட்டிப் பூனை கத்துவதுபோல ஈனஸ்வரமாய்க்கேட்டது.

'அந்தக் குழந்தை ஏன் அழுகிறது' என நினைத்தான். குழந்தை பசியில் அழலாம். அதன் தாய் பாலூட்டமுடியாமல் இருக்கலாம். காய்ந்த பாண்துண்டையும் சீனியில்லாத வெறுந் தேநீரையும் உணவாக அந்தத்தாய் உட்கொண்டிருக்கலாம். எப்படி அழுகின்ற குழந்தைக்கு அவள் பாலூட்டமுடியும்.

அவனுடைய குழந்தைகள் இரண்டும் நன்றாகத்தூங்கிக் கொண்டிருந்தன. அவனுடைய மனைவி ஜானகி இன்னும் இரண்டு மாதங்களில் இன்னுமொரு குழந்தையைப் பிரசவிக்கப்போகிறாள்.

அவனைப் பொறுத்தவரையும் அவளுடைய இந்தப் பிரசவம் மகிழ்ச்சியானதல்ல என்று உணர்ந்தான். சீரான இருப்பிடமில்லை. சத்தான உணவில்லை. நோய்த்தடுப்பு மருந்துகளில்லை. ஒழுங்கான மலசல கூடம் இல்லை. இந்த இலட்சணத்தில் இந்தப் பிரசவம் தேவைதானா என்று தன்னையே கடிந்து கொண்டான்.

ஜானகியும் மூன்றுமாதம் வரை இதை இல்லாமற் செய்வதற்கு பல முயற்சிகள் செய்து தோற்றாள். 'சரி ஏதோ வாறது வரட்டும்' என்று விட்டாயிற்று சிலவேளைகளில் இயலாமையில் அவள் எரிந்து விழுவாள்.



சிலவேளைகளில் தேம்பித்தேம்பி அழுவாள். இன்னும் சிலவேளைகளில எதுவுமே பேசாமல் மௌனமாய்த் திரிவாள்.

சிலநாட்களாய் வேலை கூட ஒழுங்காக இல்லாமலிருந்தது. அவனுக்கு பல நாட்கள் காலையில் போய்.... மாலையில் வெறுங்கையோடு வந்து மூலைக்குள் முடங்குகிறபோது- மனம் குறுகுறுக்கும். காலை முதல் அவன் ஒரு இடமும் போகவில்லை. மதியம் போல் வாசலில் நாய் குரைக்க.... எட்டிப் பார்த்தான். காந்தியண்ணை நின்றுகொண்டிருந்தார்.

'வாங்கோ அண்ணை....' என்றான் 'நான் இருக்கிறதுக்கு வரேல்லை..... உனக்கு கொஞ்சம் தள்ளி உதிலை கோயிலடியிலைதான் ஒரு தெரிஞ்ச வீட்டில இருக்கிறம்.....கடையில கடன் வாங்கினவனெல்லாம் அவரவர போயிட்டாங்கள்..... ஆக்கள் எங்கை எண்டும் தெரியாது..... உன்ரை கணக்கும் ஒரு ஆயிரத்தி முன்நூற்றிச் சொச்சம் கிடக்கு.....எப்பதாறாய்?.....'

'..............................'

'கடையிலை கிடந்ததுகளை சும்மா சும்மா தூக்கிக் குடுத்துப்போட்டு இப்ப வீடுவீடா அலைய வேண்டிக் கிடக்கு.... எப்ப தாறாய் காசு......'

'ரெண்டு மூண்டு நாளிலை தாறன்......'

'சொல்லிப்போட்டன்....எனக்கு நடை பழக்கக்கூடாது.....சொன்ன தவணைக்கு தந்திடவேணும்.....' சொல்லிவிட்டு- திண்ணையிலிருந்த ஜனாகியைப் பார்த்தார். 'மனுசியும் விசேஷம் போலை....... உதுக்கு மட்டும் குறைவிடாயள்.....' புறுபுறுத்துக்கொண்டு போனார்.

'இண்டைக்குச் சாப்பிடுறதுக்கு ஒண்டுமில்லை..... என்னெண்டு இரண்டொரு நாளில தரலாம் எண்டு சொல்லுவியள்?.....' ஜானகி பாய்ந்தாள்.

'நாங்கள் கேக்கக் கேக்க ஒரு மறுப்புமில்லாமல் தந்த மனுசன்.. என்னபாடுபட்டும் குடுக்கத்தானே வேணும்.....' 'அதுதான் என்னெண்டு குடுப்பியள் எண்டு கேக்கிறன்?...' 'எப்படியாவது குடுக்கத்தானே வேணும்.....' பின்பக்கமாய் கைகளை ஊன்றி இளைத்தாள் அவள். அவள் நெற்றியிலும்....நெற்றிப் பக்கங்களிலும் வியர்வை பூத்திருந்தது. இரண்டு கால் பாதங்களும் வீங்கியிருந்தன.

அவனுக்குள் துயரம் பொங்கியது.

பிற்பகல் வரை அவன் அப்படியே மூலைக்குள் படுத்துக் கிடந்தான். நித்திரையில்லை. வெறுமனே கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான்.

ஜானகிக்கு கிளினிக்கில் கொடுத்த "திரிபோசா" மாவை அவள் சுடுதண்ணீர் விட்டுக் குழைத்து உருட்டி குழந்தைகளுக்குக் கொடுத்தாள். அவனுக்கும் ஒரு உருண்டையைக் கொண்டுவந்து நீட்டினாள். அவன் மறுக்கவில்லை. வாங்கிச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் சுருண்டான்.

ஏழுமணியிருக்கும் சோறு அடுப்பில் கொதிக்கும் வாசனை மூக்கில் நுழைந்தது.

'ஜானகி...என்ன.....சமைக்கிறியே.....'

'ஓம்.....சுமதியக்கா ரெண்டு சுண்டு அரிசியும் கிழங்கும் தந்தவ.... அதுகளிட்டையும் [illegible]த்திணை நாள் கடமைப்பட்டாச்சு..... [illegible]வார்த்தைகள் சுட அவன் மனது வலித்தது.

சுவர் மூலைக்குள் ரயர்த் துண்டொன்றைக் கொழுத்திப் போட்டுவிட்டு அந்த வெளிச்சத்தில் ஜானகி உணவுபரிமாறினாள்.

'நீதான் வடிவாச் சாப்பிட வேணும்.... சாப்பிடு.....' தன்தட்டிலிருந்து கொஞ்சச் சோற்றை அள்ளி அவள் தட்டில் போட்டான். அவள் மறுக்கவில்லை.

குழந்தைகளும் ஊதி ஊதி சோற்றை உண்டன. ரயர் துண்டு எரிந்த மணம் குமட்டியது. அவன் கையைத்துடைத்துவிட்டு.... திண்ணையில் இருந்தான். அவள் பாத்திரங்களைத் தூக்கி ஒதுக்கி வைத்துவிட்டு வந்தாள். 'கால் வீங்கிறது கூடாது... கொஞ்சத்தூரம் இப்படியே நடந்திட்டு வாவன்....'

'ஐயோ..... அம்மாளாச்சி.... என்னால ஏலாது....' திண்ணையில் அமர்ந்தாள். அவள் மூச்சிழுக்கும் ஒலி அவனுக்குக்கேட்டது. 'இனிமேல் இப்படி ஒரு பாவத்தைப் பண்ணக் கூடாது.....' மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.....

'காந்தியண்ணைக்கு எப்பிடி காசு குடுக்கிறது?.....'

'நீ ஒண்டுக்கும் யோசிக்காதம்மா...நான் எப்பிடியும் குடுப்பன்.....' இருட்டில் அவள் கண்களில் நீர் துளிர்த்திருப்பது அவனுக்குத் தெரிந்தது.

அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

'எங்களுக்குமட்டுமே இந்தக் கஷ்டம்... ஊரேல்லாம்தான் கஷ்டப் படுகுது.... எப்படியும் கொஞ்ச நாளையில எங்கட ஊர் மீண்டிடும்...... நாங்கள் போகலாம்......'

'..................................'

'தலைவருக்கு சனம் படுகிற கஷ்டமெல்லாம் தெரியும்..... அவங்களை கனநாளைக்கு விட்டு வைக்கமாட்டார்.....'

'எனக்கு நித்திரை வருகுது....பாயைப் போடுங்கோ.....'

அவன் எழுந்துபோய் 'யுனிசெப்' கொடுத்த அந்த நீலப் பாயை விரித்தான். வெறுந்தரையில் தூங்கிக் கிடந்த குழந்தைகளை பாயில் தூக்கிக் கிடத்தினான். போர்வையால் மூடிவிட்டான்.

'ஜானகி.....'

அவள் எழுந்தாள். இருளில் அவள் தடக்குப்படாமல் பார்த்துக் கூட்டி வந்து படுக்கவிட்டான்.

அவனுக்கு தூக்கம் வரவில்லை. அவள் உடனேயே தூங்கிவிட்டாள். ஜானகி- அவனுடைய மாமாவின் மகள். சிறுவயதில் மாமி இறந்துவிட்டா அண்ணன்கள் இரண்டுபேரும் தங்கை ஒன்றும். அண்ணன் ஒருவன் ஜேர்மனியில். ஜானகி இவனை விரும்பிய போது அவள் வீட்டில் பூகம்பம் வெடித்தது. ஜானகிக்கு வெளிநாட்டில் திருமணம் பேசினார்கள்.

இவன் கூட்டிக் கொண்டு வந்து விட்டான்.

' ஓடுகாலி' என்று அவர்களும் கைவிட்டுவிட்டார்கள். ஜானகியும் அவர்களிடம் வலிந்து போவதை விரும்பவில்லை. இவன் அவள்மேல் உயிரையே வைத்திருந்தான்.

'என்ர ராசாத்தி.....'

அவள் நெற்றியில் முத்தமிட்டான் மெதுவாய். அவள் தலையை அசைத்தாள். இடது கையால் அவனைத் தொட்டு,'காந்தியண்ணைக்கு என்னெண்டு காசு குடுப்பியள்.....' தூக்கத்திலும் கேட்டாள், அவள் குரல் நெஞ்சின் ஆழத்தை உலுப்பியது 'அதைப்பற்றி நீ யோசிக்காதை..... எப்பிடியும் நான் குடும்பன்......' அவள் தூங்கிப் போனாள். மெல்லிய குறட்டைஒலி கேட்டது.

'சிவமண்ண..... உருத்திரபுரத்துக்கை ஒரு வீட்டுச்சாமான் ஏத்தவேணுமாம்.....வாறியளோ.....விடியப் போவம்....'

'அங்கையோ.....'

'பயப்பிடாதேங்கோண்ணை...அங்கை ஆமியில்லை... போனா கடகடவெண்டு சமானை ஏத்திக்கொண்டு வாறது தானே....'

'மனுசி சுகமில்லாம இருக்கிறாளடா...ம்.....'

'என்ரபாடும் அப்பிடித்தானண்ணை....வாங்கோ...போனா கையில கொஞ்சம் புழங்கும்......'

'சரி....போகேக்கை கூப்பிடு வாறன்....

காலையில் அவன் வந்தான். 'எங்க போறியள்?...'

'தடுக்காத...ரெண்டுபேரும் ஒரு வேலைக்குப் போறம்... பின்னேரம் தான் வருவம்......' 'தூரவோ......' 'கிட்டடிதான்...விறகொண்டும் கொத்தாதை........ தண்ணி நிரப்பி வைச்சிருக்கு குளி...உடுப்புகளை நான் வந்து தோய்க்கிறன்.....' சொல்லிச் சொல்லி வாசலுக்குப் போனான். 'போட்டுவாறன்.... பிள்ளையள் கவனம்....' உருத்திரபுரம் பத்தாம் வாய்க்காலடி வெறிச்சோடிக்கிடந்தது. 'உனக்கு இடம் தெரியுமேயடா....' 'ஓமண்ண பேசாம வாங்கோ....' பற்றைகளை மெதுவாக விலக்கி நடந்துகொண்டிருந்தார்கள். இன்னும் இருவர் அவர்களோடு நடந்தார்கள். 'இது கார்த்திகேசு மாஸ்ரற்றை வீடு....இந்தவீட்டில இருந்து இன்னும் ஒரு நூறுயார் தானண்ண....' அமைதி பயமுறுத்தியது. 'எனக்கு நடைபழக்கக்கூடாது... சொன்ன தவணைக்கு தந்திட வேணும்' என்னெண்டு காந்தியண்ணைக்கு காசு குடுப்பியள்....' காந்தியண்ணையினதும்... ஜானகியினதும் குரல்கள் மாறி மாறி காதுகளில் ஒலித்தன.

'அந்தா...அதுதான் வீடு... முழுத்தளபாடங்களையும்.... ஏத்த வேணும்....'கூட்டிவந்தவன் பரபரத்தான்.

வீட்டு முற்றத்தில் மாஞ்சருகுகள் நிறைந்து கிடந்தன. மாமரத்திலிருந்த இரண்டு குருவிகள் கீச்சிட்டபடி பறந்தன. பக்கத்து வளவில் ஏதோ செத்துப்போயிருக்கவேண்டும். துர்நாற்றம் காற்றில் கலந்திருந்தது. 'தம்பியவை பயப்பிடக் கூடாது... சந்தியிலை ரைக்ரர் வந்து நிக்கும். மளமளவெண்டு எல்லாத்தையும் தூக்கி ஏத்த வேணும்..... பின்னாலை தேங்காயள் விழுந்து கிடந்தா.... அதுகளையும் பொறுக்கி ஒரு உரபாக்கில கட்டவேணும்.விளங்குதோ..' கூடவந்தவர்கள் தலையாட்டினார்கள் இவன் தாடையைச் சொறிந்தபடி... வீட்டை அண்ணாந்து பிரமிப்புட பார்த்தான். ஐம்பது வருஷப்பழமை நிறைந்த நாச்சார் வீடு.

ஜன்னல் கதவுகளெல்லாம் சித்திரவேலைப்பாட்டுடன் கூடியனவாய் இருந்தன. ஒருபக்கச்சுவரில் மெல்லிய வெடிப்புத்தெரிந்தது. வாழைகள் சில தண்ணீரில்லாமல் எரிந்துகிடந்தன.வாழைகளுக்கு அருகே கொடியில் பழைய உடுப்பு ஒன்று கிடந்தது.

'படீர்...பட்பட்...பட்...பட்...'



கூடவந்தவர்களில் ஒருவன் நிலத்தில் விழுந்து துடித்தான். தொடைப் பகுதி கிழிந்து இரத்தம் பீறிட்டது.

'ஆமியண்ண....ஓடுங்கோ.....'


ஓடினார்கள் இருவர். இவனும் ஓடினான். பாதை பிடிபடவில்லை. தாறுமாறாய் ஓடினான் 'பட்பட்.... படீர்... பட்பட்.....' முதுகில் ஏதோ அடித்த மாதிரி இருந்தது. தலைசுற்றியது. முதுகிலிருந்து கால்வழியாக இரத்தம் பாய்ந்தது.... 'ஜா.....ஜான ஜானகி.....' அவன் சுருண்டு விழுந்தான். மயங்கிக்கொண்டிருந்த பொழுதில் புரியாத மொழிப்பேச்சுகள் மிக அருகில் கேட்டன....



# ஈரமில்லாத கடலின்...

நீளப்பரந்து நெடுவான் தொடும் வரைக்கும் அகண்டிருந்தும் கிஞ்சித்தும் ஈரம் இல்லாத கடலின் கோர இதயம் எங்கள் மடியினைக் கழுவிச்சென்றுள்ளது. அதிலும் எங்கள் ஈழமடியில் வந்துதித்திருந்த இளம்பிஞ்சுகளையே அதிகம் புசித்த அகோரப்பசியோடு அதன் ஆட்டம் தணிந்ததா என்ற கேள்வியுடனேயே எங்கும் காணக்கிடைக்கும் முகங்கள். நீர் வடியவடிய அடையாளம் காணப்படுதல் தொடர்கின்றது. ஓடியாடி, உறவாடி, பேசிமகிழ்ந்திருந்த எமது உறவுகள் தொடரும் துன்பத்துக்குள் வாடி நிற்கிறார்கள். யுத்த நிறுத்த காலத்தில் எறும்புகள் போல் அவர்கள் சேர்த்து வைத்த சொத்துக்களோடு, எதிர்காலக் கனவுகளும்தான்.






அனர்த்தங்களால் ஏற்படும் இழப்புக்கள் எம்மினத்தைப் பொறுத்த வரையில் தொடர்கதைதான். ஆனாலும், அதற்காகவே அனைத்தையும் ஜீரணித்துப்பழகிப்போவதற்கு எம் ஓர்மங்களை அனுமதிக்கக்கூடாது. அதிலும் இயற்கை விளைவிக்கும் இவ்வாறான அனர்த்தங்கள் குறித்து தெளிவாகப்புரிந்து கொண்டு, அவற்றின் பின்புலங்களை ஆராய்ந்தறிவதன் மூலம், எதிர் காலத்தில் முற்கூட்டியே பல பாதுகாப்பு-ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என்பதை நாம் மனம் கொள்ளவேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு உயிரினதும் பெறுமதியை மற்ற எவரை விடவும் அதிகமாக உணரத் தலைப்பட்டவர்கள் அல்லவா நாம்! கூடவே நாடு தழுவிய அளவில் இயங்கும் வானொலி ஒன்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கான பிரார்த்தனை என்ற பெயரில் இது கடவுளால் கொடுக்கப்பட்ட தண்டனை என்று தெரிவிக்கப்பட்ட கற்பிதம்தான் இக் கட்டுரையை எழுதவேண்டுமென வேதனையுடன் தூண்டியது. 'என்னதான் அறிவியல் முன்னேறினாலும், ஆன்மீக அருபத்தின் உச்சியைத் தொட்டுவிட முடியாது. நாகரிகம் என்ற பெயரில் கலாசாரம், பண்பாடு மாறியதாலும், ஆண்கள் போல் பெண்கள் ஆடை அணியத் தலைப்பட்டதாலுமே இறைவனின் சீற்றத்திற்கு ஆளாக வேண்டி நேர்ந்தது', என்று அவ்வானொலியில் அஞ்சல் செய்யப்பட்ட பிரார்த்தனை(?)யில் பெண்குரலில் ஒருவர் தனது அறிவீனத்தால் ஆன பிற்போக்குக் குப்பையைக் கொட்டிவிட்டுச் சென்றார்.

பட்டினி கிடப்பவர்கள் அனைவரும் பாவிகள், மற்றவர் யாவரும் ஆண்டவனின் விருப்பத்துக்குரியவர்கள் என்று நம்பும் அந்தப் புத்திஜீவியின் கற்பிதத்தின் தவறினை விளக்குவதுடன், உலகு முயற்சி-உழைப்பு-தார்மீகம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இயங்குகிறது என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இது. அன்பான உறவுகளே இயற்கையை எதிர்நிற்க முடியாமல் போகலாம், ஆனாலும் அதைப் புரிந்து தகுந்த நடவடிக்கைகளை ஆற்றுவதால் எங்கள் இழப்புக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் அல்லவா! நாம் ஒன்றும் பாவி


**சு.ஞாலவன்**

கள் அல்லர். இது போன்ற 'சுனாமி'கள் பலமுறை சரித்திரத்தில் உருவாகி இருக்கின்றன.



நாம் செய்த பாவம் எல்லாம்: இன்னும் ஒரு சொந்தநாட்டை உருவாக்கி, நமக்கான முன்னாயத்தங்களைச் செய்யாதததுதான். குறைந்த பட்சம் இவ்வாறான 'இயற்கை அனர்த்தவியல்' குறித்த கற்கைநெறிகளில் நமது கல்விச்சமூகம் அக்கறை செலுத்தாது, குறிசொல்பவர்களிடமும், பிரசங்கிகளிடமும் வியாக்கியானம் கேட்டுநிற்கும் துர்ப்பாக்கியம்தான்!

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி இந்தோனேசியாவின் சுமாத்திரா பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் **Richters Scale** எனப்படும் நிலநடுக்கத்தை அளவிடும் அலகினில் 8.9 ஐக்காட்டியுள்ளது. 1900ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஐந்தாவது பெரியதும், கடந்த 40 ஆண்டுகளில் காணப்படாத இந்த அளவு, தான் உண்டான பிரதேசத்தைத் தாண்டி ஏற்படுத்திய 'சுனாமி' என அழைக்கப்படும் பேரலைகள் மூலம் பாரிய அழிவுகளை மனித குலத்திற்கு உண்டாக்கியுள்ளன. இந்த 'சுனாமி' என்றால் என்ன?



படம் -01

அது எப்படி உருவாகின்றது? அதன் ஓட்டத்தினைப் புரிந்து கொள்வதன் மூலம் எவ்வாறு நாம் இழப்புகளை மட்டுப்படுத்திக் கொள்ளலாம்? இவை போன்ற கேள்விகளுக்கு விடை அளிப்பதாக இக்கட்டுரை விரிகிறது.


ஆழ்கடலில் நிலத்திட்டுகளின் அசைவினாலோ அன்றி பூகம்பங்களினாலோ உருக்கொள்ளும் பாரிய கடலலைகள் 'சுனாமி' என அழைக்கப்படுகின்றன. 1897ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படும் இந்த யப்பானிய சொல் சுதேசிய மொழியில் 'துறைமுக அலைகள்' என அர்த்தம் தருகின்றது. 200 கி.மீ.வரையான அகலத்தைக் கொண்டிருக்கும் இவை உண்டாகும் இடத்திலிருந்து ஆயிரம் கிலோமீற்றர் வரை சுமார் 800 கி.மீ./மணிக்கு என்ற வேகத்துடன் பயணிக்கக்கூடியவை. **Seismic Waves** அல்லது தமிழில் 'தாரை அலைகள்' என அழைக்கப்படக்கூடிய அலைகளை விளங்கிக்கொள்வதற்கு எளியதொரு சோதனையை நாம் மேற்கொண்டு பார்க்கலாம். நீர் தேங்கி நிற்கும் தடாகம் ஒன்றினுள் கல்லொன்றை வீசிப் பாருங்கள். கல் விழுந்த இடத்திலிருந்து வெளிப்பக்கத்தை நோக்கி கரை வரை 'தாரை அலைகள்' நகர்வதை உங்களால் காணமுடிகிறதல்லவா! கூடவே வெளிப்பக்கத்தை நோக்கிச்


படம் -02

செல்லச்செல்ல அவற்றின் வேகமும்,வீச்சும் குறைகிறதல்லவா! மேலோட்டமாக அவதானிக்கக் கூடிய வகையில் இத்தாரை அலைகளின் தன்மையை நிர்ணயிக்கும் காரணிகளாவன: கல்லை வீசும்வேகம், நீரின் ஆழம், நீரைத்தொடும் கல்லின் பரப்பளவு. இதே போலத்தான் 'சுனாமி'யும்.

நாம் வாழும் உலகம் கோளவடிவமானது என்று சொல்லப்பட்டாலும், அடிபட்டு நசுங்கிய ஒரு கோளமாகவே அதன் திண்மப்பகுதி இருக்கின்றது. அதை கடல் என்னும் ஆடை கொண்டு அழகிய கோளமாக காலம் வடிவமைத்துள்ளது. சரி இந்தத் திண்மப்பகுதி தானும் -அதுதான் நமது 7 கண்டங்கள்- உறுதியாக நிலைபெற்றிருக்கின்றனவா என்றால் அதுவும் இல்லை. மனிதர்களால் வரலாற்று நகர்வில் பிரிக்கப்பட்ட அரசியல்ரீதியான 7 கண்டங்களுக்கு அப்பாலே பூமியும் தனக்குப் பிடித்த வகையில் பிரிந்திருக்கிறது. 6 பெரிய மற்றும் 4 சிறிய கண்டத்திட்டுகளாக நமது பூமி பிரிந்து கிடக்கின்றது. இந்தக் கண்டத்திட்டுக்கள் ஆண்டொன்றுக்கு 6 செ.மீ என்ற அளவில் மூன்று வெவ்வேறு திசைகளில் நகர்ந்து கொண்டிருக்கின்றன. 1912ஆம் ஆண்டிலே ஜேர்மனியைச் சேர்ந்த அல்.ஃபிரட் வேகெனர் என்னும் விஞ்ஞானி **Tectonic** என்னும் இக் கோட்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார்.


படம் 01 ஐ நோக்கும் போது நம்முடைய







# பின்னணியில்...

நாடு அமைந்திருக்கும் கண்டத் திட்டின் ஒரு எல்லை இந்தோனேசியாவை அண்டி அமைந் திருப்பது தெரியும். இது மட்டுமன்றி படத்தில் சிறிய முக் கோணங்களால் காட்டப்பட்டிருக்கும் பகுதிகளே ஆபத்தான






எரிமலைகளைக் கொண்டிருக்கும் இடங்களாகும். எரிமலைகள் மட்டுமன்றி நிலநடுக்கங்களும் இருவேறு கண்டத்திட்டுக்கள் பொருந்தும் பிரதேசங்களிலுள்ள



பிளவுகளை ஒட்டியே தோன்றும். இந்த வகையில் இந்தோனேசியா இவ்வாறான பல ஆபத்தான பகுதிகளைக் கொண்டிருப்பது தெரிகிறதல்லவா! சரி இவ் வாறாக கண்டத்திட்டுக்கள் அசையும் போது நிலநடுக்கமும், பூகம்பமும் ஏன் ஏற்படவேண்டும்?

1. கண்டத்திட்டுக்குள் ஒன்றையொன்று விலகி நகரும்போது, இடையிலுள்ள நிலப்பகுதி உள் நோக்கி பொறிந்து விழுவதால் ஏற்படலாம். (படம் 1இல் உள்ளதைப்போல)

2. இரண்டு கண்டத் திட்டுக்கள் ஒன்றையொன்று இடித்து நகரும் போது, நிலத் திரட்சி மேல் நோக்கித் தள்ளப் பட்டு அதிர்வுகள் ஏற்படலாம்.

3. மேலே கூறப்பட்ட இரண்டு நிகழ்வுகளின் போதும், குறிப் பிட்ட ஆழத்தில் உள்ள 'மக்மா' எனப்படும் தகித்துக் கொண்டிருக்கும் நெருப்புக்குழம்பு தனக் குக் கிடைத்த வாயிலின் மூலம் வெளிநோக்கிப் பீய்ச்சப்படும்.

தமிழிலக்கியங்களில் கூட 'கடற்கோள்' என்ற பெயரில், இவ்வகையான பாரிய அலைகள் நிலப்பகுதிகளை அழித்த வரலாறு பற்றிக்கூறுகின்றன. பாரதக்கதையோடு இணைந்த கிருஷ்ணரின் 'மச்சஅவதாரம்' பற்றிய புராணங்களிலும் இது குறித்த செய்திகள் உண்டு. வேதாகமத்தில் சொல்லப்படும் நோவா காலத்து உலக அழிவு கூட இந்த வகையைச்சேர்ந்ததே! அக்காலத்தில் உலகின் விசாலம் குறித்து அறியப்பட்டிருக்காத காரணத்தினால், தாம்தாம் வாழும் பிரதேசங்கள் பாரிய அழிவுக் குள்ளாகிய போதிலே, அவை உலக அழிவாக நோக்கப்பட்டன.

இதுவரையில் 'சுனாமி' எவ்வாறு உருவாகின்றன என்று பார்த்தோம். இனி இவற்றை அறிந்து-புரிந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படும் முன்னேற் பாடுகள் பற்றிப் பார்ப்போம். சாதாரணமாக வீச்சுக்குறைந்த நில நடுக்கங்களும், சுனாமிகளும் பரவலாகவே உண்டாகிக்கொண்டு தான் இருக்கின்றன. இருந்த போதும் இவை குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு மேற் பரப்பில் பாதிப்புகளை ஏற்படுத்து வதில்லை. இவற்றின் வீச்சளவு அதிகரிக்கும்போதே விளைவு களும் பாரதூரமாக அமையும். நிலநடுக்கத்தின் அளவை Richter Scale என்னும் அளவில் அளந்து கொள்ளலாம். 1935ஆம் ஆண்டிலே அமெரிக்க அறிஞரான சார்ள்ஸ் றிஸ்ரர் என் பவரே இந்த அளவைமானியைக் கண்டுபிடித்தார். இந்த வகையில் 0.00001 மி.மீ. இலிருந்து 1 மீற்றர் வரையான நடுக்கங்களை அறிந்துகொள்ளலாம். Seismograph என்ற தாரை அலகினால் அளக்கப்படும் இந்த நடுக்கத்தின் அலகு 2, அலகு 1 இனைவிட பத்து மடங்குபெரியதாகும்.



அலகு 6இலிருந்து ஆபத்தான தாகக் கணிக்கப்படுகின்றது.

தற்போது சுமாத்திராவில் ஏற் பட்டது 8.9 அளவைக் கொண் டதாகும். அங்கு ஏற்பட்டிருந்த நிலநடுக்கத்தின் முழு அதிர்வும் நேரடியாக நம்மை வந்தடையாத போதிலும், அதனால் ஏற்பட்ட பாரிய அலைகள் நீண்ட தூரத் தினை வீச்சுடன் பயணிக்கக் கூடியனவாக உருவாக்கம் கொண்டுள்ளன. கரைகளில் மோதும் வேளையில் உரு வாக்கம் பெற்ற இடத்தில் இருந் ததை விட இந்த சுனாமி அலை கள் உக்கிரத்துடன் மோதக் கூடியவை. அலைகளின் இயல்பு-வேகத்தினை கணித்துக்கொள் வதற்கு பின்வரும் சமன்பாடு கைக்கொள்ளப்படுகின்றது.

c=vgD

c=அலைகளின் வேகம்

g=புவியீர்ப்பு

D=நீரின் ஆழம்

விஞ்ஞானிகள் நிலநடுக்கம் ஏற்



படும் Focus இலிருந்து உருவாகும் P-மற்றும் S-அதிர் வலைகளைக் கண்காணிக்கும் மையங்களை நிறுவியுள்ளார்கள். A, B, C என வெவ்வேறு தூரங் களில் அதிர்வுகளின் தன்மை எவ்வாறுள்ளன என அறிந்து, மேற்பரப்பில் அவை விளைவிக் கக்கூடிய அனர்த்தங்களை அறி ந்து கொள்வதற்கான வாய்ப் புக்கள் உண்டு. இதன் மூலம் அனர்த்தம் உண்டாக இருக்கும் பிரதேசம், நேரம் ஆகியவற்றை கூடியளவு உறுதியுடன் சொல் லக்கூடியளவு வாய்ப்பிருக்கின் றது.

அன்பான மக்களே! நாங்கள் தனித்து விடப்பட்ட ஒரு இனம். எங்கள் தலைவிதியை நிர்ணயித் துக்கொள்ளும் பொறுப்பும், உரி மையும் எங்களுக்கு மட்டுமே! கோபுரம் கட்டி, கொலுவிருத்தி, பட்டும், பொன்னும் அணிவித்து நாம் அழகுபடுத்திப்பார்த்த இறைவனே எங்களைப் பார்க் காது இருக்கலாம்.. அதற்காக நாம் பாவிகள் என்று அர்த்தம் அல்ல. எரிமலைகளால் பிறந்த ஹவாய் தீவு தொடர்ச்சியாக 40 இற்கு மேற்பட்ட சுனாமிகளைக் கண்டும், இன்று உலகின் சொர்க்க புரியாக மற்றைய நாட்டவர்க ளால் கனவு காணப்படுகிறது. எல்லாக் காரியங்களுக்கும் கார ணம் உண்டு. அப்படியே. இதன தன் பின்னணியையும் புரிந்து கொள்வோம். இழக்கப்பட்ட ஒவ் வொருஉறவையும், எங்களின் உடன் பிறப்புகளாக எண்ணி ஆனதுக்கும் மேலால் தேவை யான அனைத்தையும் செய் வோம். இவ்வாறான அனர்த்தங் களைத் தவிர்ப்பதற்கான அறிவி யலை நம்மிடையே ஊக்கு விப்போம். தங்கள் கையாலாகாத பிற்போக்குக் கயமைத்தனங் களை நம்மிடையே அவிழ்த்துக் கொட்ட முனைபவர்களை அடை யாளம் கண்டு ஒதுக்குவோம். உங்கள் ஒவ்வொருவருடைய கண்ணீருடனும் பங்கு கொள்ளும் இதயத்துடன் அவசரத்தில் எழுந்த இந்த அவசியக்கட்டுரை முற்றுப் பெறுகிறது. இறந்த காலத்தை மனதிலும், நிகழ் காலத்தை கண்ணிலும், எதிர் காலத்தை கனவிலும் தாங்கித் தொடர்வோம் நாம் அனைவரும் நம் பயணத்தை!!



### பதிவு செய்யப்பட்ட சுனாமிகள் பற்றிய விபரம்

| காலம் | உயரம் (மீற்றர்) | நாடு |
|---|---|---|
| ஒக்ரோபர், 1562 | 16 | சிலி |
| யூலை, 1586 | 24 | பேரு |
| நவம்பர், 1604 | 16 | பேரு |
| ஒக்ரோபர் 1687 | 8 | பேரு |
| யூலை 1730 | 16 | சிலி |
| ஒக்ரோபர் 1746 | 24 | பேரு |
| பெப்ரவரி 1835 | 15 | சிலி |
| டிசம்பர் 1854 | 28 | யப்பான் |
| ஏப்ரல் 1868 | 20 | ஹவாய் |
| ஓகஸ்ற் 1868 | 18 | சிலி |
| மார்ச் 1871 | 25 | இந்தோனேசியா |
| மே 1877 | 21 | சிலி |
| ஓகஸ்ற் 1883 | 9 | இந்தோனேசியா |
| ஒக்ரோபர் 1883 | 10 | அலாஸ்கா |
| யூன் 1896 | 38 | யப்பான் |
| செப்ரெம்பர் 1899 | 60 | அலாஸ்கா |
| செப்ரெம்பர் 1899 | 12 | இந்தோனேசியா |
| யூன் 1917 | 11 | சமூவா தீவுகள் |
| மார்ச் 1933 | 29 | யப்பான் |
| ஏப்ரல் 1946 | 35 | அலொயற்றன் தீவுகள் |
| மே 1960 | 25 | சிலி |
| மார்ச் 1964 | 70 | அலாஸ்கா |
| ஒக்ரோபர் 1979 | 3 | பிரான்ஸ் |
| செப்ரெம்பர் 1992 | 11 | நிக்கராகுவா |
| யூலை 1993 | 5 | யப்பான் |
| யூன் 1994 | 60 | இந்தோனேசியா |
| யூலை 1998 | 15 | பப்புவா நியூகினியா |

# விடுதலைப்பயணத்தில் பற்றுக் கொண்ட தயாவதி



நெஞ்சில் தாங்கொள்ளாத வேதனை. உடலோ தாங்கமுடியாத அளவு மரண வேதனை, இதயம் படபடப்பு, சதா வேர்வை இந்த கூட்டிலுள்ள உயிர் எப்போது பிரியுமோ! பிரியும் உயிர் நோயினால் பிரிந்திடாது, தாயக விடுதலையிலேயே பிரியட்டும் என்ற ஆசை, எதிர்பார்ப்பு இவைகளுடனேயே அந்த புனிதம்மிகுந்த போராளியின் பயணம் களத்திலுள்ள காவலரணையே, வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

உண்மையில் தான் இருதய நோயாளி என்பது அவளுக்குத் தெரிந்தபோது திகைத்தே போய்விட்டாள். எல்லாவற்றையும்விட மருந்திட்டு குணமாக்கும் வைத்தியரின் இதயத்தில் ஓட்டை என்பது அபச் சொல்லாகவே சதா காதில் ஒலித்துக்கொண்டிருந்தது.

தனது வாழ்வு இத்தோடு இருண்டுவிடுமோ! என்ற எண்ணம் மாறி, வருத்தம் என்பது மனதின் பிரமை என்பதை உணர்ந்து, என்ன வருத்தமென்றாலும் எதையும் செய்யலாம் என்று நினைத்தால் நிச்சயம் செய்யலாம் என்ற மனத்துணிவுடனேயே அவள் களமிறங்கினாள், போராட்டத்தின் தேவை அறிந்து போராடத்துணிந்தவளாய் போர்ப்பயணம் தொடர்ந்தாள்.

வீரவேங்கை கப்டன்:தயாவதியை தெரிந்தவர்கள் எல்லாம் ஐயோ பாவம் என்ற வசனத்தையே சொல்லுவதுண்டு. காரணம் தயாவதி ஒரு இதய நோயாளி என்றே எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

ஆனால், அதிலிருந்து வேறுபட்டவளாக களத்திலுள்ள காவலரண்களில் வேகமும், துடிப்பும் உள்ள போராளியாக காணப்பட்டாள். தனது முதுகிலே மருத்துவப்பையுடனும், கையிலே கை எறிகுண்டுடனும் பலத்த எறிகணை வீச்சுக்கு மத்தியில் ஒவ்வொரு காவலரணாகச் சென்று மருத்துவத் தேவைகளை அறிந்து மருந்திட்டு அவர்களின் சுக நலன்களை, தேவைகளை கேட்டறிந்து அடுத்தகாவலரண் நோக்கி ஓடோடிச் செல்லும்போது இவளா இதய நோயாளி என்று பிரமிக்கும் அளவிற்கு அவளது களச்செயற்பாடுகள் அமைந்திருக்கும். கப்டன் தயாவதியின் மருத்துவ சேவைகளின் சிறப்புப்பற்றி எல்லோரும் சொல்லி கேள்விப்பட்டோம். ஆனால், அந்த வேங்கைக்குள் இருந்த சண்டைத்திறமையையும் அபார துணிச்சலும் தெளிவான விடுதலைச் சிந்தனையையும் பல தடவை பார்க்கக்கூடியவாறே இருந்தது.

முகாவில் காவலரண் தொடரில் கப்டன் தயாவதியை சந்தித்த நாளே அதிர்ச்சியானதாகவே இருந்தது. நேரம் மாலை 5மணியை தாண்டிவிட்ட நேரமதில் போராளிகள் அனைவரும் காவல் கடமையே கண்ணென இருந்த நேரம் என்பதனால் எதிரியின் நடமாட்டத்தை அவதானித்து விட்டனர். சற்றும் எதிர்பாராத விதமாக சோதியா படையணிக்கும் சாள்ஸ்அன்ரனி சிறப்புப் படையணிக்கும் இடைப்பட்ட இடத்தில் எதிரி திடீரென ஒரு திசைதிருப்பும் சண்டையை தொடங்கிவிட்டான்.எதிரி தாக்குதல் தொடுத்த இடத்திலேயே கப்டன் தயாவதியும் ஏனைய சில ஆண், பெண் போராளிகளும் வேலி அடைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

எதிர்பாராமல் சண்டை தொடங்கியதும், முதலில் தயாவதியின் குரலே கேட்டது. அடியுங்கோ.....என்று கத்தியவாறே பக்கத்திலிருந்த போராளி ஒருத்தியின் துப்பாக்கியை எடுத்து சுடத்தொடங்கினாள். என்னவென்று தயாவதி வேகம் பெற்றாளோ தெரியாது. அவளது துப்பாக்கி சடசடக்க ஏனைய போராளிகளும் சுடத்தொடங்கினர்.

இந்நேரதாக்குதலை எவருமே எதிர்பார்க்கவில்லை. வேலைப்பழு என்பதனால் எல்லோரும் திடீர் தாக்குதலுக்கு முகங்கொடுத்து சுதாகரிக்க சற்று நேரமெடுத்தது. ஆனால், எப்போதுமே வழிப்புடனிருக்கும் தயாவதி முந்திக்கொண்டு தாக்கியதனால் தொடர்ந்து போராளிகளும் தாக்கவே எதிரியின் தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

எல்லோரும் தயாவதி செய்யமாட்டாள் என்று எதை நினைத்தார்களோ அதைச் செய்து காட்டினாள்.

முகாவில் காவல்

**மிரேசு**

நிலைகளில் இன்னுமோர் இருள்சூழ்ந்த இரவு. போராளிகள் நீண்டதூரம் வேலி அடைக்க வேண்டியிருந்தமையினால், ஒவ்வொருநாளும் காலையிலிருந்து மாலைவரை காவலரண் வேலைகளைச் செய்துவிட்டு இரவு 12-01 மணிவரை வேலி அடைக்க வேண்டியிருந்தது. இதன் தொடரான ஒரு நாள் இரவு போராளிகள் சிலர் வேலி அடைக்க, அவர்களுக்கு பாதுகாப்பாக 25 மீற்றர் முன்பிருந்து தயாவதி காவல் கடமையில் இருந்தாள். தயாவதியிலிருந்து 50 மீற்றர் வலது பக்கமாக இன்னுமொரு ஆண் போராளி காவலில் நின்றார்.

நாங்கள் (ஆண், பெண் போராளிகள்) வேலைசெய்வதிலேயே கவனமாக இருந்ததில் எதையுமே கவனிக்கவில்லை. முன்னால் நின்ற தயாவதி திடீரென வந்து தனக்கு முன்னால் சத்தம் கேட்டதாகவும் பின் இல்லை என்றும் சொல்லி எம்மை உசார்ப்படுத்திவிட்டு, மேஜர் பிரபலியனையும், தேவகியையும் கூட்டிக்கொண்டு முன்னே சென்றாள்.

அதேநேரத்தில் டொங்கான் அடித்துவிட்டான் படுங்கோ என்று எம்மை நோக்கி மெதுவாக சத்தமிட்டாள். எமக்கு சத்தம் கேட்காததால் தயாவதி பொய்தான் சொல்கிறாள் என்று நினைத்த நேரத்திலேயே ஸ்..... என்ற சத்தத்துடன் எமக்கும்......தயாவதிக்கும் இடையில் 40மி.மீ எறிகணைவந்து விழுந்தது. அது விழுந்தபிறகே நாம் நிலையெடுத்தோம். எமது அதிர்ஷ்டம் அது வெடிக்கவில்லை. அனைவரும் தப்பிவிட்டோம் என நினைக்க மீண்டும் தயாவதி சொன்னாள்.

கிட்ட வந்திட்டான் - எதிரி அவன் இல்லை என்று திசை திருப்பவே தூரத்திலிருந்து எறிகணை அடித்தான். நாங்கள் எதிரியின் சத்தம் கேட்ட இடத்திற்கு அடிப்போம் அண்ணாக்கள், அக்கா அடிப்பமா என்று கேட்க, கமலன் ஓம் என்று சொன்னதும் லெப்: நிலவேந்தனும் மேஜர் பிரபலியனும் தேவகியும் கப்டன் தயாவதியும் நிலையெடுத்துத் தாக்க எஞ்சிய நாம் காப்பெடுத்து நகர்வரணில் இருந்தோம்.

எம்மவர் தாக்கிய இடத்திலிருந்து, எதிரியும் சரமாரியாக தாக்கத்தொடங்கிவிட்டான். தயாவதி விடாம அடியுங்கோ என்று சொல்லி அடிக்க. பக்கவாட்டில் நாமும் நிலையெடுத்து அடித்தோம். எதிரி ஏதேதோ சொல்லி கத்திவிட்டுப் பின்வாங்கத் தொடங்கினான். எதிரி எம்மை நெருங்கித் தாக்கவே முன்நகர்ந்திருக்கிறான். ஆனால், தயாவதி இனங்கண்டு விட்டதனால் எமது உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது. எமது தாக்குதலில் எதிரிக்கு இழப்பு ஏற்பட்டிருக்கவேண்டும்.

கப்டன் தயாவதிக்கு சிறு அதிர்ச்சி என்றாலும் உயிருக்கு ஆபத்து என்று வைத்தியர் சொன்னாராம். ஆனால், தயாவதி களத்திலே பல்லாயிரம் எறிகணை வெடிப்பு அதிர்வுக்குள் வாழ்ந்துதானே சாதனை படைத்தாள்.

இத்தாவில் சமர்க்களத்தில் தயாவதி வீரமுடன் களமாடி எதிரியை வெற்றிகொண்டாள். இத்தாவில் சமர் இறுதிக்கட்டத்தை அடைந்த ஓர் நாள் எதிரி ஓட்டமெடுத்த நாட்கள், சண்டை ஓரளவு குறைந்திருந்ததனால் தயாவதி கிணற்றடிக்கு போய் தண்ணீர் எடுத்துவிட்டு ஏதோ சத்தம் கேட்க திரும்பிப்பார்த்தவளுக்கு அதிர்ச்சி, 25 இற்கும் மேற்பட்ட சிங்கள எதிரிகள் தானிருந்த பக்கம் நோக்கி ஓடிவரத், தனது கையிலிருந்த ஒரேயொரு குண்டை கழற்றி எதிரிக்கு வீசி விட்டு தனது இடம்சென்று ஏனைய போராளிகளை சண்டைக்கு தயார்ப்படுத்தி அடிக்கச் சொல்லிவிட்டு தொலைத்தொடர்புமூலம் எமக்கு அறிவித்தாள். உடனே நாம் உசாரடைந்து ஓடிச்சென்று பக்கவாட்டாக தாக்கியதால் 12 எதிரி கொல்லப்பட்ட, ஏனையோர் காயங்களுடன் தப்பிவிட்டனர். இதுபோன்ற எத்தினையோ வெற்றிகளுக்கு கப்டன் தயாவதி சொந்தக்காரி.

ஆனையிறவை கைப்பற்றவென எதிரியின் அக்கினிச் சுவாலை தொடங்கிய நாளே புலிகள் தீச்சுவாலை எதிர்ச்சமரைத் தொடங்கிவிட்டனர். ஒரு விநாடியேனும் ஓய்வில்லாத வேட்டோசைகளும் எறிகணை விமானத்தாக்குதல்களும் இவற்றுக்குள்ளிருந்துதான் லெப்.கேணல் சுவேந்திராவுடன் கப்டன் தயாவதியும் எதிரிக்கு பாடம் கற்பிக்கத் தொடங்கினர். அலையென வந்த சிங்களப்பகையை, தங்களின் துப்பாக்கி ரவைகளால் கூறுபோட்டனர். எதிரியே வந்துபாரென சண்டைசெய்து கொன்று குவித்தனர். தயாவதி ஒரு கையில் துப்பாக்கியும் மறு கையில் மருந்துமாக நின்று எதிரியோடு சமராடி, எதிரிகளின் குண்டுதைத்த தன் போராளிகளுக்கு மருந்திட்டு, இறுதியில் எதிரியின் முழு கதையையும் முடித்துவிட்டு, தானும் ஈழமண்ணை முத்தமிட்டாள். உடல் நோயால் வாடிய போதும், உளம் சோராது, விடுதலைப்பயணத்தில். களத்தில் கதாநாயகியாக சாதித்து காட்டியவள்.

வேலணைத்தீவின் மையமாக அவர்களின் தளம் இருக்கிறது. வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்தியமகாவித்தியாலயத்தை எல்லையாகக்கொண்டு கஞ்சதேவ தளம் உள்ளது. இதனால் வங்களாவடி முதல் இப்பாடசாலை வழியான பிரதான போக்குவரவுப் பாதை சிறிலங்கா கடற்படையினால் தடைசெய்யப்பட்டுள்ளது. அடுத்ததாக புங்குடுதீவு ஹோட்ட எம்பர என்ற கடற்படை தளத்திற்குரிய வலயமாக உள்ளது.

புங்குடுதீவின் மடத்துவெளியில் வயலூர் முருகன் ஆலய எல்லையுடன் ஹோட்டஎம்பர தளம் இருக்கிறது. புங்குடுதீவின் நுழைவாயில், 8ஆம் வட்டாரம் புங்குடுதீவின் மாவட்ட மருத்துவமனை




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

யின் பின்புற கடற்கரை, புங்குடுதீவு மத்தியநகரம், சிறுபிட்டிச் சந்தி, கழுதைப் பிட்டி ஆகிய இடங்களில் கடற்படையினரின் முகாம்கள் உள்ளன.

புங்குடுதீவில் அண்மைவரை மக்கள் தாம் தம் சொந்த இடத்தில் வாழ சிறிலங்கா கடற்படையினரின் பாஸ்பெற வேண்டும். இலங்கைத் தீவில் மக்கள் தம் சொந்த இடத்தில் வாழ படையினரின் பாஸ்பெறும் நடைமுறை அமைதிக்காலத்திலும் புங்குடுதீவில் மட்டுமே உள்ளது. போர்நிறுத்த உடன்பாட்டிலும் அண்மைவரை படையினரால் விலக்கப் படவில்லை. வாழும் மக்கள், வாழச்செல்லும் மக்கள் பாஸ்வைத்திருக்க வேண்டும் என்பது நடைமுறையில் இருந்தது. மூன்று மாதங்களுக் கொருதடவை கடற்படைமுகாமில் தம்பதிவுகளை புதுப்பிக்கவேண்டும். 1996 முதல் 2000 வரை கடற்படை தீவகம் முழுமையை பொறுப்பேற்ற போது, புதிதாக கடற்படை அனுமதி அட்டை பெற வற்புறுத்தப்பட்டது. கடற்படையினர் யாழ்ப்பாண வரைபடத்தில் தம் ஆதிக்கப்பகுதியை நீலமாக நிறமூட்டிய தாளில் படம் இட்டு அடையாளஅட்டைகளை வழங்கினர். வீடுகளில் உள்ளோரின் படம் ஒன்று கடற்படைமுகாமிடம் ஒப்படைக்கப்பட்டு ஒரு பிரதி வீட்டில் தொங்கவிடப்பட வேண்டும. என சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் ஆண்கள் விழிப்புக்குழு என்றபெயரில் இரவில் கட்டாயப்படுத்தப்பட்டு காவலில் நிறுத்தப்பட்டனர். அவர்களுடன் E.P.D.P. தேசவிரோதிகளும் தொந்தரவு செய்தனர்.

நெடுந்தீவு, நயினாதீவு ஆகியவற்றுக்கு மக்கள் குறிகாட்டுவான் வழியாகவே செல்லவேண்டும். குறிகாட்டுவானில் கடற்படையினர் அடையாள அட்டை சோதனையின் பின்னரே மக்களை பயணம் செய்ய அனுமதிப்பர். அது ஒரு தடைமுகாமாகவே உள்ளது. நயினாதீவு செல்வோர் அதன் இறங்குதுறையில் கடற்படையினரிடம் அடையாள அட்டையை பதிவுசெய்யவேண்டும். நயினாதீவில் பௌத்த விகாரை நயினாதீவு தெற்கு ஆகிய இடங்களில் கடற்படை தளங்கள் உள்ளன. நெடுந்தீவில் கடற்படை சோதனை இல்லையாயினும் நெடுந்தீவு மாவலித் துறை நெடுந்தீவு மத்திய ஆகிய இடங்களில் சிறிலங்கா கடற்படை முகாம்கள் உள்ளன .

அனலைதீவு, எழுவைதீவு, என்பவற்றிற்கு கரம்பொன் கண்ணகை அம்மன்கோவில் இறங்குதுறை வழியாகவே மக்கள் போக்கு வரவு செய்யமுடியும். கண்ணகை அம்மன் கோவிலடி இறங்குதுறையில் கடற்படையினரின் அடையாள அட்டை சோதனைக்குட்படும். மக்கள் அனலைதீவு, எழுவைதீவு துறைகளில் உள்ள சிறிலங்கா கடற்படை முகாம்களில் தம்மை பதிவுசெய்து பொருட்களை சோதனைக்குட் படுத்தியே செல்லவேண்டும் இங்கு இத்தீவுகளுக்கு செல்லும் மக்கள் உரிய பதிவு அடையாள அட்டைகள் இல்லாதோர் தாம் ல்பவரின் முக்வரியை முகவரிகளைக்கூறி அடையாள அ டைகளை ஒப்படைத்துச்செல்லவேண்டும்.

ஊர்காவற்றுறை இறங்குதுறைக்கும் காரைநகருக்கும் இடையிலான படகுப்பாதையில் பயணிப்போர் இறங்குதுறைகளில் உள்ள கடற்படையினரின் சோதனைகளுக்குட்படவேண்டும்.

இப்படியாக யாழ்ப்பாயணத்தீவில் உள்ள தீவுகளின் மக்கள் சிறிலங்கா படையினரின் இரட்டை முற்றுகைக்குள்ளேயே வாழ்கின்றனர்.

இது யாழ்தீவுகளின் நிகழ் நிலைமை. மீண்டும் பின் ஆண்டுகளுக்கு திரும்புவோம்.

துருவன்




# பெருங்கற்கால பண்பாடுகள்

வரலாற்றுக்கு முந்திய காலம்-வரலாற்றுக்குப் பிந்திய காலம்,வரலாற்றுக் காலம்- இது மனிதனது பரிணாம காலத்தின். வரலாற்றுப் பகுப்பு.

வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் எமது மண்ணில் வாழ்ந்தான் என்பதற்கான சான்றுகள் வன்னியில் இரணைமடு புவிச்சரிதவியல் படையிலே கிடைத்தன. அவை 1லட்சத்து 25 ஆயிரம் ஆண்டுகள் தொன்மை யானவை.

பெருங்கற்கால- பண்பாடு எமது மண்ணில் கி.மு 1000 ஆண்டளவில் தொடங்கிவிட்டது.

பெருங்கற்கால பண்பாடு என்றால் என்ன? இறந்தோரை அடக்கம் செய்வதற்கு பெருங்கற்களால் ஆன ஈமச்சின்னங்களை அமைத்ததால் அது பெருங்கற்கால பண்பாடு என்ற பெயரைப்பெற்றது. இது இடைக்கற்காலத்துக்குப் பின் ஆரம்பமாகியது. இந்த பெரியகல் சவ.அடக்க முறையில் கல்லறை, கல்மேசை, கற்திட்டை, நடுகல், கல்வட்டம் என்ற பெயர்களில் கற்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த சவ அடக்கத்தில் இறந்தோரின் எச்சங்களுடன் இரும்பு ஆயுதங்கள்- சிவப்பு, கறுப்பு வண்ணங்களில் உருவாக்கப்பட்ட மட்பாண்டங்களும் புதைக்கப்பட்டன. இரும்புக் கருவி பயன்பாடு இக்காலத்தில் ஆரம்பமானதால் இது இரும்புக் காலம் என்றும் அழைக்கப் படுகின்றது. விவசாயம், கால்நடை வேளாண்மை, நீர்ப்பாசனம், மட்பாண்ட உற்பத்தி இக் காலத்தில் வளமாக்கப்பட்டன. வரலாற்றுதயகாலமாகக் கூறப்படும் இந்தப் பெருங்கற்காலத்துக்கும் நமக்கும் என்ன தொடர்பு.

வன்னியில் ஒரு பகுதியான புத்தளத்தின் பொன்பரப்பில் பெருங்கற்கால ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. 4அடி உயரமும் 2 அடி அகலமும் கொண்ட மண்ணாலான தாழிகளில் இறந்தோர் இங்கு அடக்கம் செய்யப்பட்டனர். இதனை முது மக்கள் தாழி என வ்ரலாற்றறிஞர் கள் குறிப்பிடுகின்றனர். 1956, 1970 ஆம் ஆண்டுகளில் பொன்பரப்பியில் இந்த முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. 320 சதுர அடி பரப்பில் 12 தாழிகள் இங்கு கண்டெடுக் கப்பட்டன.

1970இல் இது பற்றிய ஆய்வில் ஈடுபட்ட அமெரிக்காவின் பென்சில் வேனிய பல்கலைக்கழக தொல்பொருள் காட்சியக புதை பொருள் ஆய்வுக் குழுவினர் தமது அறிக்கையில் குறிப்பிட்ட விடயத்தை இங்கு நினைவூட்ட் வேண்டும். இப்போது நாம் அறிந் துள்ள இலங்கை வரலாறை மாற்றியமைக்கக் கூடிய மேலும் சூடாறிய தகவல்களை இவ்வாய்வு மேலும் பூர்த்தி செய்தபின் அறி யக் கூடியதாக இருக்கும். இரும்பு பயின்றயுகத்தினரால் இப்புதைகள் உண்டாகின என்பது அந்தக் குறிப்பு.

இதேபோல் தமிழகம் ஆதிச்ச நல்லூரில் திராவிடரின் தொன்மையான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவையும் பெருங்கற்காலப் பண்பாட்டுடையதே. தமிழகம் திருநெல்வேலியிலுள்ள ஆதிச்ச நல்லூர் முதுமக்கள் தாழி மனித எலும்புக் கூடுகளை வரலாற்றறிஞர் கள் அவை மனித தோற்றத்தின் தொடக்க காலத்தை சேர்ந்தவை யாக இருக்கக்கூடும் என்றனர்.

புத்தளத்தின் பொன்பரப்பி தவிர- யாழ்ப்பாணத்தில் கந்தரோடை ஆனைக்கோட்டை, காரைநகரின் சத்திராந்தை, மன்னாரில் மாந்தை, வவுனியாவின் மாமடுப் பகுதிகளிலும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் பூநகரி, அக்கராயன், அனுராதபுரம், யாழ்தீவகம் வேலணையின் சாட்டி, கும்புறுபிட்டி, திருகோணமலையில் குச்சவெளி, மட்டக்களப்பில் கதிரவெளிப் பகுதிகளில் பெருங்கற்கால மட்பாண்டங்கள் மற்றும் சின்னங்கள் கண் டெடுக்கப்பட்டன.

இவை திராவிடருடை யவை. பெருங்கற்காலத் திராவிடர் வாழ்வின் சான்றுகள் அவை.

பெருங்கற்கால பண்பாட் டின் பிரதான விடயங்களாக இறந்தோரை அடக்கம் செய்த ஈமச் சின்னங்கள், குடியிருப்புகள், குளங்கள், வயல்கள் என்பன உள்ளன. பெருங்கற்காலத்தின் சிறப்பம்சங்கள் இந்த நான்கும்தான். ஈமச்சின்னங்களை அமைப்பதில் இவர்கள் அதிக கவனம் செலுத்தினர். இவர்கள் இறந் தோரை புதைக்கையில் நிவேதனம் மற்றும் பொருட்களை மட்பாண்டங்களில் இட்டுப் புதைப்பர். சிறு சிறு கிராமங்களில் மக்கள் வாழ்ந்தனர். ஈமச்சின்னங்களை அமைப்பதில் பெருங்கற்களை இவர்கள் பயன் படுத்தினர். இதில் அதிக கவனத்தை இம்மக்கள் செலுத்தினர். ஆறுகளை மறித்து அணை அமைத்து இம் மக்கள் குளங்களை உருவாக்கினர். குழுக்குழுக்களாக மக்கள் வாழ்ந்தனர். குடியிருப்புகளில் வீடுகள் வசதியாக அமைக்கப்பட்டிருக்காதது ஒரு குறைபாடு. வீடுகள் மரங்களினாலே கட்டப்பட்டிருப்பதற்கான சான்றுகள் உள்ளன. கூரைகள் வைக்கோலால் வேயப்பட்டன. மந்தைகளும் இவர்களிடமிருந்தன. குளம் அமைத்தல்-நீர்ப்பாசனக் கால்வாய்களை' அமைத்தல் என இந்திய உபகண்டத்தின் தென்பகுதியில் நீர்ப்பாசனத்தை இவர்களே அமைத்தனர். ஈமச்சின்னங்களின் உழவுத் தொழிலுக்கான ஏரின் கொழுக்கள், மண்வெட்டிகள், நெல்உமிகள் என்பவற்றை இவர்கள் புதைத்தார்கள். உணவு உற்பத்திகளில் அதிக கவனம் செலுத்திய இவர்கள் ஈமச்சின்னங்களை பயிர் செய்யாத நிலங்களிலேயே அமைத்தனர்.

தென்னை, பனை வளங்களையும் இவர்கள் பேணி னர். ஈமச்சின்னங்களில் இருந்த அம்புமுடிகள், ஈட்டிகள் வேட்டையாடுதலில் இவர்கள் ஈடுபட்டதை வெளிப்படுத்தியுள்ளது. பசு, ஆடு, எருது, எருமை, குதிரை களை கால்நடைகளாக இவர்கள் வளர்த்துள்ளனர். கோழிகளையும் இவர்கள் வளர்த்துள்ளனர்.

பெருங்கற்கால பண்பாட்டை ஈமச்சின்னங்களில் இருந்து கிடைத்த பொருட்களே வெளிப்படுத்துகின்றன. தமிழகத்தின் ஆதிச்ச நல்லூரில் பாரிய அளவில் ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தாழிகளை மண்ணில் செய்து இறந்தோரை புதைப்பது இங்கு அநேகமாக நிகழ்ந்துள்ளது. இதற்காக உயிருடன் இருக்கையிலேயே தாழிகள் செய்யப்பட்டதும் நிகழ்ந்துள்ளது. ஆதிச்ச நல்லூரில் வெண்கலத்திலான சேவல் கொடிவேல் என்பனவும் முத்தலை ஒருதலைச்சின்னங்களும் கண்டெடுக்கப்பட்டன. இது இங்கு வேல் வணக்கம் நடந்ததாக அறியப்படுகின்றது. சூலவழிபாடும் இங்கு காணப்பட்டுள்ளது. மட்பாண் டங்களிலும் இச்சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மரம், மலை, சூரியன், சந்திரன் என்பவையும் இங்கு வழிபட்டப்பட்டுள்ளன. இரும்பு, செம்பு, பொன், வெள்ளி, உலோக பயன்பாடும் இப்பண்பாட்டில் இருந்துள்ளன.

மட்பாண்ட உற்பத்தி இப்பண்பாட்டில் சிறப்புற்று விளங்கியுள்ளது. கறுப்பு- சிவப்பு, நிறத்திலும் சிவப்பு நிறத்திலும், கறுப்பு நிறத்திலும் மிகத்தரமான மட்பாண்டங்களை இவர்கள் உற்பத்தி செய்துள்ளனர். சுடுவதற்குமுன் இம் மட்பாண்டங்களில் கூரிய ஆயுதத்தால் குறியீடுகள் இடப்பட்டுள்ளன.


ஒருதலைச்சூலம், இருதலைச் சூலம், முத்தலைச் சூலம், நட்சத்திரம், அம்பு, வில், படகு, தராசு, சக போன்ற குறியீடுகள் இம்மட்பாண்டங்களில் இடப்பட்டன.

தவிர இனங்காணமுடியா குறியீடுகளும் இவற்றில் உள்ளன. இத்தகைய குறியீடுகள் சிந்து வெளி நாகரிக மட்பாண்டங்களிலும் உள்ளன.

ஈமச்சின்னங்களை அமைத்தது தவிர இறந்தோருக்காக நடுகல் அமைத்து வழிபடும் முறையும் இங்கு இருந்துள்ளது. சங்க இலக்கியங்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பெருங்கற் காலப்பண்பாட்டு மக்கள் திராவிடர்களே. இந்த தொல் பண்பாட்டுக்கான சுவடுகள் எமது மண்ணில் காணப்படுகின்றன.

குரலோன்




# வயது கடந்த பெண்களும் சமூகமும்

தமிழ் கலாசாரத்தில் திருமண வயது கடந்துபோன பிறகும் திருமணம் கை கூடாத பெண்கள் "முதிர் கன்னிகள்" என அழைக்கப்படுகின்றனர். சமூக மயமாக்கல் படிமுறையில் திருமணம் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு தனியனின் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தினை கொண்டு வருவதும், அப்பாரிய பொறுப்பிற்கு அத்திவாரம் இடுவதும் திருமண வாழ்க்கையேயாகும். ஆனால், எம்மவரிடையே திருமணமாகாத கன்னிகளின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுகின்றது. முதிர்கன்னிகளின் உருவாக்கத்திற்கான காரணிகளை நோக்கின்;

1. மரபு ரீதியான காரணிகள்- சாதிக்கட்டமைப்பு, பண்பாட்டுச் செல்வாக்கு, மூட நம்பிக்கைகள்.
2. சமூக காரணிகள்/சூழல் காரணிகள்:- கல்வி, அந்தஸ்து, வர்க்கக் கட்டமைப்பு, உயர் செல்வாக்கு.
3. சமகால யுத்த விளைவுகள்:- இடப்பெயர்வு, சமூகம் பிளவு பட்ட தன்மை, தனிமைப்படுத்தப்படல், அங்கவீனர்கள் அதிகரிப்பு.
4. சமுதாயச் சீர்கேடுகள்.

இவை யாவும் கன்னிகளின் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கின்றன. கன்னிகளில் பெரும்பாலானவர்கள் சமூகத்தினராலேயே உள ரீதியாகப் பெரிதும் பாதிப்புறுகின்றனர். தம்மளவிலான உளவியல் பாதிப்புக்கள் ஒரு சிலரையே சாரும்.

உடற்பருமன், நிறம் போன்ற காரணங்களை மேற்கோள் காட்டி ஆண்கள் சிலரும், குடும்ப அங்கத்தவர்கள் சிலரும் பெண்களைப்புறக்கணிக்கச் செய்கின்றனர். அந்தஸ்து, சீதனம், கல்வி என்பவற்றுக்கப்பால் பெண்களின் உடற் கட்டமைப்பில் கவனம் செலுத்தி விடுகின்றனர். இதனைத் தட்டிக்கேட்டால் "பற்றாக்குறையான பண்டத்திற்கு விலை அதிகம்" அது போலத்தான் எனப் பதில் தருகின்றனர். சமூகத்தவர் சிலர் பெண்கள் காதுபட வன்மையான வார்த்தைகளைப் பிரயோகிக்கின்றனர்.

உண்மையில் காதலில் தோற்கடிக்கப்பட்டவர்களில் ஆண், பெண் இரு தரப்பினரையும் பாதிக்கும் வேளையில், ஆண்கள் போலி நியாயங்களை முன்வைத்து திருமணம் முடிக்க, பெண்களோ சமூகத்தார்கள் களங்கமான பல முத்திரைகள் பதித்தவர்களாக வாழ்கின்றனர்.

உண்மையில் காதலிக்காத பல பெண்களும் விஷமிகளின் வீண் வதந்திகளால் பாதிக்கப்படுகின்றனர்.

உதாரணமாக கமலினி எனும் முப்பத்திரண்டு வயது பெண் காதலித்தேன் என்று கூறும் விஷமி, கமலினியுடன் கதைத்ததோ, எந்த விதமான தொடர்போ அற்றார். பெயர், ஊர்கூடக் கமலிக்குத் தெரியாது. இப்போது அவளையும் அவளது குடும்ப அங்கத்தவர்களையும் கொச்சைப் படுத்துவதான வதந்திகள் அவரது சகபாடிகளின் அச்சுறுத்தல் என அவளை வாழவிடாமல் செய்வதற்கான கைங்கரியங்களாகும்.

இவ்வாறான கொடுமைகள் கூட சமூகத்தில் மறைமுகமாக நடந்துகொண்டிருக்கின்றன.

திருமணமாகாத பெண்கள் கூறும் எந்தக் கருத்துருவத்திற்கும் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் சிலர் "திருமணமாகவில்லை. அதன் தாக்கத்திலை கதைக்குது" போன்றதாக இழி சொற்பிரயோகங்களால் புண்படுத்திவிடுகின்றார்கள். ஒரு ஆணுடன் கதைத்தால் அவதூறாக கதை திரித்தும் விடுகின்றார்கள்.

திருமண வயதைத் தாண்டிய பெண்களைவிட அவர்களின் பெற்றோர், பாதுகாவலர்கள் பெரிதும் துயரடைகின்றனர். இவர்கள் முயற்சி எடுப்பதில்லை.

போன்றதான இன்னோரன்ன கருத்துக்கள். திருமணம்தான் வாழ்வா? முயன்றும் முடியாத திருமணங்கள் எத்தனை?

உத்தியோகத்திலும், அமைப்புக்களிலும், அலுவலகங்களிலும் பணிபுரியும் பெண்கள், வேறு வேலைகளிலும் ஈடுபடும் பெண்கள் கடமையில் கண்ணாவர். வீட்டிலிருக்கும் பெண்களின் மன உளைச்சல் கூடுதலாகத்தான் இருக்கிறது. சீதன ஒழிப்பு, அசமந்தப்போக்குகள் சமூகத்தாரிடையே அநேகரில் விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறிவிட்டது.

முதிர் கன்னிகளின் சுயம்:-

இன்று திருமணமாகாத எத்தனையோ பெண்கள் சமூக சேவை, சமுதாயத்தில் உயர் அந்தஸ்து, கல்வியில் உயர் பதவியை வகித்து சந்தோசமாக வாழ்கிறார்கள் என்பது எடுத்துக் காட்டு.

ஆண்களுக்குப் பெண்கள் சமமானவர்கள்.

ஆண்களில் தங்கியிருக்காமல் தமது சொந்தக் காலில் நிற்றல் வேண்டும் என்பதை உணர்த்துதல்.

பெண்களின் நம்பிக்கையும், துணிச்சலும் நிறைய விடயங்களை மாற்றிக்காட்டும் என்பதை நிரூபித்தல்.

சட்டத்துக்கு முரணான துன்புறுத்தலாயின் சட்டரீதியான தண்டனையை சம்பந்தப்பட்டவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு உரித்துடையவர்.

சமூகக் கட்டமைப்புக்களை மீறி திருமணம் செய்வதற்கும் உரித்துடையவர்கள்.

குடும்பத் தலைமைத்துவம் உடையவர்கள் அடக்குமுறைகளுக்கு பணியத் தேவையற்றவர்கள் (பெண்களுக்கெதிரான அடக்கு முறைகளுக்கு எந்தப்பெண்ணும் விதிவிலக்கல்ல.)



தம் அரவணைப்பிலிருக்கும் பெற்றோர்க்கோ, மற்றோர்க்கோ அன்பையும் அரவணைப்பையும் வழங்குவார்கள்.

திருமணத்தைக் கொச்சைப் படுத்துபவர்களுக்கும் வதந்திகளால் அச்சுறுத்துபவர்களுக்கும்:-

திருமணம் இதயம் சார்ந்த அன்பானதாக இருக்க வேண்டும். நேர்மை, உண்மைத்தன்மை, அன்புடைமை, சீரிய நிலை என்பதெல்லாம் அந்த அன்பின் உருவங்கள்.

இருபாலாரும் பூரண நேர்மையும், உண்மையும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒருவன் ஒருத்தியை பணத்திற்காகவோ, சமுதாய அந்தஸ்திற்காகவோ அல்லது அவனது சுய பெருமை, அகம்பாவம் என்பவற்றிற்காகவோ திருமணம் புரிந்தால் அது உண்மையான திருமணம் ஆகாது. இது போன்றதே ஒரு தலைக் காதலும். ஆண்மைத் திறனற்றவர்களின் பக்கச் சார்பான நரித்தந்திரங்கள். பெண்ணின் வாழ்வில் கேலிக்கூத்தை நடாத்தி, வஞ்சக வலையில் வீழ்த்தும் போலி நடிகர்கள்.

திருமண வயதைத் தாண்டிய பெண்கள் எல்லோரும் போல் தாமே உடல் நலம், அமைதி, குதூகலம், உள்ளுணர்வு, வழி காட்டுதல், அன்பு பாராட்டுதல், செல்வம், பாதுகாப்பு, மகிழ்ச்சி எவையும் தம்மாலே பெற்றுக் கொள்ளக்கூடியவர்கள். சமூகப் போலித் திரைகளின் கர்வம் நிறைந்த வார்த்தைகளால் புண்படத் தேவையில்லை.

**இனியவள்**

## முட்டை அல்வா




*தேவையான பொருட்கள்*

| | |
|---|---|
| முட்டை | - ஆறு |
| சர்க்கரை | - 50 கிராம் |
| நெய் | - சிறிதளவு |
| ஏலக்காய்த் தூள் | - அரைத் தேக்கரண்டி |

*செய்முறை:-*

முட்டைகளை உடைத்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி மஞ்சள் கரு, வெள்ளைக் கரு இரண்டும் நன்கு சேரும்வரை அடிக்கவும். சர்க்கரையைக் கலந்து நெய் பூசிய பாத்திரத்தில் போட்டுச் சிறு வெப்பத்தில் இடைவிடாமல் கிளறவும். இது பாத்திரத்தை விட்டு விலகி வரும் போது அதாவது பதமான பிறகு இறக்கி, ஏலக்காய்த் தூள் கலந்து நெய் தடவிய தட்டில் ஊற்றி வைத்து ஆறியவுடன் தேவையான அளவில் துண்டுகளாக்கிக்கொள்ளலாம்.

இதேமுறையில் முட்டைக் கலவையுடன் 50 கிராம் கோவாவைக் கலந்தும் செய்யலாம்.

## இப்படிச் செய்யலாம்...

பிறந்த குழந்தைக்கு நிறைய உடை வாங்காதீர்கள். ஆறுமாத வளர்ச்சியில் நீங்கள் வாங்கிய உடை குழந்தைக்குச் சிறியதாகிவிடும்.

✣ ✣ ✣

குளிக்கும்போது சீயாக்காயுடன் வெந்தயத்தையும் சேர்த்து அரைத்துத் தலைக்குத்தேய்த்துக்கொள்ளுங்கள். தலையிலுள்ள அழுக்குச் சுத்தமாகப் போய்விடும். நல்ல குளிர்ச்சி தரும். தலைமயிர் கருகருவென்று நன்றாக வளரும்.

✣ ✣ ✣

ஒரு வாரத்துக்குத் தேவையான காய்கறிகளை மொத்தமாக வாங்கி வைத்துவிடாதீர்கள். அவற்றிலுள்ள சத்தும் போய் சுவையும் மாறிவிடும். சில காய்கறிகள் காறலெடுக்கும். காய்கறிகளை பிடிங்கியவுடன் சமைத்தால்சத்துக்கிடைக்கும்.

✣ ✣ ✣

உங்கள் வீட்டுத்தோட்டத்தில் உள்ள முருங்கை மரம் நன்றாகக் காய்க்காவிட்டால் கவலைப்படாதீர்கள். எலுமிச்சங்காய் அளவு பெருங்காயத்தை நீரில் கரைத்து முருங்கை மரத்தின் அடியில் ஊற்றுங்கள் காய்க்காத முருங்கை மரம் கூடக் காய்க்கும்.

✣ ✣ ✣

புகை பிடிக்கும் பழக்கம் உண்டா? அதை விடுவதே மேல். அதைவிட முடியவில்லை என்றால் அடிக்கடி வெள்ளரிப் பிஞ்சு சாப்பிடுங்கள். உணவில் அகத்திக்கீரை சேர்த்துக்கொள்ளுங்கள். புகை பிடிப்பதால் ஏற்படும் கெடுதலில் பாதியளவு குறையும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

### குமரகுரு பரிசுத்திட்டம்–29

பெயர்:.............................................

முகவரி:.............................................

.............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# இளைய நாதம்

## நெடுஞ்சாலைகள்

திருகோணமலை ~ மட்டக்களப்பு
A~15
பரந்தன் ~ முல்லைத்தீவு
A~35
மாங்குளம் ~ முல்லைத்தீவு
A~34
பூநகரி ~ மன்னார்
A~32
மதவாச்சி ~ மன்னார்
A~14
கண்டி ~ யாழ்ப்பாணம்
A~09

தெ.மோகனதாசன்

## எங்கள் மரங்கொத்தி




அழகான சிறு பறவை மரங்கொத்தி. மரப் பட்டைகளின் அடியிலுள்ள புழு, பூச்சிகளைத் தின்பதற்காக இது மரத்தைக் கொத்திக் கொண்டிருக்கும். அதனால் இதற்கு மரங்கொத்தி என்று பெயர். முட்டையிடுவதற்காகக் கூடு அமைக்கவும் இது மரத்தை துளைத்துப் பொந்து செய்கிறது.

அவுஸ்திரேலியா தவிர உலகெங்கும் மரங்கொத்தி வாழ்கிறது. இப்பறவையில் பல இனங்கள் உண்டு.

பல இடங்களில் சாதாரணமாகத் தோட்டங்களிலும் தென்னந் தோப்புகளிலும் காணப்படும் அழகிய மரங்கொத்திப் பறவை, மைனாவை விடச் சற்றுப் பெரிதாக இருக்கும். இதன் முதுகு பொன் நிறமானது; கொண்டை சிவப்பாகவும் முகம் கருநிறமாகவும் இருக்கும். மற்றோர் இனம் இதைவிடச் சிறியது. இதன் முதுகு கறுப்பு, வெள்ளை நிறப் புள்ளிகள் கலந்ததாக இருக்கும்.

மரத்தைக் கொத்தித் துளைப்பதற்கேற்ப இப்பறவையின் அலகு கூர்மையாகவும் உறுதியாகவும் இருக்கும்.

இப்பறவையின் கால் விரல்கள், முன்பக்கம் இரண்டும் பின்பக்கம் இரண்டுமாக அமைந்திருக்கும். மரப் பட்டைகளில் தொற்றிக்கொள்ள விரல் நகங்கள் உதவுகின்றன. மரங்கொத்தியின் வால் இறகுகள் குட்டையானவை; நுனி கூராக இருக்கும். மரங்கொத்தி செங்குத்தாக உட்காரும் போது இவ்வால் இறகுகள் மரப் பட்டையில் பதிந்து பறவை தலைகீழாக விழாதபடி தாங்குகின்றன. இரவிலுங்கூட இதே நிலையில் மரங்கொத்தி உட்கார்ந்து தூங்கும்!! இறக்கையை விரிக்காமல் மரத்தில் விரைவாக ஏறி இறங்கும் திறன் இதற்கு உண்டு.

## பூக்கள்

கொத்துக் கொத்தாய் பூக்கும்
கொப்பில் ரோசாப் பூக்கள்
கொடி கொடியாய்ப் பூக்கும்
கொன்றை மஞ்சட் பூக்கள்
முத்து முத்தாய்ப் பூக்கும்
முல்லைப் பந்தற் பூக்கள்
தட்டுத் தட்டாய்ப் பூக்கும்
தாமரையிற் பூக்கள்
மொட்டு மொட்டாய்ப் பூத்து
முகைய விழ்க்கும் பூக்கள்
பட்டுப் பட்டாய்ப் பூக்கள்
பார்க்கப் பார்க்க ஆசை!

## சொற்சிலம்பம் - 68

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| னா | கோ | ம | தி | ல் | ட் | ஸ் |
| டி | கு | நீ | நா | ள் | ர் | ட் |
| நெ | பா | ல் | கோ | ன் | ணி | மி |
| நி | அ | க் | ய | சு | ங் | வெ |
| நா | ட் | த | ஷ் | ரா | வா | ர |
| சு | வ | கா | சா | ய் | யெ | ளி |
| சி | பூ | ய் | ஓ | கி | வி | த் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 66 இன் விடைகள்

01. நிக்கோட்டின்

02. ரஷ்யா

### சொற்சிலம்பம் - 66 இன் பரிசுக்குரியவர்

செ.மேனகா,
தரம்-04c,
கிளி/மத்தியகல்லூரி.

### சொற்சிலம்பம் - 66 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ந.வினோரூபன், யா/உசன் இராமநாதன், மகாவித்தியாலயம்.
02. ம.நிறோஜினி, யா/தாளையடி றோ.க, வித்தியாலயம்.
03. ந.நிரோசிகா, 8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
04. சு.மாதவி, றோ.க.பாடசாலை, புதுக்குடியிருப்பு.
05. அ.டா.அனோஜன், 123,கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி.
06. பெ.லவணியா, உரும்பிராய், யாழ்ப்பாணம்.
07. க.கஸ்தூரி, திருநாவுக்கரசு ம.வி, யா/கொடிகாமம்.
08. த.குணராஜ், மாதகல் மத்தி, மாதகல், யாழ்ப்பாணம்.

01. மிகவும் பிரகாசமான கோள்?

01) ..................................

02. அண்மையில் ஏற்பட்ட கடற்பேரலையின் பெயர்?

01) ..................................

பெயர் :- ..................................


முகவரி :-..................................

..................................

சொற்சிலம்பம்-68
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

## காட்டுக் காவல் துறை

பகுதி-02



# தூய்மையான கலை வளரவேண்டும் வளர்க்க வேண்டும்

## பிரதிமைக்கலை மாமணி கணபதி இராசரத்தினம்

**புகைப்படக்கருவியின் மூலம் ஒரு பக்ககண்ணினாலேயே உருவத்தின் தன்மையை மாற்றத்தை உணரமுடியும். ஓவியனால் முழுமையாக சிறு அசைவுகளைக் கூட அப்படியே வெளிக்கொணர முடியும். மனித முகம் மனத்தின் கண்ணாடி என்பர். அது உணர்வுகளிற்கேற்ப வேறுபடுகின்றது. முகங்களில் ஏற்படும் பாவ உணர்வுகளின் முழுப்பிரதிபலிப்புத்தான் உயிரோவியமாயிருக்கின்றது.**

இரா-வின்



பிரதிமைக்கலையில் தனக்கென ஒரு தனித்துவத்தைப் பெற்று இன்று 50 ஆண்டுகளாக ஓவிய உலகில் பல பரிமாணங்களில் தொடர்ந்தியங்கிக் கொண்டிருக்கும் கலாபூசணம், பிரதிமைக்கலை மாமணி, கணபதி இராசரத்தினம் ஓவியக் கலைஞர் மட்டுமன்றி நாடக புகைப்படக் கலைஞரும் ஆவார். சிறுவயதில் மாதுழம் பழத்திற்கும் கொய்யாப்பழத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை (அல்லி) மிகத் துல்லியமாக வரைந்து பாராட்டப் பெற்று ஜி.எஸ். எஸ். சி. ஆங்கில தராதரப் பரீட்சையில் சித்திரப் பாடத்தில் A தரச் சித்தியையும் பெற்றுள்ளார்.

சென்னை கலை மற்றும் கைப்பணி கலாசாலையில் ஓவியம் தொடர்பாக மேற்படிப்பை மேற்கொண்டு, இலங்கையின் பல பகுதிகளிலும் ஆசிரியராக சித்திர வித்தியாதிகாரியாக பரீட்சகராக கடமையாற்றியவர். யாழ்.பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழக சித்திரமும் வடிவமைப்புத் துறை வருகை விரிவுரையாளராக செயற்பட்டுவரும் க.இராசரத்தினத்துடனான நேர்காணலை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வோம்.


01. பிரதிமைக் கலை பற்றி பகிர்ந்து கொள்வீகளா?

ஆம் பிரதிமை என்றால் மெய்யுரு என்கிறார்கள். மற்றதெல்லாம் பொய்யுருவா? எனக் கேட்கத்தோன்றுகிறது. மனித உடம்பை மெய்யுரு என்பது வழக்கம். ஆங்கிலத்தில் போட்ரையிற் (Portrait) என்கிறார்கள். அதாவது (Portrait என்ற வினையடியில் இருந்து தோன்றியது.

போட்றே என்பது ஒரு பொருளை, மனிதனை, மிருகத்தை உருவ ஒற்றுமையுடன் வரைவது, செய்வதாகும் (சிற்பம்) புகைப்படமாக எடுத்தல் அல்லது கவிதை கட்டுரையாக எழுதுதல் விபரித்தலையும் குறிக்கும். உண்மைக்குப் புறம்பாக இருத்தல் தவிர்த்து சிலர் மனித முகத்தை வரைதலோ, வர்ணந்தீட்டி உருவாக்குதலோதான் பிரதிமை எனத் தவறாக நினைக்கின்றனர். எப்படியாயினும் மெய்ப்பொருளை மற்றவர்களிற்கு மனத் திருப்தியை ஏற்படுத்தக்கூடியதாக படைக்க வேண்டும். பிரதிமை ஓவியங்கள் உயிரோட்டமுடைய ஆக்கங்களாகும். பிரதிமைக் கலை நம்பு வெடிக்கும் பிரச்சினைக்குரிய கலை. இது புகைப் படம் போல் ஆகாது என்றவரிடம்.

02.பிரதிமைக் கலை அவசியமில்லை. புகைப்படக்கருவியே அவ் வேலையைச் செய்யக்கூடியது எனக் கூறப்படுகிறது. இது பற்றி தங்கள் கருத்து?

சித்திர சரித்திரம் அறியாதவர்கள் கலையின் தன்மையறியாதவர்களால் இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன. புகைப்படக்கருவியின் மூலம் ஒரு பக்க கண்ணினாலேயே உருவத்தின் தன்மையை மாற்றத்தை உணர முடியும். ஓவியனால் முழுமையாக சிறு அசைவுகளைக் கூட அப்படியே வெளிக்கொணர முடியும். மனித முகம் மனத்தின் கண்ணாடி என்பர். அது உணர்வுகளிற்கேற்ப வேறுபடுகின்றது.



முகங்களில் ஏற்படும் பாவ உணர்வுகளின் முழுப் பிரதிபலிப்புத்தான் உயிரோவியமாயிருக்கின்றது. பிரதிமை ஓவியங்களை வரையமுடியாதவர்களாலேயே மேற்படி கூற்றுக்கள் முன்வைக்கப்படலாம் என்று தெளிவுபடுத்தியவரிடம்.

03. நவீன ஓவியங்கள் ஓவியங்கள் பற்றி உங்களது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வீகளா?

நவீன ஓவியம் ஓர் ஆய்வுக் கலை. புகைப்படக்கருவியின் வருகை சிந்திக்கத்தெரிந்த ஓவியனை உலுப்பிவிட்டது. மனப்பதிவுவாதிகள் என செசான் பிக்காசோ தம்மை இனம்காட்டிக் கொண்டு நவீன ஓவியங்களை வரைந்தனர். ஓவியம் எந்தப் பாணியானாலும் ஓவிய இலக்கணம் தவறாது இருத்தல் அவசியமென பிக்காசோ கூறுகிறார். இன்று யாழ்ப்பாணத்தில் கையாலாகாதவர்கள் நவீனம் என்ற பாணியில் ஓவியங்கள் வரைகின்றனர். வரைபவர்களிற்கே அது பெரும் சங்கடத்தை ஏற்படுத்திவருகிறது என உதாரணம் ஒன்றை முன் வைத்த வரிடம்.

04. சத்தியம், சிவம், சுந்தரம் தான் கலை என்ற கருத்தை முன் வைக்கிறீர்கள் இவை பற்றி விரிவாக கூறமுடியுமா?

ஆம் சத்தியம் என்பது மெய்ப்பொருள் (Tuth) சிவம் என்பது ஆக்கம் (REATIE) சுந்தரம் என்பது அழகு (BEAUTY) மனதிற்கு இத்மளிப்பது இவற்றை உள்ளடக்கியதுதான் கலை (Art is Truth Reative, Art is BERUTY) எமது வாழ்வு துயரமானது அந்தத் துயரத்தையே ஓவியமாக்கி எந்நாளும் அதைப் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டுமா? அப்படியானால் அழகுக் கலை என்பதா. அழுக்குக் கலை என்பதா என எம்மிடமே கேள்வி கேட்டவரிடம்.

05. ஓவிய ஆசிரியராக, சித்திர வித்தியாதிகாரியாக இன்று விரிவுரையாளராகவுள்ள நீங்கள் மனம் நிறைந்த சேவையினை எங்கு செய்துள்ளீகள்?


சித்திர ஆசிரியராக 1951 ஆம் ஆண்டு அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் நியமனம் பெற்றேன். இக் கல்லூரியில் சித்திரப் பாடத்துடன் தமிழ், சமயம், பொது விஞ்ஞானம் ஆகிய பாடங்களையும் கற்பித்தேன். இவற்றுடன் கலை நிகழ்வுகளிற்கு நாடகங்களை பயிற்றுவித்து மேடையேற்றினேன். 1957 ஆம் ஆண்டு CUAPTA நடாத்திய சர்வதேச ஓவியப் போட்டியில் எனது மாணவர்களை பங்குபெற வைத்து பெறுமதியான முதற்தர பரிசுகளுடன் பாராட்டுக்களையும் பெற்றேன்.

12 வருடங்களின் பின் திருகோணமலை மாவட்ட சித்திர வித்தியாதிகாரிய பொறுப்பேற்று பல ஆசிரியர்கள் மாணவர்களிற்கு பயிற்சிகளைக் கொடுத்து நிறைந்த சேவையினை செய்தேன். ஆன்றைய எனது மாணவர்கள் ஓவியத் துறையில் மட்டுமன்றி வேறு துறைகளிலும் பொறுப்பான பதவிகளிலுள்ளனர். கடந்த மூன்று வருடமாக இராமநாதன் நுன்கலைக் கழக சித்திரமும் வடிவமைப்பும் துறையில் விரிவுரையாளராக கடமையாற்றி வருகிறேன் என்று தனது கடந்த கால நினைவுகளில் இருந்தவரிடம்,

06. மூத்த ஓவியர் என்ற வகையில் யாழ்ப்பாணத்தில் ஓவியத் துறையின் நிலை எவ்வாறுள்ளது? என்றதற்கு.

சில வருடங்களிற்கு முன் ஒரு ஓவியக் கண்காட்சிக்கு சென்றேன். அங்குள்ள படங்கள் யாவும் இரண்டு வருடத்திற்குள் வரையப்பட்டதாக குறிப்பிருந்தது. ஒரு சில படங்கள் மட்டுமே கால எல்லைக் குரியது. ஏனைய படங்கள் விலை கொடுத்து வாங்கியும் இரவல் எடுத்தும் கையெழுத்தை மட்டும் கச்சிதமாக வைத்து பூச்சாண்டி காட்டினர். இதில் இருந்து நீர் விளங்கிக்கொள்ளலாம்.

சதுரக் கோடுகள் போட்டு கட்டமைப்பு சுற்றோட்டம், வர்ணத் தூய்மையின்றி பிரதிமை தீட்டும் பிரபல்யங்களும் எம் மத்தியிலுள்ளன்ர். புகைப்படங்களை பெரிதாக்கி உருவப்படங்களை தீட்டிவிட்டு பிரதிமை என விளக்கமின்றி விளம்புபவர்களுமுள்ளனர். பிச்சைக்காரன் சத்தி போல பலரது பாணிகளையும் ஒன்றாக வரைகின்றனர். இவர்கள் ஓவியர்கள் அல்ல, படம் தீட்டுவோர்களாகவே கணிக்கப்படுகின்றனர். மேலைத்தேச ஓவியர்களது ஓவியங்களில் சிறுமாற்றங்களை ஏற்படுத்திவரைந்து விட்டு தம் பட்டமடிப்பவர்களும் உள்ளனர். "மனமெனும் மனைவியை மாற்றான் பின் செல்ல விட்டு தனக்கு மகன் பிறந்தான் என்று சொல்ல மடையனிற்குத் தான் மனம் வரும் இல்லையா? ஓவியர்கள் கற்புடையவர்களாக இருக்கவேண்டுமென" சற்று வித்தியாசமாக பதிலளித்தவரிடம்.



07. தேடலும் படைப் புலகமும் என்ற நூலில் யாழ்ப்பாணத்து ஓவியர்கள் வரிசையில் உங்கள் பெயர் குறிப்பிடப்பட வில்லை. இது பற்றி உங்கள் கருத்து.

அண்மையில் நடந்த யாழ்ப்பாணத்து 13 ஓவியர்களது கண்காட்சியில் பலரும் என்னைப் பாராட்டினார்கள்! பாவங்கள் என்னுடைய பிரதிமைகள் இருக்கும் வரைக்கும் என்னை வெற்றி கொள்ள முடியாது என்ற தோல்வி மனநிலையின் வெளிப்பாடாக, பிரதிமை செய்பவர்கள் ஓவியர்கள் இல்லையென் கிறார்கள். இதனால் தாங்கள் வகுத்துக் கொண்டவற்றையே ஓவியங்களாக ஓவியர்களாக நிலை நிறுத்துகின்றனர்.

அப்படியானால் செசான் பிக்காசோ போன்ற நவீன ஓவியர்கள் பிரதிமை செய்துள்ளார்கள். கோயா, வான்கோ, மனே, றெம்பிராண்ட, மைக்கலேஞ்சலோ, லியானோடாவின்சி போன்ற ஓவிய உலகம் ஏற்றுக் கொண்டவர்களையும் ஓவியர்கள் இல்லையென இந்த "பரமாத்த குருவும் சீடர்களும்" கூறுவார்களா என எம்மிடம் கேட்டவரிடம்.

08. உங்களது படைப்புகள் பற்றிக் கூறுங்கள்?

எஸ்.ஆர். கனகசபை மாற்கு கலாநிதி க. கைலாசபதி பேராசிரியர் அ.துரைராசா, முன்னாள் கல்வி அமைச்சர் நிசங்க விஜயரட்ண முன்னாள் ஆணையாளர். W.D.C மகந்ததில, திருமதி. மகந்ததில, கூட்டுறவாளர் வீரசிங்கம் என பல பிரமுகர்களது பிரதிமைகளைத் தீட்டியுள்ளேன். இவை தவிர கிராமத்திற்குத் திரும்பும் வண்டில் பொதுக் கிணற்றில் குளித்தல் திருவெம்பாவை போன்ற காட்சி ஓவியங்களையும் தீட்டியுள்ளேன். என சுருக்கமாகக் கூறியவரிடம்.

09. இறுதியாக கூற விரும்புவது எனக் கேட்டதிற்கு?

ஓவியம் ஓர் அழகுக் கலை. அது பார்ப்பவரின் உள்ளதை உலுப்பி விடக் கூடிய பாண்டித்தியமான கலைப் பரிமாணத்தை வேகமாகப் பாய்ச்சி தன் வலுவைக்காட்டிய வண்ணமேயிருக்கும். அதைப் படைத்தவன் எத்தமையன் எவ்வகையான் ஆகிலும் அவன் காணும் உலகத்தையே படைக்கின்றான். ஆனால், அது உலகின் பிரதிமையாகின்றது. அதில் அவனும் இரகசியமாக நுழைந்து கொள்வான்.

இவ்விதமான ஓவியக் கலையைக் கற்போர் கலையின் உள் தாற்பரியம் அறியா. கைவளம் இல்லாப் "போலி வைத்தியர்களிடம்" சிக்கித் தடுமாறுவதையும் அக் கலை பற்றி விளங்காது கண்டபடி உளறுவதையும் இன்றுவரை கண்டு கொண்டு தான் இருக்கிறேன் இன் நிலைமாற வேண்டும். தூய்மையான கலை வளர வேண்டும். வளர்க்கப்பட வேண்டும். இதற்கு கலைஞர்கள் தூய்மையாக வளரவும் ஒழுகவும் வேண்டும்.

"பொய்க்குழுவாகினும் ஒரு மெய்க் குழுவிடம் செல்க" எனும் முது மொழியைப் பின்பற்றியே ஓவியத்துறையில் மாணவர்கள் உள்நுழையவேண்டுமென தனது கருத்துக்களை நிறைவுசெய்தார். இராசரத்தினம்.

ஒரு ஓவியன் இன்னோர் ஓவியரை வரைந்ததாக அறியப்படவில்லை. இதற்கு எதிர்மாறாக எஸ். ஆர்.கனகசபை மாற்கு போன்றவர்களது பிரதிமைகளைத் தீட்டியுள்ளனர். சுய பிரதிமைகளை வயது மாற்றங்களிற்கேற்ப வரைந்துள்ளார். தனது மனைவி, மக்களையும் பிரதிமைகளாக படைத்துள்ளார். இவற்றுடன் ஓவியத்துறை சார்பாக பிரதிமைக்கலை (ஆளுநர் விருது பெற்றது) ஓவிய அறநெறி ஆகிய இரு நூல்களை எழுதி வெளியிட்டதுடன் வர்ணங்களின் தொகுப்பமைவு என்ற நூலையும் எழுதி வருகிறார். ஓவிய உலகில் கடந்த ஐம்பது வருடங்களாக தொடர்ந்தியங்கிவரும் ஓர் அற்புத கலைஞரிடம் பிரதிமை பற்றிய பல விளக்கங்களையும் உண்மைகளையும் அறிந்த நிறைவில் நேர்காணலை நிறைவு செய்தோம்.

# விதியை வென்றவர்... ஹெலன் கெல்லர்

தன்னம்பிக்கை இருந்தால் வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை என்று நிரூபித்துக்காட்டியவர் ஹெலன் கெல்லர்.

வாழ்க்கை என்பது ஒரு விசித்திர விளையாட்டு. அது முடியும் வரை நான் களைக்க மாட்டேன். தைரியமே எந்தத் துன்பத்துக்கும் மருந்து என்று அவர் நம்பி, தன் குறைபாடுகளிலிருந்து மீள, விதியோடு போராடி வெற்றிபெற்றார். ஊனமுற்றவர்கட்கு மட்டுமன்றி, ஐம்புலன்களும் குறைவரப் பெற்றவர்க்கும் அவரது தன்னம்பிக்கை மிகுந்த வாழ்க்கை, வழிகாட்டும் தீபமாகத் திகழ்கிறது.

ஹெலன் கெல்லர் பிறந்தபோது எவ்வித ஊனமும் இல்லாமல்தான் பிறந்தார். இரண்டாண்டுகள் வரை எந்தக் குறையுமில்லாமலே வளர்ந்தார். பிறகு வந்த காய்ச்சல் நோய், தான் போகும்போது அவரிடமிருந்து மூன்று இன்றியமையாத சக்திகளைக்கூடவே கொண்டு சென்றுவிட்டது. பார்க்கிற, கேட்கிற, பேசுகிற சக்திகளில் ஒன்றை இழந்தாலும் மனமுடைந்து விதியை நொந்து மூலையில் முடங்கிப்போவோரே அதிகம். ஆனால், ஹெலன் கெல்லர் மூன்றையுமே இழந்த பார்வையற்ற, செவிப்புலனற்ற, வாய்பேசாத நபர் என்றாலும், தன் அறிவுக்கூர்மையால், மனோதிடத்தால் அயராதஉழைப்பால், ஆழ்ந்த சிந்தனையால் அனைத்துலகும் போற்றும் அற்புதப் பெண்மணியாய் உயர்ந்தார்.

இன்றியமையாத புலன்கள் செயலிழந்தபோது ஹெலன் அழுது ஆர்ப்பரிக்கவில்லை. பிறர் பச்சாதாபப்படுவதைக் கூட விரும்பவில்லை. ஏன், தானே கூட தன் மீது பரிதாபப் பட்டுக்கொள்ளவில்லை. மாறாக, இத்தனை பெரிய குறைகள் அவருக்கு ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. மனமும் செயலற்றுப் போயிருந்தால்தான் அவரால் ஏதும் செய்திருக்க முடியாது.

எல்லோரையும் போல கல்லூரியில் படித்து, தனக்கென்று தனிச்சலுகை எதையும் கோராமல், கால நீடிப்பு கிடைத்த போதும் அதை நிராகரித்து குறிப்பிட்ட ஆண்டுகளில் அமோகமாக வெற்றிபெற்று, குறையேதுமற்ற பிற மாணவர்களைவிடச் சிறப்பாகத் தேர்வு பெற்றார். அரிய சாதனைகள் நிகழ்த்தி, அரிய வழிகாட்டும் நூல்கள் பல எழுதி, எழுபத்தெட்டு வயதுவரை ஆரோக்கியமாய் வாழ்ந்து உலகின் எட்டாவது அதிசயம் என்று பாராட்டப் பெற்றார்.



களிமண் போல இயக்கமற்று இருந்த அவருள் உணர்வைப் பெய்து, ஊக்கம் தந்து உன்னத நிலைக்கு உயர இயக்கியவர் மிஸ் ஸல்லிவன் என்ற ஆசிரியை. அவரே பாதிப்பார்வையில்லாதவர். நலிந்து, மெலிந்த ஆரோக்கியமற்ற உடலுடையவர். இருந்தும் இந்தக் காது கேளாத, வாய்பேசாத, கண் தெரியாத துர்ப்பாக்கியக் குழந்தையைக் கரையேற்ற வேண்டும் என்பதை வாழ்வின் இலட்சியமாக ஆக்கிக்கொண்டவர். இந்த இலட்சியத்திற்கேற்ப ஐம்பதாண்டுகள் அவர் ஹெலனை விட்டுப் பிரியாமல் நிழல்போலத் தொடர்ந்தார். அவருக்கு அன்னையாய், தோழியாய், நல்லாசானாய், வழிகாட்டும் தீபமாய், தடம் காட்டும் கைக்கோலாய்த் திகழ்ந்தார். வெறும் வயிற்றுப் பிழைப்புக்காக அவர் அதைச் செய்யவில்லை. அவர் மட்டும் ஹெலனுக்கு ஆசிரியையாகக் கிடைத்திராதிருந்தால் ஹெலன் என்ற அற்புத சாதனையாளரை உலகம் அறிந்திருக்க முடியாது போயிருக்கும்.

அவர் ஹெலனுக்குக் கற்பித்த விதம் யாராலும் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாதது. எழுத்தறிவற்றவருக்கு அறிவு ஒளியூட்ட முயல்கிற இன்றைய ஆசிரியருக்கு அவர் ஒரு அற்புத வழிகாட்டி. குறையேதுமற்றவர்க்குக் கற்பிப்பது எளிது. ஆனால், ஹெலன் கேட்க, பார்க்க, பேச இயலாதவர். அவருக்குக் கற்பிக்க எவ்வளவு பொறுமை, சகிப்புத்தன்மை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி வேண்டும்? ஸல்லிவனுக்கு அவை இருந்தன.

வார்த்தை வார்த்தையாக ஹெலனின்கையில் எழுதிக்காட்டித்தான் தன் கற்பித்தலைத்தொடங்கினார்.

ஒரு பொம்மையை ஹெலனிடம் கொடுத்து விளையாடச்சொன்னார். பிறகு அதை வலது கையில் வைத்து, இடது கையில், தன் விரல்களால் (D-O-L-L) என்று எழுதிக்காட்டினார். இதையும் ஒரு விளையாட்டு என்றே ஹெலன் உற்சாகம் கொண்டார். அவருக்கு இந்த விளையாட்டு மிகவும் பிடித்துப் போயிற்று. உடனே ஆசிரியையின் கையில் அதேபோல கொஞ்சங்கூடப் பிசிறில்லாமல் முதல் தடவையிலேயே எழுதிக் காட்டினார்.

தினமும் இந்த விளையாட்டு தொடர்ந்தது. புரிந்து கொள்ள முடியாதவற்றை, சூழ்நிலையைப் பயன்படுத்திக் கற்பித்தார். வீட்டுக்கு வெளியே அழைத்துப்போய் செடி, பூ, மரம், காய், பழம், மண், நீரூற்று, என்று அறிமுகப்படுத்தினார். இப்படி வார்த்தை வார்த்தையாய் எழுதிக் கற்பிப்பது எவ்வளவு ஆயாசம் தரும் விஷயம்! கேட்கிற நமக்குத்தான் அலுப்பும் சலிப்புமாய் தோன்றுமே தவிர, உயிரைக் கொடுத்து போதித்த ஆசிரியைக்கோ, ஊக்கம் குன்றாது கற்றுக்கொண்ட மாணவிக்கோ ஒரு சிறிதும் ஆயாசமில்லை.

எட்டு வயதில் பொஸ்டனில் உள்ள பார்வையற்றோர் பள்ளியில் சேர்ந்து அசாதாரண வளர்ச்சியும் அறிவும் பெற்றார் ஹெலன். பத்து வயதில் பேச வேண்டும் என்ற தீவிர ஆசை ஏற்பட்டது. அதற்கும் பயிற்சி தர ஒரு அற்புதமான ஆசிரியர் அவருக்குக் கிடைத்தார்.

மிஸ் ஸாராபுல்லர் என்ற ஆசிரியர் அந்த அற்புதத்தை நிகழ்த்தினார். 'லிப்ஸ் ரீடிங்' என்கிற உதடுகளை ஸ்பரிசித்து உணர்கிற கலையை அவர் ஹெலனுக்குக் கற்பித்தார். விரல்களால், பேசுபவரது உதடுகளைத்தொட்டறிந்து, அவ்வாறே ஒலிகளைப்பேசிப் பழகினார் ஹெலன். நூறுமுறை ஆயிரம் முறை வாய்வலிக்கப் பேசினார். ஓரளவு பேசவும் அவரால் முடிந்தது. முதலில் அவள் பேசியது பிறர்க்குப் புரியாது போனாலும் அவரது ஆசிரியர்களான ஸல்லிவன், ஸாராபுல்லர் ஆகியோரால் புரிந்துகொள்ள முடிந்தது. முழுமையான பயிற்சிக்குப்பின் கரகரத்த குரலில் ஓரளவு கேட்பவர் புரிந்துகொள்கிற மாதிரி ஹெலனால் பேச முடிந்தது. இந்தக்கடுமையான பயிற்சியாலேதான். அவர் உலகெங்கும் சுற்றி, சொற்பொழிவாற்றியும், ஊனமுற்றவருக்கு ஆதரவு தேடியும் சாதனை செய்ய முடிந்தது. கேட்பது மட்டுமே கிட்டாததாய் இருந்தது. அதனால் பிறர் பேசும்போது உதட்டில் விரல்வைத்து ஒலியை உணர்ந்து புரிந்துகொள்ளப் பயின்று வெற்றியும் பெற்றார்.

இதெல்லாம் அபூர்வ மோப்ப சக்தியும், பிறர் நடக்கும் போது எழும் அதிர்வினால் ஆளை இனம் காணும் திறனும் வாய்த்ததால், சக மனிதர்களை ஹெலனால் அறியமுடிந்தது. பிறரது கையைக் குலுக்கும் போதே அவரது குணநலன்களைப் படித்துவிடுகிற கூரிய திறனும் உண்டாயிற்று.



"இன்பத்தின் ஒரு கதவு மூடும்போது மற்றொரு கதவு திறக்கிறது. ஆனால், மூடிய கதவையே உற்று நோக்குவதால் நமக்காகத். திறந்திருக்கும் கதவை நாம் பார்ப்பதில்லை" என்று சொன்ன ஹெலன், தனக்காகத் திறக்கப்பட்ட கதவுகளை வெகு எளிதில் அறிந்து கொண்டு, தன் இழப்புக்களை அலட்சியப்படுத்தி வாழ்வின் இன்பங்களை உய்த்துணரக் கற்றார். இதன் மூலம் அரிய சாதனைகளை அவரால் எட்ட முடிந்தது.

பிரெய்ல் எழுத்து மூலம் பிரஞ்சும், லத்தீனும் கற்றார். கல்லூரித் தேர்வுகளிலும், பிரெய்ல் மூலமே தடவித் தடவி வினாக்களை அறிந்துகொண்டு விடைகளை, ஸல்லிவனின் கையில் எழுதிக்காட்டி விடைத் தாளில் எழுதச் செய்து வெற்றி பெற்றார். பிரெய்ல் எழுத்தில் வந்த எல்லாப்புத்தகங்களையும் தேடி, வாங்கிப் படித்தார். புத்தகங்கள் தந்த இன்பம் ஹெலனுக்கு மகத்தானதாக இருந்தது.

மனித ஆற்றலின் மீது அவருக்கு திடமான நம்பிக்கை இருந்தது. அதை வலியுறுத்தியும், அதனால் பெறக்கூடிய சாத்தியக்கூறுகளைப் பற்றியும் நூல்கள் எழுதி, கண்ணற்ற பலருக்கு அவர் கண்ணாகப் பயன்பட்டார்.

"நாம் நம்பிக்கை கொள்வோம்" என்றொரு நூல். அதில், வாழ்க்கையில் அவசரமாக ஒவ்வொருவரும் சாதிக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கி எழுதினார். "வாழ்க்கையை ஒரு அவசர நெருக்கடியாக, ஒவ்வொருவரும் உணரவேண்டும். அப்போதுதான் நமது ஆற்றல் எல்லாம் வலிமை பெற்று செயல்களைத் துரிதமாக செய்ய முடியும்" என்பது அவர் தன் எழுத்தின் மூலம் பரப்பிய கொள்கையாகும்.

உலகத்தின் கவனத்தை எல்லாம் கவர்ந்து புகழின் உச்சநிலையை ஹெலன் அடைந்தபோது உலகப்பயணம் மேற்கொண்டார். அப்பயணத்தின் போது உலகின் மிகச்சிறந்த மேதைகள் பலரை நேருக்கு நேர் சந்தித்து உரையாடி மகிழ்ந்தார். 1955 இல் இந்தியா வந்தபோது நேருஜியைச் சந்தித்து கைகுலுக்கி, அவரது உயரிய பண்புகளை உணர்ந்தறிந்தார். தான் சந்தித்த தலைவர்களில் நேருவே தன்னை மிகவும் கவர்ந்ததாகச் சொன்னார்.

உலகெங்கும் பார்வையற்றோர், செவிப்புலனற்றோர் பள்ளிகள் திறக்கவும், அவர்களுக்கு உதவவும் தன்பயணங்களில் பிரசாரம் செய்தார். ஒன்றரைக் கோடி ரூபா நிதியுடன் "ஹெலன் கெல்லர் நிதி" என்று தொடங்கி, அதிலிருந்து கிடைத்த தொகைகளை மேற்படி பள்ளிகளுக்கு வாரிவழங்கினார். அதற்கு நிதி திரட்ட நாடகங்கள் நடத்தியும், "மீட்சி" என்று தன்வாழ்க்கையை படமாக எடுத்து அதில் தன் பாத்திரத்தில் தானே நடித்தும் தொண்டு செய்தார். பார்வையற்றவர்கள் என்று தேசிய நூலகம் ஒன்றையும் உருவாக்கி, உலகம் முழுவதும் அதற்கு நூல் வந்து குவிய ஏற்பாடு செய்தார். இப்படித் தன் இறுதிநாள் வரை பொறி இழந்தவர்க்குத் தைரியம் ஊட்டி, அவர்களும் தன்னைப் போல் மீட்சி பெற உழைத்தார்.

1968இல் தனது 88 ஆவது வயதில், இடைவிடாது விதியோடு போரிட்ட இயக்கம் ஓய்ந்துபோனது.

மார்க்ட். வைன் என்ற மிகச்சிறந்த எழுத்தாளர், "இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த இருவரைத் தேர்வு செய்தால் ஒன்று நெப்போலியன், மற்றொருவர் ஹெலன் கெல்லர் ஆக இருக்கும்" என்று பாராட்டினார்.

"வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை: ஒன்று போனால் இன்னொன்று வரும்! அந்த நம்பிக்கை இருந்தால் வாழ்க்கை வெறுமையாகாது" என்று சொன்ன ஹெலன் தானே அப்படி வாழ்ந்து காட்டியவர். நம்பிக்கை வறட்சி நிறைந்து போயிருக்கிற இன்றைய வாழ்க்கையில், தன்நம்பிக்கையையும், துணிவையும் உண்டாக்கி, நிறைவோடும் மகிழ்ச்சியோடும் வாழ, ஹெலன் கெல்லரின் வாழ்க்கை அனைவருக்கும் வழிகாட்டுவதாக உள்ளது.

நன்றி:-இணையம்

# எங்கள் கடலுக்கு என்ன நடந்தது?

ஐயோ! கடவுளே
எங்கள் கடலுக்கு என்ன நடந்தது?
இயற்கைத் தாய்க்கேன்
ஈழத்தமிழர் மேல் இத்தனை கோபம்?
அன்னை மடியே தூக்கியெறிந்தால்
யாரிடம் நாம் அடைக்கலம் புகுவோம்?

யேசுவே!
எங்கள் தோள்களில்
ஏனிந்த நிரந்தரச்சிலுவைகளை சுமத்திவிட்டீர்?
ஒளிவிழா நிகழ்ச்சிக்காக
நாடகம் பழகிய பச்சைப் பாலகிகளை
காப்புக்கள் அணிந்த கைகளோடு
நாம் அள்ளியெடுத்த சோகத்தை
யாரிடம் சொல்லியழுவது?

அள்ளிக் கொடுத்த கடலே
அள்ளிக் கொண்டு போனால்
யாரம்மா எம்மை அணைத்துக் கொள்வது?
ஏழைக்குடில்களுக்குள் உறங்கிக் கிடந்த
ஏணைக்குழந்தைகள்
எவருக்கு என்ன பாவம் செய்தன?

ஏதுமேயறியாமல்
முதல் நாளிரவின் நிலவொளி வழிந்த
மணல் முற்றங்களுக்குள்
நத்தார்பாப்பா வந்தார்
பம்பரமாய் எங்கள் குழந்தைகள்
கைதட்டிக் கைதட்டி ஆடிப்பாடினர்.
அங்காலே தாய்மார்
ஆயிரங்கனவோடு பார்த்து ரசித்தனர்.

தூக்கி ரொபிகளை தூரத்தே எறிகையில்
துள்ளியோடி எடுத்துண்டு மகிழ்ந்த
எங்கள் சிறுவர்களை
அடுத்த நாட்காலை
முட்கம்பி வேலிகளுக்குள்ளும்....
பனைமர மட்டைகளுக்குள்ளும்...
உயிர் குடித்த உடல்களாய்
கடலேன் செருகிப்போய் போனது?

கருக்கறுத்த காயங்களாலும்
கம்பிகள் கிழித்த சதைகளாலும்
வழிந்தொழுகும் குருதிகளோடு
விழிகளில் நீர் வழிய
வீதிகளில் விம்மித்தவிக்கின்றன
எஞ்சிநிற்கும் உறவுகள்

அடிபட்டு அடிபட்டு
அலையடித்து எற்றுண்டு போய் கிடக்கிறான்
அம்மணமாய் ஒரு சிறுவன்

நீலக் கடலே!
நீயேன் இப்படி துரோகம் புரிந்தாய்?
அதிகாலைப் பொழுதிலும் கூட
எத்தனை அமைதியாய்
அழகாய் படுத்துக்கிடந்து
அலைக்கரம் அசைத்தாய்
வெண்நுரை அலையே!
நீ கவிதையெழுத
கடற்கரைமண் போதாதென்றா
எங்கள் களிமண் வீடுகளை
ஏப்பமிட்டாய்?

போர்
உடைமைகளோடு எம்மை
இடம் பெயர வைத்தது
கடலோ
உடுத்த உடுப்புக்களையுமிழந்து
ஓடிவர வைத்துவிட்டதே!

போர்
எங்கள் உறவுகளை
கொள்ளை கொண்டு போனது
சமாதானம்
எங்கள் வாழ்வுகளையே
காவு கொண்டு போயிற்றே!

தனக்கு "பிட்டு" தீத்திக்கொண்டிருந்த
ஒன்றரை வயது
ஒற்றைக் குழந்தையை
கடலுக்குணவாய் கொடுத்துவிட்டு
ஓவென்று அழுகிறார் ஒரு தந்தை

கையில்
அணைத்தெடுத்து ஓடிவந்த
தன் பாசநிலவுகளை
கடல்
பறித்தெடுத்துவிட்ட வேதனையில்
படுத்துக்கிடந்து கதறுகிறாள்
தாயொருத்தி

மிதந்து வந்த படகினுள்ளே
தூக்கிக் குழந்தையை எறிந்துவிட்டு
போய்ச் சேர்ந்து விட்ட
துணைவியை எண்ணியெண்ணி
அவள் புடைவைமேல் தலைவைத்து
விம்முகிறான் கணவன்.

ஊட்டி வளர்த்த நாயொன்று
கண்மூடிக்கிடக்கும் பெண்ணின்
உடல் சுற்றி உடல் சுற்றி
ஊளையிட்டு அழுகிறது
கலைந்து கிடக்கும் சேலையை
வாயால் இழுத்து மூடி
கால்கள் நக்குகிறது.

இயற்கைத் தாயே
ஈழத் தமிழனுக்கேன் இந்தச் சோதனை.
இனி என்றென்றும் ஆறாதே!
இந்தக் கடல் தந்த வேதனை.

யாழ்வீரன்

இ
படித்ததில் பிடித்தது

# நிலங்களை விழுங்கி நீண்ட கடல்

எமது மண்ணிலே
நகரினுள்கடல் புகுந்து விட்டது
குசினிகளுள்
புகுந்து புறப்படுகிறது
அடுக்களையிலிருந்து
வாரிச் செல்லும் விறகுகளை
இரவுகளில் திருப்பி அனுப்புகிறது

எமது மண்ணின் நிலங்களை
கடல் விழுங்கிக் கொண்டிருக்கிறது

ஒரு நாளின்
நடுச் சாமத்திலே
அது
சீமெந்துச் சுவர்களையும்
அழித்தபடி வந்தது
கோழிகள் பானைகள் அகப்பைகள்
அனைத்தையும் வாரியே சென்றது

எமது மண்ணின் நிலங்களை
கடல் விழுங்கிக் கொண்டிருக்கிறது.

பெண்களின் ஓலங்களும்
அழும் ஓசைகளும்
கேட்கச் சகிக்கவில்லை.
உக்கிரக் கடலிடமிருந்து
தங்களைக் காக்கும்படி
கும்பிடும் கடவுளையெல்லாம்
பெயர் கூவி அழைக்கிறார்கள்

தன் பானை இருந்த
இடத்தில் அருகே
அக்கூ நிற்கிறாள்
அவள்
பிள்ளைகள் இரண்டும்
அருகில்
குளிரில் நடுங்கியபடி
கைகள்

மார்புகளை மூடியிருக்க
சோகமாய் அழுகிறாள்
அவள் மூதாதையர்
அவளைக் கவனிக்கவில்லை
அவளின் கடவுள்கள்
அவளைக் கைநெகிழ்ந்து விட்டனர்

குளிரான
அந்த ஞாயிறு காலையிலே
புயல் அடித்துக் கொண்டிருந்தது
ஆடுகளும்கோழிகளும்
குரூரமான கடலின் நீரிலே
போராடிக் கொண்டிருந்தன
விம்மல்களுக்கும்
நெஞ்சின் ஆழத்திலிருந்து
எழும் அனுங்கல்களுக்கும்
மேலாக
கடல் நீர்
கரையில் மோதும் ஓசை
கேட்டப்படியிருந்தது
அவர் உடமைகளையெல்லாம்
அது வாரிப்போய் விட்டது
தாயகத்தின் நிலங்களை
விழுங்கிக் கொண்டிருக்கும....
முழுதாக விழுங்கிக் கொண்டிருக்கும்
கடலிலே
சீதனமாய் வந்த
தன் நகைகளை யெல்லாம்
அதீனா இழந்து போனாள்.

ஆங்கிலத்தில்: கொபி அவுணர்
தமிழில்: வின்சென்ற் புளோறன்ஸ்

# கல் மனக் கடல் தாயே....

காலம் பார்த்து கழுத்தில்
கத்தி நீட்டிவிட்டாய்
கடல் தாயே...
காலமெல்லாம் மாறாத வடு
தமிழர்களுக்கு உன் மீது.
அள்ளி வாழ்வு தந்த கையால்
அத்தனையும் அழித்து விட்டாய்- உன்
அரக்க குணத்தால்

பஞ்சு மனம் கொண்ட பிஞ்சு
உயிர் பறித்து விட்டாய்
உனக்கென்ன கல் மனமா
கஞ்சி ஊத்தக் கூட- காசில்லா
உடமையாவும் அழித்து விட்டாய்
உனக்கென்ன வஞ்சமனமா.....

உனக்காக உயிர் துறந்த
வேளையாவும் மனம் மகிழ்ந்தோம்
நாம் உன்னால் வாழ்வதனால் -ஆனால்
அனைத்தும் இன்று அழித்து விட்டாய்
உனக்கென்ன கல் மனமா...
நம்பி வாழ்ந்த உறவுகளை- நர
பலி எடுத்து விட்டாய்
உனக்கேன் இந்த இரத்த வெறி
மழை வெள்ளம் வீடு புகுந்து
வந்த சோகம் முடியுமுன்னே
கொஞ்சம் கூட கருணையின்றி
அத்தனையும் அடிக்கடலில் அமிழ்த்தி விட்டாய்
எம் உடல்கள் உப்பில் ஊறி
பருப்பதை பார்ப்பதற்கு
உனக்கென்ன கல்மனமா....

போர் வடு கண்டிராத- சோக
வடு இன்று உன்னால்
உனைப் போற்றிய வாய்களை யெல்லாம்
பொய்யாக்கி விட்டாயே
எம்மவர் இங்கே இறப்பதெல்லாம்
உனக்கு என்ன இனிக்கிறதா....
களங்கம் இல்லா மனம் யாவும்
கண்ணீரில் வாடுதிங்கே-காலம்

எல்லாம் மாறாது -நீ
எமக்கிழைத்த களங்கம் யாவும்.

ந.புரட்சி மாறன்.

# காயப்படாமலே.....

சினேகமே!
நானுனக்குச் செல்லமாய்
வார்த்தைக் கற்களால்
எறிந்தேன்
நீ அதைக் குறும்புத்தனம் என்றாய்
ஆனால் நான் குருட்டுத்தனமாய்
எறிவதற்குத் துணிந்தேன்
நீ மட்டும் அப்போது
செல்லமாய் கண்டித்திருந்தால்
நீயின்று காயப்பட்டிருக்கத்
தேவையுமில்லை
நான் கண்ணீர் சிந்தவேண்டியதுமில்லை
ஆனாலுமொன்று இனிமேல்
நீயென்னைக் கண்டிக்க நினைத்தால்
நான் காயப்படாமலே
இரத்தம் சிந்த வேண்டியிருக்கும்.

த.றமா

# எங்கள் ஊர்

மாங்காய்க் கெறிந்து
மண்ணில் விளையாடி
பாங்காய்த் திரிந்த ஊர்
பாழ்பட்டுக் கிடக்குதையோ

வரம்பில் நடந்து
அழகை ரசித்து
பரம்பரை வயல்கள்
சீரழிந்து கிடக்குதையோ

தேங்காய்க் குரும்பை
தொங்கிப் பறித்து
நாங்கள் குடித்த தென்னை
தலையிழந்து நிற்குதையோ

பால் தயிர் தந்த
எங்களின் பசுக்கள்
கால் குளம்பிழந்து
கதியற்று நிற்குதையோ

பொலிவை வழங்கி
அறிவுத்தேடல்கண்ட
கலைப்பள்ளிகள் எல்லாம்
இடிந்து கிடக்குதையோ

ஆன்மீகம் தந்த
வீக்கிரகம் எல்லாம்
தெருவில் கிடக்குதையோ

டயாழினி

# மறந்து போக முடியாத தமிழராட்சி மாநாட்டு படுகொலைகள்




**1974 ஆம் சனவரி 10 ஆம் நாள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழராட்சிமாநாட்டைக்குழப்பி அங்கு மேற்கொள்ளப்பட்ட படுகொலை எதிர்வரும் சனவரி 10ஆம் நாளுடன் 31 ஆண்டுகள் ஆகிறது.**

வரலாற்றில் சில நிகழ்வுகள் பெரும் திருப்பு முனைகளை ஏற்படுத்தி விடுகின்றன. அந்த வகையில் முதல் திருப்பு முனை ஏற்பட்டது. தரப்படுத்தல் எனும் தமிழ் இளைஞர்களின் உயர் கல்வியில் கை வைத்ததினாலாகும். இரண்டாவது திருப்பு முனை ஏற்படக் காரணம் நான்காவது உலகத் தமிழராட்சி மாநாடும் அதன் இறுதிநாள் படுகொலைகளுமாகும். இப் படுகொலைகள் நடந்து 31 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆம் 1974 சனவரி 10 இல் தான் அந்தத்துயரம் இடம்பெற்றது. எனவேதான் அந்த சனவரி 10 தமிழ் மக்களின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட நாளாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத்தமிழினம் தன் சொந்த மண்ணில் தனது மொழிக்கு ஓர் ஆராய்ச்சி விழா நடத்த உரிமை இல்லை என்று மிரட்டப்பட்ட நாள் இந்த நாள். தனது மொழியினை இனிமையை, சுவையை, இலக்கிய மாண்பை அறிஞர்களின் வாயால் கேட்கக் கூடாது என்று தடைசெய்யப்பட்ட நாள் இந்த சனவரி 10 ஆம் நாளாகும். இதன் மூலம் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு ஓர் உண்மைத் தோற்றத்தைத் தெரிவித்தனர். தமிழினம் சிங்கள ஆட்சியின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாக நடக்க வேண்டும் என்பது தான் அந்த உண்மைத் தோற்றமாகும். சிங்களத்தின் இவ் உண்மைத் தோற்றம் தமிழ் இளைஞர்கள் பாதையைத் திசைதிருப்பிய காரணியாக அமைந்தது எனலாம்.

நான்காவது உலகத் தமிழாராச்சி மாநாடு யாழ்ப்பாண மண்ணிலே நடைபெறாது தடுக்க சிங்கள ஆட்சியாளர் பல முயற்சிகளை மேற்கொண்டனர். இதற்கு முக்கிய காரணம் தமிழினத்தின் உரிமைகளைப் பறித்ததை உலகுக்குத் தெரியாமல் மறைப்பதற்காகும். 1972 இல் குடியரசு அரசியல் யாப்பு மூலம் தமிழினத்தை இரண்டாந்தர குடி மக்களாக ஆக்கியதன் மூலம் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராட முனைந்திருந்தனர். இவ் வேளையில் பிற நாட்டறிஞர்கள் யாழ்ப்பாண மண்ணிற்கு வந்தால், தமிழ் மக்களின் உணர்ச்சிகளை அவர்கள் அறிந்து விடுவார்கள். என்று அரசு அச்சம் கொண்டது. எனவே தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாண மண்ணிலே நடக்கவிடாமல் தடுக்க தன்னாலான அனைத்து வழிகளையும் பலத்தையும் கையாண்டது. கொழும்பிலே மாநாட்டை நடத்தி எல்லாவற்றையும் மூடி மறைத்து விடலாம். தமிழ் மக்களுக்கும் மொழிக்கும் சிங்கள அரசு கெடுதல் எதுவும் செய்யவில்லை. உரிமைகள் எதனையும் பறிக்கவில்லை என்று உலகிற்குக் காட்டலாம் என்று அரசு நினைப்பாக இருந்தது. இந்தத் திட்டத்திற்கு இங்கிருந்த பிற்போக்கு வாதிகளும் துணைநின்றனர். இந்தப் பிற்போக்குவாதிகள் முற்போக்கு முத்திரை குத்தியிருந்தனர். இந்த மாதிரி துரோகத்தனம் தமிழினத்தில் அன்றும் இருந்தது. இன்றும் இருக்கின்றது என்பது பெருங் கவலைக்குரியதாகும். யாழ்ப்பாண நகரமண்டபம் பள்ளிக்கூடங்கள் என்பனவற்றை மாநாடு நடத்தக் கொடுக்கக் கூடாதென கட்டளைகளை அரசு வழங்கியது. மறுபுறம் மாநாடு நடத்த யாழ்ப்பாணத்தில் வசதியான இடங்கள் இல்லை. பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தில் கொழும்பிலே நடத்துங்கள் என்று அழைப்பு விடுத்தது அரசு. ஆனால், தமிழர் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்திலேதான் நடக்கும். மாற்றத்திற்கு இடமில்லை. என்று தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையினர் அறிவித்தனர். கோபங்கொண்ட அரசு வெளிநாட்டு அறிஞர்களுக்கு இங்கு வர அனுமதி மறுத்தது. தப்பித் தவறி வந்த அறிஞர்கள் விமான நிலையத்தில் வைத்து பல வந்தமாக நண்டுக் கட்டாகத் தூக்கி விமானத்தில் போடப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

அரசின் திட்டங்கள் யாவும் தோல்வியிலேயே முடிவடைந்தன. தமிழாராய்ச்சி மாநாடு எத்தடைகளையும் மீறி யாழ்ப்பாண மண்ணில் நடைபெறுவது உறுதியாகி விட்டதனால் அரசு இறங்கி வரவேண்டியதாகியது. வெளிநாட்டு அறிஞர்கள் வர விதித்திருந்த தடைக் கடைசி நேரத்தில் நீக்கியது. காலதாமதமாகத்தடையை நீக்கியதனால் அறிஞர்கள் முழுப்பேரும் பங்குகொள்ள முடியாமற் போயிருந்தாலும் பெருமளவு அறிஞர்கள் தமது ஆய்வுக்கட்டுரைகளுடன்



கலந்து கொண்டனர்.

ஆய்வுக்கட்டுரைகளுடன் துறைபோன்ற ஆய்வு அறிஞர்கள் ஆய்வு செய்தமை ஒரு புறம் நடந்தது. அவைபற்றிய திறனாய்வு மக்கள் மத்தியில் நடந்தது. மறுபுறம் பல்வகைக் கலை நிகழ்ச்சிகள், காமன்கூத்து,

## சிலம்பு

நாட்டார்பாடல்கள், நாட்டிய நாடகங்கள், நாடகங்கள், கூத்துவகைகள் என்பன மக்களை மகிழ்வித்த வண்ணம் நடைபெற்றன. எல்லா நிகழ்ச்சிகளிலும் மக்கள் வெள்ளம்போல் திரண்டனர். யாழ்.நகரம் மக்களால் நிறைந்து காணப்பட்டது. மக்களின் மனங்களிலே மகிழ்ச்சித் தாண்டவம் ஆடியது. தங்கள் தங்கள் வீட்டிலே நடக்கும் இனிய விழாவாக ஒவ்வொருவரும் நினைத்துச் செயற்பட்டனர். இதனால் ஒவ்வொரு ஊரும், அழகுறச் சோடிக்கப்பட்டிருந்தன. எங்கும் எழுச்சிக்கோலம், சோடனைகள், சிகரங்கள், மணவறைகள், சப்பறங்கள், வாழை, கமுகு, தென்னை, பனை என்பன வீதிகளை அலங்கரித்து நின்றன.


எமது மொழியை ஆய்வு செய்ய இத்தனை அறிஞர்கள் வெளிநாட்டிடங்களில் இருக்கின்றார்களா? என்று ஆச்சரியப்பட்டனர். மக்கள் வந்திருந்த அறிஞர்களை விருந்தாளிகளாக வைத்திருக்கப்போட்டி போட்டனர் மக்கள். வெளிநாட்டவர் தங்கியிருக்கப்போதிய வசதியான விடுதிகள் இல்லையே என்று மாய்மாலம் போட்டவர்கள் வெட்கித்தலைகுனிந்தனர். மக்களின் விருந்தோம்பல் அவ்வளவு சிறப்பாக இருந்தது. விருந்தினர்கள் கிடைக்கவில்லையே என்று ஏமாற்றமடையுமளவுக்கு மக்கள் போட்டி போட்டு தமிழனின் விருந்தோபலை வந்தோரை வரவேற்கும் பாங்கைக் காட்டி நின்றனர். யாழ்.மக்களின் உணவு வகைகள் யாவற்றையும் உண்டு மகிழ்ந்த அறிஞர்கள் விடுதிகளில் இருந்திருந்தால் இவற்றைச் சுவைக்க வாய்ப்பில்லாமல் போயிருக்குமே என்று கூறினர்.

பல தடைகளையும் தாண்டி 1974 சனவரி 4ஆம் திகதி தொடங்கிய மாநாடு இத்தனை சிறப்புக்களுடன் சிறப்பாக நடந்து வந்தது. சனவரி 9ஆம் திகதி தமிழ் மக்களின் பண்டைய பெருமைகளையும், தமிழ் பண்பாட்டையும் விளக்கிய ஊர்திகள் ஊர்வலம் நடந்தது. அவ்வூர்தி ஊர்வலத்திலேயிருந்த சில சொற்றொடர்களை நீக்கக் கோரினர் காவல்துறையினர். ஆனால், அதை இளைஞர்கள் ஏற்கமறுத்தனர். இதனால் ஊர்வலம் சில மணித்தியாலங்கள் தாமதமாகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வாறு ஆராய்ச்சி மாநாடு மிகச்சிறப்பாக மக்கள் விழாவாக நடந்தது. இறுதிநாள் வெளிநாட்டவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நாள். வெளிநாட்டறிஞர்கள் தமிழின் பெருமையை, தமிழரின் சுவையை, தமிழரின் இனிமையை தமிழ் மக்களுக்கு ஊட்டிக்கொண்டிருந்தனர். வீரசிங்க மண்டபத்திற்கு முன்புறமாக மேடையிலேயே அவ்வறிஞர்கள் இருந்து தமது உரைகளை ஆற்றிக்கொண்டிருந்தனர். அந்த அட்டூழியம் அப்பொழுதுதான் நடந்தது. திருச்சி ஜமால் முகமது கல்லூரி பேராசிரியர் நைனார் முகமது அழகு தமிழில் தமிழ் மக்களை மெய்மறக்க வைத்து உரையாற்றிக்கொண்டிருக் கின்றார். அப்பொழுது அங்கு நுழைந்த சிறிலங்காக் காவல்துறையினர் . அடாவடித்தனத்தில் இறங்கினர். நடந்த கொடுமைகள் எழுத்திலடங்காதவைகள். மறுநாள் காலை அந்த இடம் யுத்தம் ஒன்று நடந்து முடிந்த இடம்போல் காட்சியளித்தது என்றால் அங்கே நடந்தவை என்ன என்பதை உணர்ந்து கொள்ள முடியும் ஒன்பது தமிழ் உயிர்கள் பறிக்கப்பட்டன.

அந்தப்பதிலைத் தரவேண்டியது தமிழினத்தின் கடமையாகும். அன்று தாயார் காட்டிய வழியில் இன்று மகள் சந்திரிகா தனது காலடியைத் தொடர்கின்றார். சமாதானம் என்ற பேச்சுப்போர்வைக்குள் இருந்துகொண்டு யுத்தத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

தமிழினம் தனது தாயக மண்ணில் தனது மொழியை, தனது பண்பாட்டை, தனது கலையைப் பாதுகாக்க, வளர்க்க வேறு எவரையும் கேட்காமல் தானே விழா எடுக்கும் உரிமை பெறவேண்டும். அப்போது தான் தமிழினம் தலைநிமிர்ந்து நிலையாக வாழமுடியும். அதற்கு இந்த சனவரி 10 நிறைவு நாள் வழிகோலட்டும்.



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 05

### பகுதி -29

அந்த விட்டை அவன் வெறித்துப் பார்த்தான். பூட்டை ஒரு முறை தொட்டான். பின் நிமிர்ந்து என்னைப் பார்த்தான்.

"இந்த வீடு உங்களுக்குத்தான் " என்றபடி தன் விரல்களை ஒன்றாக முறுக்கிக் கொண்டான். இப்ப "இந்த வீடு உங்களுடையது" என்று சொல்லி விட்டு ஆழமாக ஒரு மூச்சை இழுத்து விட்டான். பின்னர் பிரகாசமான மஞ்சள் நிறத்தில் தெரிந்த ஜன்னலையும் அதில சிவப்பு மலர்களுடன் இருந்த சாடியையும் சுட்டிக் காட்டியபடி மிகுந்த முயற்சியோடு, "இந்த விட்டிலும் ஒரு விளையாட்டு அறை இருக்கிறது." என்றான்.

"எனக்கு விளங்குது....அது விளையாட்டு அறையின் ஜன்னல் அல்லவா?"

"ஓமோம்" என்றபடி தலையை ஆட்டினான் டிப்ஸ்.

கழுவும் தொட்டியை நோக்கி சென்ற அவன் வர்ணங்கள் கரைக்க பயன்படுத்திய நீரை அதற்குள் ஊற்றினான். தண்ணீர் குழாயை முழு அளவில் திறந்து விட்டான். சிற்றாலயத்தின் மணிகள் மீண்டும் ஒலிக்கத் தொடங்கின.

"இதைக் கேளுங்கோ டிப்ஸ். போற நேரம் வந்திட்டுது. மணி அடிக்கிறது. உங்களுக்கு கெக்குதோ?" நான் சொன்னதை அவன் கவனித்ததாக தெரியவில்லை. "மண்ணிறம் தண்ணியை மண்நிறமாக்குது. ஒறேஞ் நிறம் தண்ணியை ஒறேஞ் நிறமாக்குது" என்றான்.

"ஓம் அதுகள் அப்பிடித்தான் செய்யும்" என்றேன் நான். போகவேண்டிய நேரம்பற்றி நான் கூறியதை அவன் கவனித்து விட்டான் என்று எனக்கு தெரிந்திருந்தது. அவன் அதைக் கேட்கவில்லை என்பது போல் நடக்க நான் விரும்பவில்லை.

''இது சூ-டா-ன தண்ணீர் சுடுகிறது." என்றான் இது ப-ச்-சை தண்ணீர்- குளிர்கிறது.

சூடு....குளிர்.... சூடு... குளிர்.... திற... பூட்டு.... திற.... பூட்டு...."

"இப்ப சுடுதண்ணியோடயும் பச்சைத் தண்ணியோடயும் விளையாட விரும்புறீங்கள் அல்லவா?" என்று கேட்டேன்.

"ஓமோம்" என்றான் டிப்ஸ் "ஆனா... நேரத்தைபற்றி உங்களுக்கு என்ன சொன்னனான் டிப்ஸ்?" நான் கேட்டேன். "மிஸ் A சொன்னது ஒண்டு வீடு கீறு. அது பிறகு அதை விட்டு போ நீ" அவனது குரல் கிசுகிசுப்பாக வெளிவந்தது. அவனது பேச்சு எவ்வளவு குழப்பமானதாக ஆகிவிட்டது. என்று நான் கவனித்தேன். அறிவு சார்ந்த பெரும் சாதனைகளைச் செய்யக் கூடிய ஒரு பிள்ளை இதோ இருக்கிறது. ஆனால் அவனது இயலுமைகள் மீது அவனது உணர்வு ரீதியான குழப்பகங்கள் மேலாண்மை கொண்டு விட்டன என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

"ஓம் டிப்ஸ்... அப்பிடித்தான் நான் சொன்னான்" என்றுமிக மென்மையாக நான் பதில் சொந்னேன். இப்ப நீங்கள் படம் கீறி முடிச்சிட்டீங்கள். இப்பபோற நேரம் வந்திட்டுது."


"படத்தில் கொஞ்சம் புற்களும் பூக்களும் சேர்க்க வேண்டும்" திடீரென்று அவன் சொன்னான்.

"இல்லை. அதற்கு நேரம் இல்லை. இன்றைக்கு எங்களுக்குரிய நேரம் முடிந்து விட்டது" என்றேன் நான்.

டிப்ஸ் பொம்மை வீட்டை நோக்கி நடந்து போனான் "வீட்டை நான் சரியாக்க வேணும் அதை பூட்டி முடிக்கவேணும்." என்றான்.

"வீட்ட போகாம இருக்கிறதுக் கெண்டே செய்யிறதுக்கு பல வேலைகளை உங்களால கண்டுபிடிக்க ஏலுமாய் இருக்கிறது. என்ன? ஆனா இப்ப எங்கட நேரம் முடிஞ்சுது. டிப்ஸ் இப்ப நீங்க வீட்ட போகவேணும்." இல்லை... கொஞ்சம் பொறுங்கோ...கொஞ்சம் பொறுங்கோ" உரத்த குரலில் டிப்ஸ் கத்தினான்.

"உங்களுக்கு போக விருப்பம் இல்லையெண்டு எனக்குத் தெரியும் டிப்ஸ். ஆனா இண்டைக்கு உங்கட நேரம் முடிஞ்சு போயிற்றுது."



''இப்ப நான் போகமாட்டன்'' விம்மலாக வெளி வந்தது. அவன் குரல் "இப்ப நான் போக மாட்டன்..... எப்பவும் போகமாட்டன்"

"நீங்கள் போகவேணுமெண்டு நான் சொல்லுறது உங்களுக்கு துக்கமாயிருக்குது. என்ன டிப்ஸ்? அடுத்த கிழமை நீங்கள் திரும்பவும் வரலாம்தானே அடுத்த வியாழன் நீங்க வரலாம்."

நான் அவனுடைதொப்பி கோட். பூட்சுகள் எல்லாவற்றையும் கையில் எடுத்தேன். மேசைக்கு அருகே இருந்த சிறு கதிரையிலே டிப்ஸ் அமர்ந்தான். நான் அவனது தொப்பியை போட்டுவிடும் பொழுது கண்கள் கலங்க என்னைப் பார்த்தான்.

திடீரென்று அவனில் ஒரு உற்சாகம் தெரிந்தது. " வெள்ளியா? வெள்ளி வரலாமா?" என்று கேட்டான்.

நீங்கள் வியாழக்கிழமை இங்கே வருவீங்க, ஏனெண்டா வியாழன்தான் நீங்கள் விளையாட்டு அறைக்கு வாறநாள்" என்றேன்.

(தொடரும்....)




---

(09 பக்கத்தொடர்ச்சி...)




வைக்கின்றன. நிலத்தின் கீழ் மணலுள் புதையுண்டு போன உறவுகளின் சடலங்கள் இதுவரை மீட்கப்படாதுள்ளன. இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும் அதிகம்.



இவ்வாறு உறவுகளை இழந்தவர்கள் தங்கள் உடமைகளை இழந்து ஏதிலிகளாக இப்போது பாடசாலைகளிலும், கோவில்களிலும், ஏனைய பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் தங்களுக்காக உயிரைத்தவிர வேறு எவற்றையும் மிச்சப்படுத்தமுடியாது நிர்க்கதியாக நிற்கின்றனர். இம்மக்களுக்குத் தமிழர்புனர்வாழ்வுக்கழகமும்; ஏனைய உள்ளூர், சர்வதேச நிறுவனங்களும் உதவி வருகின்றனர். ஆனாலும் பாதிப்புறாத அயலவர்களும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் மனிதநேயப்பணியாளர்களாலும், நலன்விரும்பிகளாலும் உலர்உணவுப் பொருட்களையும், உடைகளையும், வழங்கி உதவியுள்ளனர், உதவிவருகின்றனர். பல ஆயிரக்கணக்கானவர்கள் இவ்இயற்கை அனர்த்தத்தால் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.


இம்மக்களுக்கு மனித நேயப்பணியாளர்களின் உதவிக்கரங்கள் ஓரளவு ஆறுதலை அளித்தாலும் இம்மக்களின் இழப்புக்கள் ஈடுசெய்யமுடியாதவை. ஏற்கனவே கொடிய போரினால் சிக்குண்டு சிதையுண்டுபோன உறவுகள் தங்களை மீளவும் தயார்படுத்தி வளர்ச்சிப்படியில் கால்வைத்த வேளை இவ்வனர்த்தம் இம்மக்கள் வாழ்வில் யுத்தத்தைவிட ஒரு பேரிழப்பை ஏற்படுத்திச் சென்றுள்ளது. இவர்கள் இப்போது தாங்கள் உடுக்கும் உடையிலிருந்து அனைத்திற்கும் புதிதாக உழைக்க வேண்டியவர்களாக அதாவது இனி தொடக்கப்புள்ளியிலிருந்து தங்கள் வாழ்க்கையை ஆரம்பிக்கவேண்டியவர்களாய் உள்ளனர்.

சிறி-வண்ணாங்குளம்-
முல்லைத்தீவு.

"என்ர மனிசியையும், மூன்று பிள்ளைகளையும் அலை அடிச்சுக் கொண்டு போட்டுது. என்னால காப்பாற்ற ஏலாமப் போட்டுது...."



இது ஒருபுறமிருக்க இப்பிரதேசத்தின் சில முக்கிய திணைக்களங்களும் நீரில் அள்ளுண்டு போனதால் இப்பிரதேசத்தின் அனைத்து ஆவணங்களும் கடல் நீர் கொண்டு சென்றுள்ளது. குறிப்பாக நாம் முல்லைத்தீவு நகரைப்பார்வையிட்ட போது முல்லைத்தீவு பாடசாலைக்குரிய ஆவணங்கள் சில வீதிகளில் கிடந்ததையும், கடற்கரைகளில் கிடந்ததையும் அவதானிக்கக் கூடியதாய் இருந்தது.



இவ்வாறு காயமடைந்தும், தம் உறவுகளை இழந்தும், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் துயரைப்பகிர்ந்து கொள்ளச்சென்றோம். அங்கே அவர்களின் அங்கலாய்ப்பு உள்ளத்து வேதனைகள் சில மேல தந்துள்ளோம்.

இவ்வாறுதான் இவ்வனர்த்தத்தில் சிக்குண்ட அனைவரின் நிலையுமுள்ளது. இவ்வனர்தத்தில் சிக்குண்டு பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியானதுடன், எமது மாபெரும் வளங்களில் ஒன்றான கடல்வளத்திற்கும் மீனவ சமுதாயத்தினருக்கும், கரையோரப் பிரதேச மக்களுக்கும் மீளமுடியாத பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், இச் சமுதாயத்தின் பெருமளவான பெண்களையும், சிறுவர்களையும் காவு கொண்டுள்ளது. இவ் இயற்கை அனர்த்தம் தவிர்க்கமுடியாது போய் உறவுகளை இழந்த உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டுதலே இன்று எம்முள் உள்ள கடமையாகும்.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

*பாவலரே!*
*ஜே.வி.பியை நரகத்துக்கு அனுப்புமாறு ஹரிகுணதில கூறியுள்ளாரே? அனுப்புவார்களா?*

*இ.சிந்துஜா*
*கிளிநொச்சி.*

ஜே.வி.பியினர் இப்போது சொர்க்கத்திலா இருக்கிறார்கள்? சிங்களப் பேரினவாத நரகத்துள் தானே இருக்கிறார்கள்... அதனை விடவும் வேறு நரகமுண்டா?

*பாவலரே!*
*அண்மையில் சிறிலங்கா-இந்தியா கூட்டுப்பயிற்சி ஒன்றை நடத்தியுள்ளனரே கவனித்தீரா பாவலா?*

*மோ.அனுஜன்,*
*கிளிநொச்சி.*

அது கூட்டுப்பயிற்சி மட்டுமல்ல, சூட்டுப்பயிற்சியும் கூட... எப்படியோ இந்தியா இலங்கையை யுத்த படுகுழிக்குள் தள்ளுவதென்றே தீர்மானித்து விட்டது பாருங்கோ...!

இப்போது திருதிருவென விழித்தபடி இந்த மோதலின் குருநாதர்களின் நோக்கங்களை சந்தேகிக்கத் தொடங்கியிருகிறார்கள்...வெடிகுண்டு விடயம் வேடிக்கையாக எடுக்கக் கூடியதல்ல.

*பாவலா!*
*சிறையில் எஸ்.பி திடுக்கிடும் தகவல்களை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறதே எப்படியான தகவல்களாக இருக்கும் என்று நீர் எதிர்பார்க்கின்றீர்?*

*மதி,*
*மானிப்பாய்*

ஒரு அரசியல்வாதி குறித்த இன்னொரு அரசியல்வாதி கூறப்போகும் தகவல்கள் திடுக்கிட வைக்காது...அருவருக்கவே வைக்கும்... சாக்கடை பற்றி...அதில் வாழும் கிருமி கூறப்போகிறது அவ்வளவுதான்...!

வெற்றிப்பாதையில் நடைபோடும் ஜப்பானியர்கள் நமக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே உதாரணமானவர்கள்.

*பாவலா!*
*நாடாளுமன்ற அமர்வுகளின் போது மேசையில் வைக்கப்படும் கண்ணாடிக்குவளைகளை அகற்ற வேண்டும் என்று சபாநாயகர் கூறியுள்ளாரே?*

*சுரேந்திரன்,*
*உருத்திரபுரம்*

சபாநாயகர் நாடாளுமன்றத்தைப் பாதுகாக்கும் அமைச்சராகவும் மாறியுள்ளார் போலும்... கண்ணாடிக் குவளைகளின் பெறுமதியை உணர்ந்த சபாநாயகராகவும் இருக்கலாம்.

*பாவலா!*
*நழுவல் போக்குள்ளவர்களைப் பற்றி கூறுமேன்?*


*கா.ஹரிணி,*
*இணுவில்.*

தற்காப்பு உத்திகள் தெரிந்தவர்கள்.

*பாவலரே!*
*சிறிலங்காவிலும் இலத்திரனியல் கருவியூடாக வாக்களிப்பு முறை நடை முறைப்படுத்தப்படவுள்ளதாம் இனிமேலாவது மோசடி இல்லாத தேர்தல் நடைபெறுமா?*

*பவிதா,*
*வட்டக்கச்சி.*

மோசடி இல்லாத பெயர்கள் சனநாயகத்தை எப்படிப் பாதுகாப்பதாகும்.



## பாவலன் பதில்கள்

*பாவலரே!*
*இப்பொழுது தென்றலில் இதய வீணை ஒலிக்கிறது கேட்டீரா பாவலா?*

*தனுஷிகா,*
*சாவகச்சேரி.*

சூழலை மாசுபடுத்தும் அபஸ்வரங்களை ரசிக்கும் மன நோயாளியாக பாவலனை நினைக்கலாமா?

*பாவலரே!*
*குருநகர் கோஷ்ரி மோதல்களில் வெடிகுண்டு பயன படுத்தப்பட்டதாம் கவனித்தீரா?*

*இ.துஷியந்தி,*
*கிளிநொச்சி.*

குருநகர்-திருநகர் மக்கள்

*பாவலா!*
*எமது தாயகக் கடலோர சமூகத்திற்கு மீட்சி உண்டா?*

*கௌரி*
*கிளிநொச்சி.*

ஏன் இல்லை. 'நாம் வரலாறு காணாத பேரழிவுகளை சந்தித்துள்ளது உண்மையே. ஆனால், எம்மைப் போன்ற பல சுனாமிகளை, பல நிலநடுக்கத்தை, பல சூறாவளிகளை சந்தித்து பல உறவுகளை, சொத்துக்களை இழந்து அதனைக் கண்டு துவண்டுவிடாமல் இன்றும்

*பாவலரே!*
*இயற்கை எம்உறவுகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளதே?*

*சிவகுமார்,*
*கிளிநொச்சி.*

இயற்கையின் முன் மனிதனின் சிறுமையே என்பதை எம் அனைவர்க்கும் உணர்த்தியுள்ளது. இன,மத, மொழி கடந்து தன் சீற்றத்தைப் பகிர்ந்தளித்துள்ளது. ஆனால், தென்னிலங்கை அரசியல் சமூகம் நிவாரணங்களைப் பகிர்ந்தளிப்பதில் பாகுபாடும், புறக்கணிப்பும் காட்டி வருகின்றது.

● ● ●




ஒருமாதிரியா பிரச்சினை தீரும் போல தான் கிடக்கு.

என்னண்டு சொல்லுறாய்.

ஓமந்தை றோட்டாலெல்லாம் ஆமி ஓடி விளையாடுறான். பிறகென்ன.

சண்டை பிடிக்கிறானோ இல்லையோ-பொடியளட்ட மாட்டாமல் ஓடித்தப்பவேணுமே

மெய்தான் உப்பிடி ஓடப்பழகின தாலதான். அவன் ஓயாத அலை அடிக்கவும் ஓடித்தப்பினவன்-இனியும் சண்டை வாறதெண்ட நினைப்பில ஆமிக்கு சேர்ந்தவைக்கு இப்பவும் சண்டை வாறதெண்ட நோக்கம்தான்.

பழைய கழட்டின அரணுகளுக்கெல்லாம் திருப்பியும் மண்மூட்டை அடுக்குகினம். புதுப்புது குளக்கட்டெல்லாம் உயர்த்துகினம்-சாணுக்கொரு ஆமி முழத்துக்கொரு பொலிஸ் எண்டு கொட்டித்தான் விட்டிருக்கிறாங்கள்.

ம்...ம்... இவ்வளவும் செய்து போட்டு காணாதெண்டு புதுப்புது வாகனங்கள் கட்டடங்கள், தளபாடங்கள் அடேயப்பா! என்னவோ சொல்லிவினமே- வழியில் தேங்காய் எடுத்து தெருவில் பிள்ளையாருக்கு உடைக்கிற மாதிரி-காடுவெட்டி காணி திருத்தினவை அகதிமுகாமில காது தூரம் கடந்து வந்த சிங்களப் படை இஞ்ச ராச்சியம் நடத்துது.

எனக்கென்ன மன வருத்தமெண்டால்... இவளவும் செய்துபோட்டு விட்டிட்டுப் போகப்போகினமே எண்டது நினைக்கத்தான் வேதனையாக் கிடக்கு...

● ● ●

### படத்திற்கு மெருகூட்டுங்கள்-101




நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள்-101

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : .................................................... ஈழநாதம்
முகவரி : .................................................... யாழ்சாலை,
.................................................... கிளிநொச்சி.

### படத்திற்கு மெருகூட்டுங்கள்- 100



**சி.கிரிஷ்ஷாந்தி,**
**முரசுமோட்டை,**
**பரந்தன்.**

### பரிசுக்குரிய வரிகள்

*மீளாத்துயர் அகன்று மிதவாதக் கொள்கை வர*
*மீன்களும் துள்ளித்துள்ளி மிதந்து சென்றுவிட*
*வருவாயை வேண்டி தூண்டிலிட*
*அகமது ஏங்குது வந்து அகப்படுமா?*

### பாராட்டுக்குரிய வரிகள்

*குளத்தில் மீனுக்காய் தூண்டில் போட்டு*
*உழைத்துவாழும் உண்மை உழைப்பாளரே*
*போர்க் கால இருள் சூழ்ந்த அந்நாளில்*
*ஊர்வாழ் மக்களின் உணவுக்காய் உழைத்தவர் நீங்களே.*

க.இரத்தினசிங்கம்,
226,ஜெயந்திநகர்.

*ஆறுதானே பெருக்கெடுக்காது என எண்ணி மீன்பிடித்து*
*ஆறுதலாய் இருக்க வேண்டாம் என் இனிய உறவுகளே*
*சீற்றம் கொண்டு உமை சீரழிக்க முன் விரைந்திடுவீர்*
*சீரான பாதுகாப்பான இடம் தேடி.*

சு.சிவாஜினி
8ஆம் வட்டாரம், மந்துவில்.

*ஆசியாவின் கடல் அலை ஆண்ட தமிழன்-இன்று*
*அந்நியன் தடையால் ஆற்றில் மீன்பிடிக்கின்றான்.*
*அயல் நாட்டவனோ அவன் "ஈழக்கடல் வளத்தை"*
*அள்ளிப்போகின்றான். பொறுத்தது போதும் பொங்கிடு.*

த.கோகுலராஜ்
புளியங்குளம்

*ஆழ்கடலில் அந்நியப்படை*
*கரையினிலும் ஆழ்கடலின் சீற்றம் காரணம்*
*இன்று சாவு கொண்டது உறவுகளின் உயிர்கள்*
*எஞ்சியுள்ள உறவு உயிர் பிழைக்க ஆற்றினில்.*

தே.இ.யாழ்செல்வன்

*எம்கடலில் அடிக்குது சுனாமி*
*அதை விட இருக்கிறான் நேவி*
*எப்போதோ ஆகிவிட்டோம்-அகதி*
*வந்திடுமா மறுபடியும்-வசதி.*

செல்வன்,
முல்லைத்தீவு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# பேரழிவின் கோரமுகம்

நூலகம்
யாழ்ப்பாணம்














நூலகம்
யாழ்ப்பாணம்






Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – Vi

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 16 | 31 –12–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –317




# தேசிய ரீதியில் மனிதாபிமானப் பணிக்கான அமைப்பொன்றை நிறுவ முனைகின்றோம்!

## உடனடிப் மனிதாபிமான பிரச்சினைக்கு இது தீர்வென்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

**உடனடி மனிதாபிமானப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நாங்கள் புதிய வழிமுறைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றோம். அதற்கான ஒரு கட்ட ஒழுங்கமைப்பை ஏற்படுத்திவிட்டோம். அது செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அடுத்த கட்டமாக தேசிய அளவில் இதை முன்னெடுப்பது சம்பந்தமாக ஒரு கட்டமைப்பை நிறுவ நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கின் றோம்.**

இவ்வாறு இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தாயக மக்களுக்கு உதவுவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் இடம்பெற்ற சர்வ தச அரசசார்பற்ற உதவும் அமைப புக்களுடனான சந்திப்பின் பின்னர் நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே தெரிவித்தார். அச்செவ்வியின் விபரம் வருமாறு.

**கேள்வி : இன்று முக்கியமாக என்னென்ன விடயங்கள் ஆராயப்பட்டன?**

பதில்:தென்னாசியப் பிராந்தி

(Vஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து செயற்படுத்த மட்டக்களப்பிலும் செயலணிக் குழு அமைப்பு

சுனாமி கடற்பூகம்பத்தின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து உதவுவதற்காக செயலணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் காலை 10:30 மணியளவில் மட்டக்களப்பு அரச செயலகத்தில், அரச அதிபர். செ.சண்முகம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இக்குழு அமைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், விடுதலைப் புலிகளின் திட்டமிடல் பணியகத்தின் பொறுப்பாளர்

(VI ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் மக்களால் விரட்டப்பட்ட பிரதமரும், ஜே.வி.பி யினரும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சிக்கு விஜயம் செய்த பிரதமர் மகிந்தராஜபக்ஷ, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மற்றும் ஜே.வி.பி. யினர் மீது தமது வெறுப்பை வெளிப்படுத்திய மக்கள், அவர்களை நலன்புரி நிலையங்களுக்குள் பிரவேசிக்கவிடாது விரட்டினர். கடற்கொந்தளிப்பால் பாதிககப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு எந்தவொரு உதவியையும் இன்றுவரை வழங்காது அசமந்தமாகச் செயற்படும்

(VI ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர், ஐ.நா.பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை இலங்கைக்கான நோர்வேத்தூதுவர்,ஐ.நா.அமைப்பு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் (VI ஆம் பக்கம் பார்க்க)


நோர்வேத் தூதுவருடனான சந்திப்பு


ஐ.நா பிரதிநிதிகளுடனான சந்திப்பு



## தேசியத்தலைவரின் பணிப்பில் துரித மீட்புப்பணி சகலதுறை ஆளணி, வளங்களுடன் தீவிர முன்னெடுப்பு

### —கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை—

(முல்லைத்தீவு)

தேசியத்தலைவரின் பணிப்பிற்கு அமைவாக மீட்புப்பணியினை மேலும் துரிதப்படுத்தும் நோக்கில் களமுனைத் தளபதிகள் நிர்வாக செயற்பாடுகளில் உள்ள அனைத்துப் பொறுப்பாளர்கள் உட்பட சகல ஆளணிகளையும் மற்றும் வளங்களையும் பயன்படுத்தி வருகின்றோம்." என கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இவர் முல்லைத்தீவில் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பகுதியில் வைத்து நேற்று வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு

**மீட்பு நடவடிக்கையின் தற்போதைய நிலை என்ன?**

நாங்கள் தற்பொழுது மீட்புப் பணிகளை துரிதப்படுத்தியுள்ளோம். கண்டெடுக்கப்படும் உடல்களை எரியூட்டி வரும் அதேவேளை சுகாதார நலன் கருதித் தொற்று நோய்கள் ஏற்படாத வகையில் அதற்குரிய மருந்துகளை தெளிகருவி மூலம் அனைத்து இடங்களுக்கும் தெளிக்கும் பணியும் துரித கதியில் நடைபெற்று வருகிறது.

மீட்புப் பணியினை மேலும் துரிதப்படுத்தும் முகமாக எமது உந்துருளி படையணியினரையும் பணியல் ஈடுபடுத்தி உடல்கள் காணப்படும் இடங்களை அடையாளம் காணக்கூடியதாக செயற்படுத்தி வருகின்றோம். இவர்களின் செயற்பாட்டால் இன்று சில உடல்களை மீட்கக் கூடியதாக இருந்தது. அத்தோடு இன்றைய மீட்புப் பணிக்கு ஏற்கனவே நின்ற போராளிகளுடன் சாள்ஸ்அன்ரனி படைப் பிரிவினரையும் மேலதிகமாக ஈடுபடுத்தியுள்ளோம். அத்தோடு கடற்புலிகளின் மகளிர்படைப்பிரிவு, புலனாய்வுத்துறை, தலைமைச்செயலகம், நிதித்துறை, காவல்துறை, மட்டு-அம்பாறைப் படையணி, கணினி தொழில்நுட்பப்பிரிவு என விடுதலைப் புலிகளின் படைப்பிரிவுகள், துறைசார் போராளிகள் எனப் பலரும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களோடு மக்களும் இணைந்து செயற்படுகின்றனர். இன்றைய (வியாழக்கிழமை) மீட்பின் போது சுமார் 25 இற்கு மேற்பட்ட உடல்கள் கண்டெடுக்கப்படுமானால் நாளையும் எமது மீட்புப்பணி தொடர்ந்து நடைபெறும். மீட்புப்பணிக்கான கனரக வாகனங்களை அரசதுறை சார்ந்தவர்கள் தந்துதவுவதாகப் பலமுறை கூறியும் இன்றும் அவை வந்து சேரவில்லை. ஆனால் எமது நிதித்துறையினர் ஏழு கனரக வாகனங்களைத் தந்துதவியுள்ளனர். இதன் உதவியுடனேயே மீட்புப் பணியினை ஓரளவு துரிதகதியில் செய்து வருகின்றோம். இவ் மீட்புப் பணிக்கு பாரிய டோசர் போன்ற கனரக இயந்திரங்களே தேவை. ஆனால் தற்போது இப்பணிக்குப் பொருத்தமற்ற வாகனங்களையே கொண்டு பணியில் ஈடுபட்டு வருகின்றோம்.

(VI ஆம் பக்கம் பார்க்க)

# மனிதாபிமானப் பணிகளை மேலும் விஸ்தரிக்க செயலணிக் குழு கூட்டத்தில் தீர்மானம்

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை மேலும் விஸ்த்தரிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற செயலணிக் குழுவின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஊள்ளூர்,வெளியூர் தொண்டு நிறுவனங்கள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், சிவனேசன்(பா.உ) சுரேஸ் பிறேமச்சந்திரன், வடமராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சங்கங்களின் பொறுப்பாளர் பாலையா போன்றோர் ஈடுபட்டதோடு வெளிநாட்டு நிறுவனங்களான யு.என்.எச்.சி.ஆர். போரூட், கெயர், ஊற்று நிறுவனம், கியூடெக், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனிதநேய அமைப்புகள், மதகுருக்கள், மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொறுப்பாளர்கள் போராளிகள் எனப் பலரும் கூடி மனிதாபிமான பணிகளை மேலும் விஸ்த்தரிப்பது தொடர்பாகவும், சுகாதாரப்பணிகளை முன்னெடுப்பது தொடர்பாகவும்' கலந்துரையாடப்பட்டு மேலும் பணிகளை முன் னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜ். வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் வெதுப்பக உரிமையாளர் சங்கம், நகரசபை, பிரதேசசபை செயலாளர்கள் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர், கடற்புலிகளின் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் அருணன் போன்றோர் பங்கு பற்றினர்.

# தொண்டர் ஸ்தாபனங்களுக்கு அவசர வேண்டுகோள்

இயற்கை அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்ட நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு வைத்திய சேவை உள்ளிட்ட பொது சேவைகளை வழங்க முன்வரும் தொண்டர் ஸ்தாபனங்கள் தமது வருகை குறித்து கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் கலந்துரையாடி குறிப்பிட்ட தினத்தில் தமது சேவைகளை வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்

இதன்மூலம் ஒரே நேரத்தில் பல தொண்டர் நிறுவனங்கள் சேவையாற்றுவதனால் ஏற்படும் சிரமங்களையும், அவர்களுக்கான ஒழுங்கமைப்பு மற்றும் தங்குமிடவசதி ஒழுங்குகளை மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களையும், தவிர்க்க இலகுவாக இருக்கும் என வைத்திய கலாநிதி த. சத்திய மூர்த்தி அவர்கள் தொண்டர் ஸ்தாபனங்களைக் கேட்டுள்ளார்.

# பாதிக்கப்பட்ட முல்லை மக்களுக்கு உதவியோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புற்று முள்ளியவளை பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்குரிய நிவாரணப் பொருட்களைப் பல நிறுவனங்களும் பொது அமைப்புகளும், மக்களும் வழங்கி வருகின்றனர்.

இதன் படி முள்ளியவளை பகுதியில் உள்ள செயலணிக்குழுவிடம் நேற்று முன்தினம் மாலை 6.00 மணிவரை நிவாரணப் பொருட்களை வழங்கியவர்கள் விபரம் கிடைக்கப்பெற்றுள்ளன.

உதவிப் பொருட்கள் வழங்கியவர்கள் விபரம் :- தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வவுனியா, நல்லாயன் இல்லம் - வவுனியா, மல்லாவி தனியார் பேருந்து சங்கம்,குருநகர் சென்ஜோன்ஸ் சனசமூக நிலையம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கோண்டாவில் சன சமூக நிலையம் மற்றும் யாழ்.மையறொற்றிக் கழகம்,தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கிளிநொச்சி, கல்மடு நகர் மற்றும் வட்டக்கச்சி பொதுமக்கள்,சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் புதுக்குடியிருப்பு,அரசாங்க வைத்தியசாலை மல்லாவி,தென்னிந்திய திருச்சபை வட்டுக்கோட்டை,வவுனியா வடக்கு ப.நோ.கூ.ச.மற்றும் அரசசார் பற்ற நிறுவனங்கள்,சர்வதேச கெயர் நிறுவனம், செஞ்சிலுவைச்சங்கம் வவுனியா,யுனிசெவ் நிறுவனம், மக்கள் வங்கி வவுனியா, போரூட், புனர்வாழ்வு அமைச்சு,போரூட் வவுனியா மற்றும் முல்லைத்தீவு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் புதுக்குடியிருப்பு,குப்பிளான் மக்கள், அகதிகளுக்கான புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு, மன்னார் மறைமாவட்ட ஆயர் ஊடாக மீனவர் சங்கங்கள், மக்கள், வடலியடைப்பு பண்டத்தரிப்பு மக்கள்,துனுக்காய் தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு,புன்னாலைக்கட்டுவான் ஈவினை சனசமூக நிலையம்,நிலா சனசமூக நிலையம் உடுவில் தெற்கு சத்தியபுரம் சுன்னாகம், யு.என்.எச்.சி.ஆர், தினக்குரல், மாத்தளை முத்துமாரி அம்மன் கோயில்,வவுனியா அரசாங்க அதிபர், உடுகொடவத்த உணவுச்சாலை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நானாட்டான் பிரதேசசபை, நுவரேலியா மாவட்ட பசுமலைக் கடைவீதி அக்கரைபத்தனை, கண்டி மாவட்டம் ஜெயக்குமாரும் நண்பர்களும், மொறட்டுவ பல்கலைக்கழகம், பிரதேச செயலகம் வவுனியா,பிரதேச மகளிர் அபிவிருத்திசமாசம் வவுனியா, சோஆ நிறுவனம்,சி.க.கூ சமாசம் முல்லை மாவட்டம், நெஸ்பிறே கொம்பனி அம்மன் களஞ்சியம் வவுனியா ஊடாக, பாஜ் நிறுவனம்,தமிழர் புனர்வாழ்வுக்கழகம், மருத்துவப்பிரிவு, சுகாதாரப் பிரிவு வவுனியா,தமிழ் இளையோர் அமைப்பு,கொழும்பு வைத்தியர், ரஸ்யன் பல்கலைக்கழகம்,வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி,பங்குத்தந்தை பாசையூர், உலக உணவு ஸ்தாபனம், எம். ஜெயப்பிரதாப் குடும்பத்தினர் வவுனியா. தமிழ் ஆசிரியர் சங்கம் புத்தளம் மாவட்டம், அம்டா நிறுவனம், அம்மன் ஜவல்ஸ் இன், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு,மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கம், அன்னை திரேசா சகோதரிகள் கோப்பாய்,சாவகச்சேரி கைத்தொழில் வணிகமன்றம், மீசாலை வர்த்தக சங்கமும் பொது மக்களும்,சமூக சேவைகள் திணைக்களம்,சேவாலங்கா வவுனியா, இடைக்காடு வாழ் மக்கள் யாழ்ப்பாணம், ரூபவாகினி,சக்தி சிரச எவ்.எம், ஹட்டன் வாழ் மக்கள். ஒக்ஸ்பாம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், ஜனசக்தி சனசமூக நிலையம், நல்லூர்.

இவர்களுடன் நேற்று மாலை வரை பலர் நிவாரணங்களைத் தொடர்ந்து வழங்கி வருகின்றனர். அவர்களின் விபரம் கிடைக்க பெற்றவுடன் அறியத்தரப்படும் என முள்ளியவளை செயலணிக்குழு தெரிவித்துள்ளது.(கு.ச)

# கலந்துரையாடல்

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றுபவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 03.01.2005 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தின் வளநிலையத்தில் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி.வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் வேண்டியுள்ளார்.


# முக்கிய அறிவித்தல்

**பூநகரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்கள் கவனத்திற்கு**

எமது பிரதேசசபை அலுவலகத்தில் தங்கள் உழவு இயந்திரம் ஒன்றிற்கு ரூபா 500 ஐச் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். பதிவுசெய்யும் பட்சத்திலே மணல்,கல் ஏற்றுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

க.தனபாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
பிரதேசசபை,
பூநகரி.

(சி.11052)



# துயர் பகிர்கின்றோம்

## சுப்பிரமணியம் சரஸ்வதி

எமது செயலகத்தில் பணியாற்றும் பரமேஸ்வரன் (ரகு அவர்களின் தாயாரான சுப்பிரமணியம் சரஸ்வதி அவர்கள் 26.12.2004 அன்று இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் உயிரிழந்துள்ளார். இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவர்களின் துயரிலும் நாமும் பங்குகொள்வதுடன் இந்நாளில் உயிரிழந்த அனைத்து மக்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

(5517)

தகவல்:-
பொறுப்பாளர்,
போராளிகள்,
பணியாளர்கள்.


# தேடுகிறார்

முருகேசு குமாரகுலசிங்கம் 184/1 அதிசயவிநாயகர் கோயிலடி விஸ்வமடு என்பவரை அளம்பில் பெருந்தோட்டப்பகுதி கணேசன் தோட்டம் ஐந்தாம் கட்டையில் பணிபுரியும் அவரின் மனைவி இந்திரா காணவில்லையெனத் தேடுகிறார். அவர் எங்கிருந்தாலும் ஈழநாதம் பணிமனை ஊடாகவோ அல்லது நேரில் வந்தோ சந்திக்குமாறு கேட்கிறார்.

# தேடுகிறார்

தங்கவேல் செல்வகுமார் சொந்த முகவரி மருதங்கேணி தாளையடி, அந்தோணிப்பிள்ளை மங்கலதாஸ், வலைஞர் மடம் முள்ளிவாய்க்கால் இவர்கள் இவரும் ஆசிரியர்கள் 26.12.2004 அன்று இடம் பெற்ற அனர்த்தத்தில் காணமல் போயுள்ளனர். இவர்களின் உறவினர் விஜியகரன் தேடுகிறார். இவர்கள் எங்கிருந்தாலும் 0712610008 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# மரக்கறி விலை அதிகரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு பொதுச் சந்தையில் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதால் அது மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்ப்டுத்தியுள்ளது.

அத்துடன் கிடைக்கின்ற மரக்கறிகளை நியாயமான விலையில் கொள்வனவு செய்து நியாயமான விலையில் விற்பனை செய்வதையே அனைத்துமக்களும் விரும்புகின்றனர். (கு.ச)


டய்டோ
பிறப்பிலே முன்னணியில்...
FANCY




➤ 100CC ➤ 4 Gear
➤ Kick & Self Start

(சி.10986)

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

எங்களிடம் தாராளமாக Honda, Yamaha, Suzuki, Bajaj, Daido, Yamato மற்றும் எல்லா சீன தயாரிப்புகளுக்கு பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவில் கிடைக்கும்






மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு

ஏக முகவர்

செரெண்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10.

தொலைபேசி 01-2341580-1, 2438779, பக்ஸ் 01-2454608 E-mail: zme@slt.lk

## மட்டக்களப்பில் "சுனாமி"யின் தாக்குதல்....





# புள்ளி விபரம் வரும்வரை காத்திராது மக்களுக்கு அவசர உதவிகளை வழங்குக

### -கிளி.அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர்

(அலுவலக செய்தியாளர்)

**மக்களின் அவலநிலையை போக்குவதற்கு சர்வதேச நிறுவனங்கள், புள்ளி விபரங்கள் வரும்வரை காத்திருக்காது உடனடியாகப் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக இருக்கும் மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கனேச பிள்ளை தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; சர்வதேச நிறுவனங்கள் பெரும் அழிவுக்குள்ளான எங்கள் மக்களுக்கு உடனடி உதவி செய்வதற்கும், புள்ளிவிபரங்கள் கேள்வி மேல் கேள்வி என்பவற்றைக் கேட்டுத்தான் தமது உதவியை வழங்குவது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து உதவி செய்வதாகக் கூறிக்கொண்டு பெரியளவில் தமது காரியாலங்களை வைத்திருக்கும் நிறுவனங்களின் உதவிகள் இந்த பேரழிவில் போதாமல் இருக்கிறது. என்பதை நாங்கள் மனவருத்தத்துடன் தெரிவிக்கிறோம். இதேவேளை இவர்கள் தமது உதவிகளை மேலும் தீவிரப்படுத்திக்கொள்ளவும் வேண்டும். சில நிறுவனங்கள் புள்ளி விபரங்களைப்பெற்றுக் கொண்டுதான் நாம் உதவிகளைச்செய்வோம் என்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நாங்கள் தரவுகளை வழங்குகிறோம். தரவுகளைப்பெற்றவுடன் இவர்கள் தமது உதவிகளை மக்களுக்கு வழங்கியிருக்க வேண்டும். ஒரு தடவை கேள்வியைக் கேட்பதும் மீண்டும் வந்து இன்னொரு கேள்விளைக் கேட்பதுமான இவர்களது நிலைப்பாட்டை மாற்ற வேண்டும். இந்த இடத்தில் நாங்கள் தமிழீழ விடுத்லைப் புலிகளுக்கும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருக்கும் துணிந்து நின்று சலிப்படையாது. மக்களின் தேவைகளைச் செயற்படுத்தி வருவதற்காக நன்றி தெரிவிக்கிறோம். கடல் அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு மணிநேரத்தில் சோஆ, ஒக்ஸ்பாம்,ஏ.எல்.பி. ஆகிய நிறுவனங்கள் சம்பவ இடத்திற்கு வந்து மீட்புப்பணியில் ஈடுபட்டன. அத்துடன் மனித நேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் என்றவகையில் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

எங்கள் மக்களால் எதிர்பார்க்கப்பட்டபெரிய நிறுவனங்கள் எந்த வகையிலும் கைகொடுத்துதவவில்லை. இது மனவருத்ததிற்குரிய ஒரு சம்பவம் எனவும் அவர்கவலைதெரிவித்தார்.லோ)

## முதலாம் தவணைக்காகப் பாடசாலைகள் சனவரி 10 இல் ஆரம்பிக்கும்

(கொழும்பு)

அனைத்துப் பாடசாலைகளும் எதிர்வரும் சனவரி மாதம் 10 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.பாடசாலைகள் எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பிக்கப்படயிருந்த போதிலும் இயற்கை அனர்த்தத்தின் காரணமாக பிற்போடப்பட்டமை தெரிந்ததே.

## முல்லைத்தீவு நகரிற்கு நேற்று முதல் மின் விநியோகம்

(அலுவலக செய்தியாளர்)

இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புற்ற முல்லை நகரில் மீண்டும் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகர்ப்பகுதிக்கு தேவையான மின்சாரத்தினை நேற்று மாலை 4.00 மணி தொடக்கம் மின்சார நிலைய்ம் வழங்கிவருகின்றது. வெள்ளம் புகுந்த இயந்திரங்களை துரிதகதியில் செயற்படுத்த வைத்து மிகவும் அவசர அவசரமாக மின் இணைப்பு வேலைகளை மேற்கொண்டு நேற்று மாலை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

மீண்டும் முல்லைத்தீவில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும். மக்கள் அச்சமின்றி குடியேறவேண்டும். அனைத்து திணைக்களங்களும் உடனடியாக செயற்பட வேண்டும் என்பதற்காக கடற்புலிகளின் அரசியற்துறையினர் துரிதமாக செயற்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றுத் தொடக்கம் முல்லைத்தீவு அரச செயலகம் செயற்படத் தொடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பாதிக்கப்பட்ட மக்களிற்கான தொலைநோக்கு திட்டங்களுடன் மலையக மக்கள் கைகோர்த்து நிற்பர்

### -பா.உறுப்பினர் சந்திரசேகரன்

(அலுவலக செய்தியாளர்)

கடற் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை முகாம்களில் வைத்துக் கொண்டு தொடர்ச்சியாக உணவுகொடுத்து இவர்களைப் பிச்சைக்காரர்களைப் போல அடுத்தவர்களுடையகையினை எதிர்பார்த்து நிற்கின்ற ஒரு மக்கள் கூட்டமாக ஆக்கிவிடக் கூடாது.

மாறாக இவர்கள் தங்களுடைய வாழ்விடங்களுக்குச் சென்று தங்களுடைய வாழ்க்கையினைத் தொடங்க வேண்டும். அதற்கான ஒருதொலைநோக்குப்பார்வையோடு ஒரு திட்டத்தை வகுக்கவேண்டும் அத்திட்டத்திலே மலையக மக்கள் முன்னணியும், மலையக மக்களும் நிச்சயமாக நின்று கைகோர்ப்பார்கள்.

இவ்வாறு நேற்றுப் பிற்பகல் மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மலையகத்திலிருந்து சேகரிக்கப்பெற்ற நிவாரணப் பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக்கழக துரித நிவாரண பணி இணைப்பாளரிடம் கையளித்து உரை நிகழ்த்துகையில் மலையக மக்கள் முன்னணித்தலைவரும் பா.உறுப்பிருமான சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இன்று மலையகத்தில் இருந்து கிட்டத்தட்ட நாற்பது வாகனங்களிலே வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் கொடுப்பதற்கு வந்திருக்கின்றோம். இதில் முக்கியமாக நான் குறிப்பிடவேண்டிய விபரம் இந்தப் பொருட்கள் வர்த்தகர்களிடம் மட்டும் இருந்து பெறப்பட்டது அல்ல தோட்டத்தொழிலாளர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர்களின்ஒருநாள் இரண்டு நாள் வேதனத்தைத் தந்திருக்கின்றார்கள். இங்கு நாங்கள் கொண்டு வந்திருக்கின்ற பொருட்கள் கட்சி சார்பாக அல்லது தொழிற்சங்கம் சார்பாக அல்ல மனிதாபிமான ரீதியாக தங்களுடைய இரத்த உறவுகளுக்கு உதவவேண்டுமென்ற எண்ணத்தோடு தோட்டத்தொழிலாளர்கள் கொடுத்த உதவியைத் தான் நாங்கள் பெற்று வந்திருக்கின்றோம்மக்களை அவர்களுடைய சொந்த இடங்களிலேயே மீளக்குடியமர்த்தவேண்டும் ஆனால் ளுடைய வாழ்கையைத் தொடங்க வேண்டும். அதற்கான ஒரு தொலை நோக்குப்பார்வையோடு ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் அந்தத் திட்டத்திலே மலையக மக்கள் முன்னணியும், மலையக மக்களும் நிச்சயமாக நின்று கைகோர்ப்பார்கள், அவர்கள் தங்களுடைய வேலை முடிந்து விட்டது என்று நினைக்கவில்லை. இப்போது உடனடி நிவாரணத்திற்காக சில உதவிகளைச் செய்திருக்கின்றோமே தவிர நிரந்தரமாக இந்த மக்கள்



அவர்களுக்குச் சொந்த வீடில்லை, வீட்டில் தளபாடமில்லை. சமைப்பதற்கான உபகரணங்கள் இல்லை, பாடசாலை செல்வதற்கான சீருடைஇல்லை. இன்னும் இதைப் போன்ற அத்தியாவசியதேவைகள் எதுவுமேஇல்லாத நிலையிலே அகதிகளாக இருக்கிறார்கள். இவர்கள் தொடர்ந்து அகதிகளாக இருக்காது. திரும்பப்போய் தங்க மீண்டும் தங்களை நிலை நிறுத்திக்கொள்வதற்கு தங்களுடைய பங்களிப்பைச் செய்வதற்கு நாமும், மலையக மக்கள் முன்னணியும் அதைப்போல மலையக மக்களும் தொடர்ந்தும் கைகொடுக்கின்ற எங்களுடைய பணியைத் தொடருவோம் என்றார். (சோ,சு)

## த.பு.க.நிவாரணப்பொருட்கள் சுவிசில் இருந்து விமானங்களில்!

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இரண்டு சரக்கு விமானங்கள் கொழும்புக்கு இன்று அல்லது நாளை சென்றடையலாமென்று தெரிகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ் கிளையினரால் சுவிஸ் நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப் பொருட்கள், உணவுப் பொருட்கள், உடுபுடவைகளுடன் இந்த இரண்டு விசேட விமானங்களும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடையுமென்று அறிய முடிகிறது.

இந்த இரண்டு விமானத்தில் கொண்டு செல்லப்படும் பொருட்கள் அனைத்தும் உடனடியாக வடக்குக் கிழக்கு மாகாணங்களிற்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாக அறியமுடிகிறது. இதற்கான ஏற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்புக் கிளை ஈடுபட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச நிவாரணம் எதுவும் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சிப் பகுதிகளில் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் அரசின் நிவாரண உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்டோர் எமது செய்தியாளர்களிடம் கவலை தெரிவித்துள்ளனர்.

கடற் பேரழிவால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப்பகுதிகளில் புலிகளின் உறுப்பினர்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் உட்பட தமிழ் மக்களின், நலன்பேணும் அமைப்புக்களும் மீட்புப் பணிகளில் ஈடுபடுவதுடன், இவர்களே பொது இடங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கான உதவிகளையும் வழங்கிவருகின்றனர்.

எனினும் அரசி ல் பாதிக்கப்பட்ட மக்களு குஎதுவித உதவிகளும் வழங்க படவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (33)

## கடற் கொந்தளிப்பால் ஏற்பட்ட அழிவு குறித்துஐ.நா விபரம் திரட்டல்

(லண்டன்)

இலங்கையில் கடல் சீற்றத்தால் ஏற்பட்ட பேரழிவுகளை ஐ.நா வின் குழு ஒன்று கணிக்கத் தொடங்கியுள்ளது.

கடற்சீற்றம் தொடர்பாக நேற்று முன்தினம் லண்டன் பி.பி.ஸி தமிலோசையின் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## Improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE) Project
## Intensive Course in English

**For the attention of teachers & Students**

The above programme which was scheduled to be commenced on 30/12/2004 and 03/01/2005 has been postponed due to unavoidable circumstances. New date will be informed later.

IRQUE project,
University of Jaffna,
Jaffna.

Deputy Director,
Administration.

(சி.11054)

## கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர(உயர்)தரப் பயிற்சிநெறி
## 2005 சனவரி-செப்ரெம்பர்
# விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுக் கல்லூரியினால் மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் வெளிவாரிப் பயிற்சியாளர்களிடம் இருந்து கீழ்வரும் தகைமைக்கமைய கோரப்படுகின்றன.

01) கல்வித்தகைமை க.பொ.த(உயர்)தரப் பரீட்சையில் ஏதாவது 3 (வர்த்தகம் /கணக்கியல் /கணிதம் ஏதாவது ஒன்று உட்பட) பாடங்களில் சித்தி பெற்றவர்களும், அதற்கு மேலான தகைமை உடையவர்களும் வெற்றிடங்களுக்கு ஏற்ப அனுமதிக்கப்படுவர்.


02) பயிற்சிக்காலம் :–9 மாதங்கள்,2005 சனவரி–செப்ரெம்பர்
03) பயிற்சிக் கட்டணம் :–மாதம் 150
02) நேர்முகத்தேர்வு :–10. 01. 2005 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10.00மணி

விண்ணப்பப் படிவங்களை கிளி.மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைக் கட்டடத்தில் இயங்கும் கிளி.மாவட்ட கூட்டுறவு சபைக்கு, 2005.01.08 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர்,மாவட்ட கூட்டுறவுச் சபை, கிளிநொச்சி. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.


செயலாளர்,
மாவட்ட கூட்டுறவுச்சபை,
கிளிநொச்சி.

(சி.11053)

# வீரவணக்கம்



தமிழீழத் தேசியத் துணைப்படைவீரர்
2 ஆம் லெப்டினன்ட் செல்வரூபன்
நி.மு.யாழ்.மாவட்டம்
த.மு. பிள்ளையார் கோவில் அருகில்,
கந்தபுரம்,கிளிநொச்சி.



தமிழீழத் தேசியத் துணைப்படைவீரர்
லெப்டினன்ட் சுந்தரமூர்த்தி
நி.மு.வவுனியா மாவட்டம்
த.மு. விசுவமடு குளத்தடி,
விசுவமடு

கடந்த 26.12.2004 ஆம் திகதி கடல் பெருக்கு அனர்த்தம் காரணமாக நாகர்கோவில் பகுதியில் கடமையில் நின்றவேளை விபத்தில் சாவடைந்துள்ளனர். இம்மாவீரர்களுக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5514) "தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணியினர்"

# வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

25.12.2004 ஆம் திகதி கரடிப் போக்கிலிருந்து கனகாம்பிகைக்குளம் செல்லும் போது தினக்குறிப்புப் புத்தகம், குறிப்புப் புத்தகங்கள், வரைபடங்கள், கணக்குப் புத்தகம், சிட்டைகள் ஆகியன அடங்கிய கறுப்புப்பையொன்று தவறிவிட்டது. அதை எடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன், தகவல்:- தி.ஆபத்சகாயன். (5516)

### தவறிவிட்டது

கரம்பைக்குறிச்சி கிழக்கு பரணி எனும் முகவரியுடைய வயிரவன் கந்தையா என்பவரது தேசிய அடையாள அட்டை, இராணுவ அடையாள அட்டை என்பன 20.12.2004 விசுவமடு,12ஆம் கட்டைக்கும்,தருமபுரத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தர்மபுரம் வைத்தியசாலை சிற்றுண்டிச் சாலை அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (5457)

### தவறிவிட்டது

எனக்குச் சொந்தமான கையடக்கத்தொலைபேசி (மோட்டோரல்லா இனம்) 26.12.2004 ஞாயிறு தர்மபுரத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புளியம்பொக்கணைச் சந்தியில் அமைந்துள்ள பெரியகுளம் கிராமசேவை அலுவலர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகவல்:- வே.கந்தசாமி,கண்டாவளை. (5504)

### தவறிவிட்டது

தளையசிங்கம் செந்தீபன் என்பவரின் அடையாள அட்டையும் (830052232V), பயண அனுமதி அட்டையும்,சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட பணப்பை பளைக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் M.O.H. அலுவலகத்தில் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (5515)

### பெற்றுக்கொள்ளவும்

சகல வகுப்புகளுக்குமான பாடப்புத்தகங்களும். கொப்பிவகைகளும் புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். உயர்ச்சி புத்தகசாலை, துணுக்காய்சாலை, மல்லாவி. (4145)

### வகுப்புக்கள் ஆரம்பம்

ஜேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி தரம் 05.தொடக்கம்O/L வரையான வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள்ஆரம்பம்- 01.01.2005 (சனிக்கிழமை 8.00A.M) (5448)

## நேர்முகப் பரீட்சைகள் பிற்போடப்பட்டமைக்கான அறிவித்தல்

காணி செயலணிக் குழுவிற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சகல நேர்முகப்பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன.

இந்நேர்முகப் பரீட்சைகள் யாவும் வேறு தினங்களில் நடாத்தப்படும் என்பதனையும், நேர்முகப்பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் சகலருக்கும் அறியத்தரப்படும் என்பதனால் எவரும் இது தொடர்பாக கவலையடையத் தேவையில்லை என்பதனையும் அறியத்தருகின்றோம்.

க. பரமலிங்கம்,
மேலதிகச் செயலாளர் (காணி),
காணி நிருவாகத் திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்.

(சி.11055)

# முக்கிய அறிவித்தல்

வீதியின் மத்தியிலிருந்து 50 அடிக்குள் கட்டடங்கள் கட்டவோ,திருத்தவோ,அனுமதி அளிக்க முடியாது என்பதையும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதிகள் யாவும் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதையும், தெரிவித்துக் கொள்வதுடன் வீதியோரங்களில் அனுமதியின்றி சீற்,ஓடுகள், கற்கள்பறிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். உணவகங்கள் யாவும் சுகாதார ஒழுங்கின்படி அமைக்கப்பட்டால்தான் உரிய அனுமதி வழங்கப்படும் என்பதுடன் ஊழியர்களுக்கான ஓய்வறை, கழிப்பறை என்பனவும் அமைக்கப்படல் வேண்டும். இச்செயற்பாடுகள் யாவும் 01.01.2005 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

கா.தனபாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
பிரதேசசபை,
பூநகரி.

(சி.11051)

## தேசிய ரீதியில்...

யத்திலே ஏற்பட்டிருக்கின்ற இயற்கை அழிவினால் எமது தாயகப் பிரதேசமும் பெரும் அழிவைச் சந்தித்திருக்கிறது. நேற்றுத் தேசியத் தலைவர் இது சம்பந்தமான அறிக்கையில் ஆழ்ந்த கவலையையும் கரிசனையையும் தெரிவித்து எல்லோருடைய உதவியையும் கேட்டிருந்தார். அதன் அடிப்படையில் நாம், ஏற்பட்டுள்ள பேரழிவில் இருந்து மீள்வதற்கு சர்வதேச சமூகமும் நிதி வழங்கும் நிறுவனங்களும் எந்தளவுக்கு உதவ வேண்டும் என்பது பற்றிய விடயங்களை, அவர்களது ஆதரவை, ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கோடு இந்தக் கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்தியிருந்தோம். ஏற்கனவே, எமது கட்டுப்பாட்டில் உள்ள தாயகப் பிரதேசத்திலும், ஏனைய இடங்களிலும் உடனடி மீட்பு நடவடிக்கைகளும், மனிதாபிமானப் பணிகளும், நடைபெறுகின்றன. எமது தளபதிகளும், போராளிகளும் இப்பகுதிகளில் நின்று மீட்புப் பணியைச் செய்து வருகின்றார்கள். மக்களை நலன்புரி நிலையங்களில் கொண்டு வந்து பாதுகாப்பது, உபசரிப்பது போன்றவற்றில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், தொண்டர் நிறுவனங்களும் எமது போராளிகளோடு இணைந்து செயற்படுகின்றன. சர்வதேச சமூகத்தினுடைய, உதவி நிறுவனங்களுடைய உதவியைப் பெறுவதனூடாகவே தொடர்ச்சியாக அதனைப் பேண முடியும். அந்த அடிப்படையில் உதவிகளைப் பெறும் முயற்சியில் இந்தச் சந்திப்பை நாம் ஒழுங்குபடுத்தியிருந்தோம். ஏற்கனவே இப்பணிகளுக்காக மாவட்ட மட்டங்களிலே செயலணிக் குழுக்களை உருவாக்கி இருக்கின்றோம். அவை திறம்படச் செயற்படுகின்றன. ஆகவே, இதற்கூடாக சர்வதேச உதவிகளை எதிர்பார்க்கின்றோம். எதிர் காலத்தில் இப்பேரழிவில் இருந்து மீட்டு மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளைச் செய்யவுள்ளோம். அது பற்றி எங்கள் நிலைப்பாட்டை உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களது பிரதிநிதிகளுக்கு விளங்கப்படுத்தியுள்ளோம்.

***கேள்வி: நோர்வே தூதுவருடன் பேசப்பட்ட விடயங்கள் என்ன?***

பதில்: நோர்வேத் தூதுவரும் அனுசரணையாளர்கள் என்ற முறையில் இப்பேரழிவை, நிலைப்பாட்டை, தேவைகளை அறிந்து செல்வதும் தமது அரசினதும், மக்களினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஒத்துழைப்புக்களைத் தருவதாக எமது தலைமைப்பீடத்துக்கு தெரிவிக்கும் நோக்கோடே அவரது பயணம் அமைந்தது.

***கேள்வி: இன்றைய சந்திப்பில் சர்வதேச அமைப்புக்கள் ஏதாவது உறுதி மொழி தந்துள்ளனவா?***

பதில்: நிச்சயமாக. மாவட்ட மட்டத்தில் எங்களால் உருவாக்கப்பட்ட கூட்டுச் செயலணிக்கு ஆதரவைத் தருவதாகவும், முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க கரிசனை கொண்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள்.

***கேள்வி: இன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்?***

பதில்: மூன்று கட்டமாக இந்த வேலைத்திட்டத்தைப் பிரித்திருக்கின்றோம். முதலாவது இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களைப் பாதுகாப்பான இடங்களில் உபசரிக்க வேண்டிய பாரிய பொறுப்புள்ளது. இதுவரை எமது போராளிகளும், மக்களும் தமிழர் புனர்வாழ்வுக் தழகத்துடன் இணைந்துதான் இதனை முன்னெடுத்தனர். தொடர்ந்து முன்னெடுக்க சர்வதேச உதவிகள் தேவை. ஆகவே, எங்களால் அமைக்கப்பட்ட செயலணிக் குழுக்களுக்கு உடனடி நிவாரணப் பொருட்களை - உணவு, உடை, மருந்துப் பொருட்களை - கோரியுள்ளோம். அவர்களும் நேற்றிலிருந்து சிறிதளவு தொடங்கியிருக்கிறார்கள். இனித் தீவிரப்படுத்துவார்கள் என்று நம்புகிறோம். ஏனைய பகுதிகளை விட தாயகப் பிரதேசத்தில் வேலைத் திட்டங்களை துரிதமாக ஒழுங்குபடுத்தியதற்கு அவர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். தமது ஆதரவை முழு அளவில் தருவதாகக் கூறியுள்ளார்கள். எதிர்காலத்தில் எமது மக்களை நிரந்தரமாகக் குடியமர்த்துவது, தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது சம்பந்தமாக அவர்கள் ஒரு கட்டமைப்பை எதிர்பார்க்கிறார்கள். இது சமபந்தமாக தலைமைப்பீடம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. வெகு விரைவில் ஒழுங்கமைப்பைச் செய்யவுள்ளோம். அத்தோடு எமது தாயகப் பிரதேசத்தில் எம்மால் ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு அரசாங்கமும் தனது பங்களிப்பைத் தருவதாகக் கூறியிருக்கின்றது. இது உற்சாகமளித்திருக்கிறது. உண்மையாகவே அறிவித்தது போலவே விசுவாசமாகச் செயற்படுவார்களாயின் மக்களின் துயர் துடைப்புப் பணியை முன்கொண்டு செல்ல முடியும்.

***கேள்வி: இக்கூட்டத்தில் யார் கலந்து கொண்டது?***

பதில்: ஐ.நா. அமைப்பின் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டிருக்கிறார்கள். உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோர் சார்பாகவும் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தார்கள்.

***கேள்வி – சர்வதேச உதவிகள் நேரடியாக உங்களுக்கு வருமா? அல்லது வேறேதும் ஏற்பாடு இருக்கிறதா?***

பதில் - இது ஒரு அவசர மனிதாபிமானப் பிரச்சினை எல்லோரையும் பற்றி நிற்கின்றது. இந்த நேரத்தில் நாங்கள் எல்லோருடைய பங்களிப்பையும் உள்வாங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய தலைமையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் அரசாங்கத்தையும் சர்வதேச சமூகத்தையும், ஒன்றிணைத்து உள்வாங்கி இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதாகத் தீர்மானித்துள்ளோம்.

***கேள்வி – இதற்காக புதுத் திட்டம் ஏதேனும் நீங்கள் அரசாங்கத்துக்கு முன்வைத்துள்ளீர்களா?***

பதில் - நிச்சயமாக, அரசாங்கமும் நேற்று முன்தினம் எங்களுக்கு சாதகமான பதில்களை அனுப்பி இருக்கிறது. நோர்வே அனுசரணையாளரூடாக சாதகமாக அறிவித்திருக்கிறார்கள். எங்களுடைய பிரதேசங்களில், எங்களுடைய பகுதிகளில் இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு புலிகளோடு தாங்களும் இணைந்து கொள்ள விரும்புவதாகவும், ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் அவர்களையும் உள்வாங்கி இந்த உடனடி மனிதாபிமானப் பிரச்சினைக்கு தீர்வுகாண நாங்கள் புதிய வழிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறோம். அதற்கான ஒரு கட்ட ஒழுங்கமைப்பை ஏற்படுத்தி விட்டோம். அது செம்மையாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. அடுத்த கட்டமாக தேசிய அளவில் இதை முன்னெடுப்பது சமபந்தமாக ஒரு கட்டமைப்பை நிறுவ நாங்கள் பரிசீலித்துக் கொண்டு இருக்கின்றோம்.

***கேள்வி – இதற்கான திட்டம் நீங்கள் அரசாங்கத்திடம் முன்வைத்து இருக்கின்றீர்களா?***

பதில்- இன்று நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக எங்களுடைய ஆலோசனைகளையும் நிலைப்பாடுகளையும் அறிவித்துள்ளோம். அரசாங்கமும் இதற்கு சாதகமாக ஏற்கனவே பதில் அளித்துவிட்டதால் இது வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்படும் என்று நம்புகின்றோம். நிச்சயமாக இது ஒரு தேசிய அழிவு. தெற்கிலும் அவர்களுக்கு. அழிவு ஏற்பட்டுள்ளது. எங்களுக்கு அதைவிட வித்தியாசமான பிரச்சினைகள். ஏனெனில் எங்களுடைய பிரதேசம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தால் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்திலேயே மீண்டும் ஒரு பாரிய அழிவு ஏற்பட்டு இருக்கின்றது. அதாவது மெல்ல மெல்ல மீளக் குடியேற முயன்ற மக்கள் மீளவும் அழிக்கப்பட்டிருக்கின்றார்கள். மீளச் சிதைக்கப்பட்டிருக்கின்றார்கள். தற்போது அவர்களைப் பராமரிக்கும் இடங்கள் கூட யுத்தத்தால் அழிக்கப்பட்ட பிரதேசமாக இருக்கின்றது. ஏனைய பிரதேசங்களை விட நாங்கள் இரண்டு நெருக்கடிகளைச் சந்திக்கின்றோம். என்பதை இன்றைக்கு தெளிவாக்கி இருக்கின்றோம். ஏனெனில் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து நாங்கள் கொண்டு வந்து நலன்புரி நிலையங்களில் விட்ட மக்களைக் கூடப் பராமரிக்க முடியாத நெருக்கடி அங்கே இருக்கின்றது. ஏனென்றால் பளை, பச்சிலைப்பள்ளிப் பகுதிகள் எல்லாம் யுத்தத்தால் தரைமட்டமாக்கப்பட்டு இப்போதுதான் மீள மெல்ல மெல்ல மக்களால் கட்டியெழுப்பப்பட்ட இடம். ஆயிரக்கணக்கான குடும்பங்களை, மக்களைப் பராமரிக்க போதிய வசதிகள் இல்லாமல் இருக்கின்றது. ஆகவே,. இங்கு வடக்கு கிழக்கில் யுத்தத்தில் ஏற்கனவே பாதிக்கப்பட்டு அழிவைச் சந்தித்த பிரதேசம் மீண்டும் இந்த இயற்கை அனர்த்தத்தால் மிகப்பெரிய அழிவைச் சந்தித்து இருக்கின்றது. ஆகவே இங்குள்ள கரிசனைகள் இன்னும் அதிகமாக்கப்பட வேண்டும் என்பதை இன்று நாங்கள் அவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

***கேள்வி – உதவி வழங்குவதற்காக பொருட்கள் கொண்டு வந்த வாகனங்களை விடுதலைப்புலிகள் இடைமறித்ததாக உறுதி செய்யப்படாத செய்திகள் கூறியுள்ளனவே?***

பதில்.- மிகத் தவறான செயதிகளைப் பரப்பிக்கொண்டு இருக்கின்றார்கள். நேற்றுமுன்தினமே அரசாங்கத்தில் முக்கியமான ஒருவர், விடுதலைப்புலிகள் முழு அளவில் இதற்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டு பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றார்கள்.அங்கே இது எந்தப் பிரச்சினையும் இல்லை. என்று அறிவித்துள்ளார். ஆகவே,இது வதந்தியைப்பரப்பி நெருக்கடியை உருவாக்குபவர்களது வேலையாகத்தான் இருக்க வேண்டும்.

***கேள்வி – ஹரிம் பீரிஸ் வந்தது பற்றி?***

பதில் - அவர் அரசாங்க அதிபர்களைச் சந்தித்து அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வந்திருக்கலாம். நாங்கள் சந்திக்கவில்லை.

***கேள்வி – தேசிய மட்டத்தில் அமைக்கப் படவுள்ள இந்தப் பேரழிவுகளை மீளமைப்பதற்கான செயலணிக் குழுவில் விடுதலைப் புலிகளையும் உள்ளடக்குவ தாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றதே?***

பதில் - நல்ல விடயம். தமிழர் தாயகப் பிரதேசத்தில் பெருமளவு பிரதேசத்தைக் கட்டுப்படுத்துவர்களாகவும், நிர்வகிப்பவர்களாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளனர். அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அது அரசாங்கத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று. ஆகவே, இங்கே தாயகப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்களிப்பும் ஒழுங்குபடுத்தலும் அவசியம் என்பதை உணர்ந்து இருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒழுங்குபடுத்தலுக்கு அரசாங்கமும் உள்வாங்கப்படும் அவர்களும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கலாம் இதை நாம் வரவேற்கின்றோம்.

***கேள்வி – தென்பகுதியில் இருப்பவர்கள், உங்கள் பகுதிக்குள் உதவி செய்ய விரும்புபவர்கள் எப்படி இந்த மக்களுக்கான உதவிகளைச் செய்யலாம்?***

பதில் - ஏற்கனவே கூட்டுச் செயலணிகளை உருவாக்கி செயலகங்களை அமைத்துள்ளோம். வடமராட்சி கிழக்கில், பளை, புதுக்காட்டுச் சந்தியில் பிரதான அலுவலகம் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. முல்லைத்தீவுக்கு வித்தியானந்தாக் கல்லூரியில் செயற்படுகின்றது. அவற்றை நேரடியாகச் சென்று பார்க்கலாம் அவை மிகவும் காத்திரமாகச் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. வருகின்ற எல்லா உதவிகளையும் ஒருங்கிணைத்துத் தேவையான பகுதிகளுக்கு பிரித்து அனுப்பி மக்களின் உடனடிப் பாவனைக்கு உதவக் கூடியதாக ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் அங்கே நேரடியாகச் சென்று பார்வையிட்டேன். அங்கே நுவரெலியா, கண்டி, கொழும்பில் இருந்தும் கூட உதவி நிறுவனங்கள் வந்து உதவியளிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. மிகவும் காத்திரமாகவும், சீராகவும் ஒழுங்கமைக்கப்பட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

***கேள்வி – வடக்குக் கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களுக்கு அரசாங்கமும் சர்வதேச சமூகமும் உதவி வழங்கவில்லை என்று கூறினீர்கள் இப்போது நிலைமை எப்படி?***

பதில் - கடந்த மூன்று நாட்களும் எந்த உதவியும் இல்லாமல் விடுதலைப்புலிகள் அமைப்பும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் உள்ளூர் அமைப்புக்களும் இணைந்து மக்களின் ஆதரவோடுதான் இவ்வளவு பெரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்தோம். ஊடகங்களுக்கு ஊடாக நிலைமையை சர்வதேச அளவிற்கு கொண்டு போனதன் பின்புதான் இலங்கை அரசாங்கமும், சர்வதேச நிறுவனங்களும் விழுந்தடித்து வந்து உதவியளிப்பதற்கு உறுதி அளித்து இருக்கின்றார்கள். சில வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் நேற்று முன்தினம் தொடங்கி இருக்கின்றன. மற்றைய நடவடிக்கைகளை வைத்துத்தான் முழுத் திருப்தியை எதிர்காலத்தில் நாம் தெரிவிக்க முடியும்.

***கேள்வி: அரசாங்கத்திடம் இருந்து உதவிகள் வரத் தொடங்கி விட்டனவா?***

பதில் - நேற்று முன்தினத்திலிருந்து சிறிதளவு தொடங்கி இருப்பது போலவே எனக்குத் தெரிகின்றது. இன்று நிலைமையைப் பார்த்துத்தான் இது பற்றிக் கூறமுடியும்.

***கேள்வி – சனாதிபதி செயலகத்திடம் இருந்து விடுதலைப் புலிகளுக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டடிருப்பதாக – தேசிய மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவக் குழுக்களில் விடுதலைப் புலிகளை உள்ளடக்குவது பற்றி – அப்படியொரு செய்தி வந்ததா?***

பதில் - சனாதிபதியின் ஆலோசனை வந்திருக்கிறது. தெற்கு, வடக்குக் கிழக்கு இரு பகுதிகளிலும் அனர்த்தங்கள் நடந்திருக்கிறது. எங்களுடைய தாயகப் பிரதேசத்தில் பணிகளை முன்னெடுக்க நாம் அப்படியான ஒரு கட்டமைப்பை நிறுவத் தீர்மானித்துள்ளோம். சனாதிபதியின் ஆலோசனையும் வந்துள்ளபடியால் இது பற்றி ஆலோசித்துக் கொண்டு இருக்கின்றோம். எப்படி அவர்களையும் உள்வாங்குவது என்று முடிவெடுத்த பின்பு இது பற்றிக் கூறுவோம்.

***கேள்வி – மீண்டும் நீங்கள் அரசின் மீது விசுவாசம், நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்பது அல்லவா – அப்படி வருகிறது ?***

பதில் - இப்போது விசுவாசம், விசுவாசம் இல்லை என்ற பிரச்சினையைப் பார்க்கின்ற சூழல் இல்லை. எல்லோரும் இணைந்து இந்த மனித அவலத்துக்கு விடைகாண வேண்டிய, தீர்வுகாண வேண்டிய இக்கட்டில் நிற்கின்றோம். ஆகவே, இந்த நேரத்தில் இப்படியான கேள்விகளை எழுப்புவது மனச்சாட்சிக்கு பொருத்தமில்லாமல் இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

***கேள்வி – நீங்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டு இருக்கும் குற்றச்சாட்டு ஜனதாவிமுக்தி பெரமுன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் காரணத்தாலேயே...***

பதில் - நான் உங்களிடம் மன்றாட்டமாகக் கேட்பது பெரியதொரு மனிதாபிமான நெருக்கடிக்கு நாங்கள் முகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம். பெரிய மனித அவலத்துக்கு முகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம். இந்த நேரத்தில் முரண்பாடுகள், இடைவெளிகள் சம்பந்தமான பிரச்சினைகளைக் கதைத்துக் கொண்டு இருக்காமல் இந்த அவலத்திற்கு தீர்வுகாண எல்லோரும் சேர்ந்து உழைப்பது பற்றி நீங்கள் ஆரோக்கியமான கேள்விகளை இப்பொழுது கேளுங்கள். எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகள் முடிந்த பிறகு எங்களுடைய அரசியல் பிரச்சினைகளுக்கு, அரசியல் முரண்பாடுகள் பற்றிய கேள்விகளுக்கு விடையளிக்க நான் தயாராக இருக்கின்றேன்.

***கேள்வி: உலகத்தை ஆளுவதற்கு பிரபாகரனாலோ, சந்திரிகாவாலோ, ரணிலாலோ முடியாது. இயற்கை அன்னைதான் உலகை ஆளுவதாக தெற்கிலே பேசப்படுகின்றது. அதை இச் சந்தர்ப்பத்தில் உணர்ந்து எல்லோரும் ஒன்று சேர்ந்து தேசியப் பிரச்சினையை தீர்க்கும் அளவிற்கு நீங்கள் உயர்ந்தால் என்ன?***

பதில்: நாங்கள் உயர்ந்துதான் நிற்கின்றோம். இயற்கை அன்னைதான் எல்லாவற்றையும் படைத்திருக்கின்றார். இயற்கை அன்னை எப்படியான உரிமையை எல்லோருக்கும் வழங்கிப் படைத்திருக்கின்றாரோ அவரின் நீதியான நடைமுறைகளைப் புறக்கணித்ததுதான் முரண்பாடுகளுக்குக் காரணம். ஆகவே, அதைப் பெற்றுக்கொள்ளத்தான் நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

***கேள்வி: இருபகுதிகளுக்கும் இடையில் முன்பிருந்த பிளவு , மிகவும் குறைந்து நெருக்கத்தை உருவாக்கும் என்று நினைக்கின்றீர்களா?***

பதில்: முக்கியமான கேள்வி. இந்த நேரத்தில் எல்லோரும் முரண்பாடுகளை, பிரச்சினைகளைத் தூக்காது, இந்த மனித அவலத்துக்கு, மனிதாபிமான நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றிணைந்து உழைப்பதற்குத் தயாராக இருப்பதாகக் கூறுகிறார்கள். நிச்சயமாக அப்படியான நல்லெண்ண நடவடிக்கையோடு பாதிக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட மக்களோடு கைகோர்ப்பார்களேயானால் எதிர்காலத்தில் பல மாற்றங்கள் நிச்சயமாக உருவாகும்.

***கேள்வி: மேற்கு நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவுவது?***

பதில்: பலர் வெளிநாட்டில் உள்ள எமது அமைப்புக் கிளைகள் ஊடாக உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளார்கள். புனர்வாழ்வுக்கழகம் உலகளாவிய ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தொண்டர் நிறுவனம் என்ற ரீதியில் புலம் பெயர்ந்த மக்களது ஆதரவு அதற்கூடாகவும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அதற்கூடாக உதவுவார்களேயானால் பிரயோசனமாக இருக்கும்.

(லோ.தீ)

-நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளோருக்கு-

# அத்தியாவசியப் பொருட்கள் துரித கதியில் வழங்குவதில் செயலணிக்குழு தீவிரம்

முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் வாழும் மக்களுக்குரிய உடனடி அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதில் செயலணிக் குழு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

உதவி வழங்கும் நிறுவனங்களூடாக கிடைக்கப்பெற்ற பொருட்களை துரித கதியில் மக்களுக்குக் கொடுப்பதில் செய லணிக்குழுவின் முள்ளியவளைச் செயலகம் ஈடுபட்டு வருகின்றது. உடனடியாகத் தேவை களைப் பூர்த்தி செய்யவேண்டி பொருட்களை ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு நலன்புரி நிலையங்களுக்கும் வழங்கி வருகின்றனர்.

முள்ளியவளையில் நிவாரணப்பொருட்கள் சேகரிப்பதற்கென அமைக்கப்பட்ட கட்டடத் திலிருந்து நலன்புரி நிலையங்களுக்குப் பொருட்கள் செயலணிகுழுவின் ஒழுங்கு படுத்தலில் அனுப்பப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கையில் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் திட்ட மிடல் செயலக பிரதிப் பணிப்பாளர் மாறன், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் செ.முகுந்தன், வன்னிமாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் கனகரட்ணம் ஆகியோரும் இந்த நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் இந்த உதவிப் பொருட்களை பகிர்ந்தளிப்பதில் போராளிகள், பொதுமக்கள் வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்துள்ள தொண்டர்கள் ஆகியோர் மிகவும் உற்சாகமாகச் செயற்பட்டு வருவதும் குறிப் பிடத்தக்கது. (கு,ச)

## திருத்தம்

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக் களுக்கான நிவாரணப்பணிகளை மேற் கொண்டுவரும் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் நிதியுதவிசெய்யுமாறு புலம்பெயர்ந்துவாழும் 'மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் குறித்த நேற் றைய செய்தியில் கிளிநொச்சி இலங்கை வங்கிக்கணக்கு இலக்கம் 4558 என்பதற்குப் பதிலாக 4538 என தவறாக இடம்பெற்று விட்டது. நிதியுதவி செய்ய முன் வருவோர் கிளிநொச்சி இலங்கைவங்கி 4558 மற்றும் கிளிநொச்சி மக்கள் வங்கி 2945 இலக்கங் களைப் பயன்படுத்தவும்.

## நோர்வே...

தனித்தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தி யுள்ளனர்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத் தில் ஆரம்பமான இலங்கைக்கான நேர்வேத்தூதுவர் கான்ஸ்பிறஸ்கர் அவர் களுடனான சந்திப்பு 11.00 மணிக்கு நிறை வடைந்தது. இச் சந்திப்பில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், சமாதானச் செயலகப்பணிப்பாளர் புலித் தேவன், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர். அடுத்து இரண்டாவது சந்திப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயல கத்தில் ஐ.நா. அமைப்புப் பிரதிநிதிகள், உதவிவழங்கும் நாட்டுப்பிரதி நிதிகள் ஆகி யோருக்கும், அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இடையில் காலை 11.10 மணிக்கு ஆரம்ப மாகிப் பிற்பகல் 2.45 மணி வரை நீடித்தது.

இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.பொரு ளாதார ஆலோசகர் ஜோஜ் மகேஸ்வரன், திட்டமிடல் செயலகப்பணிப்பாளர் தூயவன் உட்பட்டவர்கள் கலந்து கொண்டனர் இதேவேளை ஐ.நா. அமைப்புப்பிரதிநிதிகள் உதவி வழங்கும் நாட்டுப் பிரதிநிதிகள் சார்பாக 20 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (லோ.தீ)

## யாழ்.இல்...

அரசின் போக்கிற்கான எதிர்ப்பை நேற்றுப் பாதிக்கப்பட்ட மக்கள் வெளிப் படுத்தினர்.

சிறிலங்கா பிரதமர் ராஜபக்ஷ அமைச்சர் பெர்னாண்டோபுள்ளேயும் அடங்கிய குழுவினர் மந்திகை நலன்புரி நிலையத்திற்கு விஜயம் செய்தனர். இதுவரை அரச நிவா ரணங்களே துமற்றிருக்கும் மேற்படி மக்கள் இதனை எதிர்த்து அவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்தனர். இராணுவத்தின் பலத்த பாதுகாப்புடனேயே இவர்கள் அங்கு வந்திருந்த போதும், மக்கள் அதனையும் உதாசீனம் செய்து அவர்களிற்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். தாங்கள் பழைய சோற் றையே உண்டு வாழ்வா சாவா என்று இருக் கும்போது அரசியல் செய்வதற்காக இங்கு வந்தீர்கள் எனவும், முதலில் உணவை அனுப்புங்கள். பிறகு வாருங்கள் என வந்தவர் களின் மீது பழம்சோற்றைக் கொட்டி தங்கள் வெறுப்பை வெளிப்படுத்தினர். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கான உதவிகளை வழங்காமல் அரசு மெத்தனம் காட்டுவதோடு, தமிழர்கள் அனுப்பும் உதவிகளையும் இராணுவமும். சிங்களக்காடையர்களும் பறிக்க முயல் வதையுமிட்டும் மக்களிடையே ஏற்பட்ட கோபமே இவ்வாறு ஆத்திரமாக வெளிப் பட்டுள்ளது. மக்கள் விரட்டியடித்ததை அடுத்து அங்கிருந்து சென்ற மகிந்தராஜபக்ஷ குழுவினரை வரணியில் வைத்து ஊர்திகளில் சென்று இளைஞர் குழு ஒன்று விரட்டியது. அப்போது அங்கிருந்து வேகமாக ஓடிய ராஜபக்ஷ குழுவினர் வரணி சிறிலங்கா இரா ணுவமுகாமிற்குள் நுழைந்தனர். அங்கிருந்து அவர்களை வெளியேறிச் செல்லாது மக்கள் பார்த்து நின்றனர். இதன் பின் பலாலியி லிருந்து உலங்குவானூர்தி ஒன்று வரணி இராணுவமுகாமிற்கு வந்து மகிந்தராஜபக்ஷ வையும் பெர்னாண்டோபுள்ளேயையும் ஏற்றிச்சென்றது. இதே போல் ஈ.பி.டி.பி யைச் சேர்ந்தவர்கள் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச உள்ளிட்ட ஜே.வி.பி யினரை உதவிகளை மக்களுக்கு வழங்குகின்ற போர் வையில் நேற்று நெல்லியடிக்கு அழைத்து வந்தபோது அவர்களையும் மக்கள் விரட் டியடித்தனர்.

## நிவாரணப்...

கு. தூயவன், செல்வின், கிழக்கு புனர் வாழ்வு அமைச்சர், முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகு தாவுத், சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், திணைக்களங்களின் தலைவர்கள், உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், லயன்ஸ் கழகம், இளைஞர் அமைப்புக்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண் டனர்.

இதன்போது அமைக்கப்பட்ட இச்செயல ணிக்குழுவுக்கு புலிகளின் திட்டமிடல் பணியகத்தின் சார்பில் தயாமோகன் பொறுப்பாகச் செயற்படுவார். இப்பணிக ளைக் கவனிப்பதற்காக செயலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இச்செயலகம் ஊடாகவே நிவாரணப் பணிகள் முன்னெடுக் கப்படும். திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் இவ்வாறான செயலகங் கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

## தேசியத்தலைவரின்...

**இவ் அனர்த்தத்தினால் முல்லைத் தீவுப் பகுதியில் அழிவடைந்த குடி யிருப்புக்களின் தொகையினை அண் ணளவாகக் கூறமுடியுமா?**

முல்லை நகரை அண்டிய பகுதியில் மட்டும் அதாவது வட்டுவாகலில் இருந்து தீர்த்தக்கரைவரையிலான சுமார் ஆறு கிலோ மீற்றர் நீளமுள்ள கரையோரக் கிரா மங்களிலுள்ள 15000 மக்கள் தொகையில் 3000 பேர் சாவடைந்துள்ளனர்.

அதாவது சுமார் ஆறு கிலோ மீற்றர் நீளமும் கரையோரத்திலிருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் அகலமுள்ள பிரதேசத்துக்குள் இவ் அனர்த்தம் ஏற்பட்டது.

**மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட் டுக்கொண்டிருக்கும் அதேவேளை, வேறு எவ்வாறான பணிகளை முதன் மையாகக் கொண்டு செயற்பட்டு வருகிறீர்கள்?**

அதாவது மீட்புப்'பணி ஒருபுறம் நடை பெற்றுக்கொண்டிருக்கும்இதேவேளை நலன் புரிநிலையங்களில் குடியமர்த்தப்பட்ட மக்க ளுக்கும் எதுவிதமான தொற்று நோய்களும் ஏற்படாதவாறு அதற்குரிய சுகாதார செயற் பாடுகளில் ஈடுபட்டு வருவதோடு உணவு வழங்குதல் ஏனைய அத்தியாவசிய தேவைக ளான உடை போன்றவற்றை வழங்கி வருகின்றோம். இந்தச் செயற்பாட்டுக்காக களமுனைத்தளபதிகள், நிர்வாக ரீதியாக செயற்படுகின்ற பொறுப்பாளர்கள் உட்பட சகல ஆளணிகளையும் செயற்படுமாறு தமிழீழ தேசியத்தலைவர் கூறியுள்ளார். அதற்கிணங்க சகலரும் இச்செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். அத் தோடு எமது சகல வளங்களையும் பயன் படுத்தியே இந்நடவடிக்கையில் ஈடுபட் டுள்ளோம்.

அத்தோடு அனர்த்தத்திற்குள்ளான முல் லைத்தீவு நகரப் பகுதிக்கு இன்று மின் வழங்கலுக்குரிய ஏற்பாடுகளை மேற் கொண்டு மின் விநியோகத்தினை ஆரம்பித் துள்ளோம். தொடர்ந்து 200 மீற்றருக்கு ஓர் இடத்தில் நீர்த் தொட்டிகளை வைத்து குடிநீர் வழங்க ஏற்பாடுகளைத் தமிழர் புனர்வாழ் வுக்கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். அடுத்து வரும் ஐந்தாம் திகதி வரை சேவை யில் ஈடுபட்டுள்ள சுகாதார அதிகாரிகள் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காலவரையறை விதித்துள்ளார் கள். அதன் பின்னர் பாதிக்கப்பட்ட பகுதிகள் தவிர்ந்த அதனை அண்டிய ஏனைய பகுதி களில் மக்களை மீளக் குடியமர்த்த வுள்ளோம்.

**இது இவ்வாறிருக்க மீட்புப்பணிக் கும் ஏனைய செயற்பாட்டுக்கும் அரச தரப்பில் உதவிகள் எந்தளவில் கிடைக் கப் பெறுகின்றது?**

அரச உதவிகள் பற்றி அரச தர அதிகா ரிகளின் கருத்தை நோக்கினால் கடந்த இரு நாட்களுக்கு முன்பு ஓர் அரச அதிகாரி கூறினார்.இங்கு தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்தித் தரப்பட்டால் மீட்புப்பணிக்கான கனரக வாகனங்களை அனுப்புவதாக . அதற்கிணங்க இப்பகுதியில் செய்மதித் தொலைபேசிகளைப் பயன்படுத்திக்கொள் ளலாம் என அனுமதி கொடுத்துள்ளோம். ஆனால் அவர்கள் கனரக வாகனங்களையும் வழங்கவில்லை.

அதைத் தொடர்ந்து நேற்றைய தினம் முள்ளியவளையில் முல்லை மாவட்ட அரச அதிபரின் தலைமையில் நடைபெற்ற ஒன்று கூடலிலும் இதனை வலியுறுத்தினேன். அதிலும் இவ் ஏற்பாடுகளை உடனடியாகச் செய்வதாக உறுதியாக்கப்பட்டது. ஆனால் இன்று ஒரு வாகனம் மட்டும் வழங்க முடி யும் எனக் கூறினார்கள். அது கூட இன்ன மும் வந்து சேரவில்லை. அதுவும் சாதாரண பாரம் தூக்கி வாகனமே தர முடியும் எனக் கூறுகின்றனர்.ஆனால் கண்டெடுத்த உடல்களை எரியூட்டுவதற்கு எரிபொரு ளைக் கொண்டு செல்லக்கூட மிக முக்கிய பணியில் ஈடுபடும் உழவு இயந்திரங்களை வைத்தே பயன்படுத்துகிறோம். இந்த நிலையில் அரச வளங்கள் பயன்படுத்தப்படு வதாக அரச அதிகாரிகள் யாரும் கூறினால் அது இன்றுவரை முற்றிலும் தவறான தகவ லாகவே இருக்கும்.

**இவ் அனர்த்தத்தினால் கடற்புலிக ளுக்கு பாரிய உயிரிழப்பும், தளபாட இழப்பும் ஏற்பட்டதாக சிறிலங்காவில் பரவலாகப் பேசப்படுகிறது. இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

கடற்புலிகளில் இவ்வனர்த்தத்தினால் மூன்று பேர்வரையே சாவடைந்துள்ளனர். ஒன்று கடற்புலிகளின் துணைப்படை வீரர் கப்டன் பெற்றோல் ஐயா, என்பவர்.இவர் நீண்டகாலமாக கடற்புலிகளுக்கு பெரும் பங்காற்றியவர். அடுத்து கடற்கரும்புலி மேஜர் தர்மேந்திரா. அடுத்து தர்மேந்திரா வுடன் துணைக்கு நின்ற ஒரு போராளி ஆகிய மூவருமே இதில் சாவடைந்துள்ளனர்.

ஆனால் அரச படைகள் நாகர்கோவில் தொடக்கம் பலாலி வரைக்கும் ஐம்பது மீற்றருக்கு ஒரு காவலரண் என அமைத் திருந்தனர். அதிலும் தற்காலத்தில் சந்தி ரிகா அம்மையாரின் போர்க்குணம் தலை தூக்கிய பேச்சுக்களுக்குப் பின்னர் இதனை மேலும் விரிவுபடுத்தினார்கள். இதனாலேயே அவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.

நாங்கள் அரச படைகளின் இழப்பைப் பற்றிக் கூறிக்கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் போரில் அழிவதென்பது குறிப் பிடக்கூடியதொன்று. ஆனால் இந்த இயற்கை அனர்த்தத்தில் அழிவடைவதைப் பெரிதுபடுத்த நாங்கள் விரும்பவில்லை. இது மனிதநேயமற்ற செயலாகும்.

**மீண்டும் இம்மக்களுக்கு மறுவாழ் வளிப்பது தொடர்பான திட்டங்கள் பற்றிக் கூறமுடியுமா?**

வடக்குக் கிழக்கில் ஏற்பட்டுள்ள இவ்வழிவிலிருந்து பொருளாதார ரீதியாக உதவியளிக்கவும், தேவையான நிதி பற்றிய அண்ணளவான மதிப்பீடு ஒன்று தலை வரால் மதிப்பிடப்பட்டது.இதற்கு குறைந் தளவாக ஏறத்தாழ 2500 கோடி ரூபா தேவைப்படுகிறது.

எனவே இந்தளவு பெரிய தொகையை வழங்கக் கூடிய நிலையில் சிறிலங்கா அர சாங்கம் இல்லை. இதற்குக் கண்டிப்பாக வெளிநாடுகளே உதவவேண்டும். ஆனால் இதனை வெளிநாடுகள் சிறிலங்கா அரசாங் கத்திற்கூடாக வழங்குமானால் அந்நிதி நிச்சய மாக தமிழர் தாயகத்திற்கு வந்தடையாது. அவர்கள் போரின் இழப்பை நிவர்த்தி செய்யப் பயன்படுத்துவார்களே தவிர மக்க ளின் குறைகளை நிவர்த்தி செய்ய முன் வரமாட்டார்கள்.

முல்லைத்தீவில் உள்ளவர்களுக்கு சாதாரணமாக மூன்றுபேருக்கு ஒரு படகு வீதம் வழங்கித் தொழில் வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுக்கவே சாதாரணமாக ஒன்பதுகோடி தேவைப்படுகிறது. ஆனால் இது கூட விடுதலைப் புலிகளால் சாத்தியப் படாததொன்று. ஆனால் முகாம்களில் உள்ளவர்களை ஏறத்தாழ மூன்று மாத காலம் பராமரிக்கும் சக்தியே எம்மிடமுண்டு. அதனையே இப்பொழுது செய்துவரு கிறோம். இதற்குத் தற்போது புலம் பெயர்ந்த மக்கள் சில உதவிகளைச் செய்து வருகிறார்கள். இது எமது சுமையை ஓரளவு குறைப்பதாக உள்ளது. ஆனால் இது வரைக்கும் எந்தவொரு வெளிநாடுகளும் எந்தவொரு உதவிகளையும் செய்ய முன்வரவில்லை.

**இவ்வனர்த்தத்தை அடுத்து நீங்கள் கூற விரும்புவது என்ன?**

அதாவது மீண்டும் இந்த சுனாமி போன்ற அலைத் தாக்கத்தையோ அல்லது இது போன்ற வேறு அனர்த்தங்களோ தாக்காத வகையில் மக்கள் தமது வாழ்விடங்களை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது போன்ற ஆலோசனைகளை அந்தத்துறை சார்ந்த வல்லுநர்கள் வந்து வழிகாட்டவேண்டும். அடுத்ததாக இங்கு வாழ்ந்த மக்கள் கடலிலிருந்து 25 யார் தொலைவிலேயே குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்தனர். இதற்குக்காரணம் அவர் களிடம் காணி இல்லாமையே. ஆனால் இங்கு தலைமுறை தலைமுறையாக இங்கில்லாத பலரின் பெயர்களில் காணிகள் பதியப் பட்டுள்ளன. இதனால் மக்களுக்கு இருப் பிடம் அமைக்கக் காணியில்லை. ஆனால் கடற்கரையிலிருந்து ஆகக் குறைந்தது 200 மீற்றருக்கு அப்பால் குடியிருப்பு இருக்கு மானால் இவ்வாறான அனர்த்தத்தின் போதான தாக்கம் குறைவாக இருக் கும்.எனவே மக்களின் நலன் கருதி உள் நாட்டில் உரியவர்கள் இல்லாத காணிகளை இம்மக்களுக்குப் பகிர்ந்தளிக்க அவர்கள் முன்வரவேண்டும். அதிலும் குறிப்பாக தேவாலயம், இந்து ஆலயம் போன்ற வற்றுக்கு பெரியளவில் நிலங்கள் உள்ளன. அவற்றில் ஒரு பகுதியேனும் குடியிருப்புக் களை அமைப்பதற்கு வழங்க முன்வரவேண் டும். ஏனென்றால் இவ்வாறான தாக்கம் எப்பொழுது ஏற்படுமெனக் கூறமுடியாது.

நேற்றும் கூட மீண்டுமொரு தாக்கம் ஏற்படலாமென அச்சுறுத்தல் ஊடகங்க ளினூடாகத் தெரிவிக்கப்பட்டன. எனவே பெருந்தன்மையோடு பயன்படுத்தாதுள்ள காணிகளின் ஒவ்வொரு பகுதிகளை இம்மக் களுக்கு வழங்கி உதவினால் மக்களைப் பாதுகாக்க முடியும். அடுத்து வேறு நாடுகளைப் போன்று கடற்கரைகளில் அலை தடுப்புச் சுவர்கள் அமைக்கப் படுமானால் இழப்பைத் தடுக்கமுடியும். அதாவது பருத்தித்துறைக்கு அடுத்துள்ள பகுதிகளில் கடற்கரையிலிருந்து 75 மீற்ற ருக்கு அப்பால் முருகைக்கல் தடைகளும், கரையோரத்தில் வீதியின் சுவர்ப் பகுதியும் அமைந்திருந்ததினால் வேகம் குறைக் கப்பட்ட பின்பே குடியிருப்பைத் தாக் கியது.இவ்வாறு தடுப்புச் சுவர்களை இங்கும் அமைக்க வெளிநாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த செல்வந்தர்கள் உதவினால் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

**இவ்வனர்த்தத்தினால் ஏற்பட்ட சொத்திழப்புக்கள் பற்றிக் கூற முடி யுமா?**

சொத்தழிவு பற்றி தற்போது அள விடவே முடியாது. ஏனெனில் அனைத்துப் படகுகள் உட்பட,தொழில் உபகரணங்கள் முற்றாக அழிந்துள்ளதோடு வீடுகள் ஏனைய பொருட்கள், வியாபார நிலையங்கள், விவசாயப் பயிர்கள் என அளவிடமுடியாத அளவு அழிவு ஏற்பட்டுள்ளன.

**மீள முடியாத உளத்தாக்கத்தில் உள்ள மக்களை மீண்டும் தொழி லில் ஈடுபடுத்துவது தொடர்பான திட்டங்கள் ஏதாவது உண்டா?**

மக்களுடன் இணைந்து எமது தேவைக்காக மீன்பிடித்துக்கொண்டிருந்த எமது உபகரணங்களும் அழிந்துவிட்டன. எனவே அவற்றை மீளப்பெற்று சிறியள விலான மீன்பிடியில் நாம் ஈடுபடவுள்ளோம். எனவே எம்மைத் தொடர்ந்து மக்களும் மீண் டும் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது